# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு. குலாம் முஹம்மது**

Volume-13
Issue-11

நவம்பர்-2020 (ரபியுல் அவ்வல்-1442)

விலை ரூ. **20/-**




## அஜர்பைஜான் மீதான அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போர்

### பின்னணி என்ன?

## NIA யின் நாடகம்





## இந்திய பிரிவினையின் முதல் மூளை சாவர்க்கர்

بسم الله الرحمن الرحيم

"தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்
(அல்குர்ஆன் - 9:13)"


அஜர்பைஜான் மீதான அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போர் - 4
அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போரில் ரஷ்யாவின் பங்கு..! - 9
கிறிஸ்தவ தீவிரவாதிகளின் கோட்டையாகும் அர்மீனியா - 11
ரஷ்யாவின் அதிர்ச்சியும் (S-300 அழிவு) துருக்கி ட்ரோன்களின் வல்லாண்மையும் - 13
அஜர்பைஜான் எதிர்கட்சிகளின் கூட்டறிக்கை - 14
முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு நடத்தப்படும் கருத்து சுதந்திர போர் பலியாகும் முஸ்லிம்கள் - 15
NIA-யின் நாடகம் - 18
தலிபான்களுடனான அமைதி ஒப்பந்தம் இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்காது - 23
தலையங்கம் - 24
இந்திய பிரிவினையின் முதல் மூளை சாவர்க்கர் - 26
உலமாக்கள், உமராக்கள் சமூகத்தின் இரு கண்கள் - 35
சிலுவைப் போர்கள் 2.0 - 37
அப்துல் கலாம் விருது..! - 39
அப்பாவி என 23 ஆண்டுக்கு பிறகு விடுதலையாகும் முஸ்லிம்கள்..! - 40
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 44
இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்..? - 48
கஷ்மீர் மக்கள் ஏன் போராடுகின்றார்கள்..? - 52
மருத்துவம் - 59
சவூதி அரசு புனித பிம்பம் உடைகிறது..! - 62
பாசிசத்தின் பிடியில் இந்தியா - 65



நவம்பர்-2020 ரபியுல் அவ்வல்-1442

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.

**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



# அஜர்பைஜான் மீதான அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போர்



சோவியத் ரஷ்யா (USSR) என்றழைக்கப் பட்ட முன்னாள் கம்யூனிச நாட்டின் மேற்கு பகுதியான காகசஸ் (Caucasus) மலைத் தொடரின் தெற்கு பகுதியில் அமைந்திருக்கும் அண்டை நாடு களான ஆர்மீனியாவும், அஜர் பைஜானும் செப்டம்பர் – 27 – 2020 முதல் நேரடியாக போரிட்டு வருகின்றன.

பிற நாடுகளை போல அர்மீனி யாவும், அஜர்பைஜானும் 1991–ல் சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுவித்துக் கொண்ட நாடுகள்.

அர்மீனியா தீவிர கிறிஸ்தவ நாடாகவும், அஜர்பைஜான் ஷியா முஸ்லிம் நாடாகயிருந் தாலும் மேற்கத்திய பண்பாட்டை பின் பற்றும் நாடாக இருந்து வருகிறது.

இவர்களுக்கிடையே 1991–1994 வரை கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் போர் நடந்தது. இதற்கு காரணம் அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு மனோபாவம்.

> “இவர்களின் சொத்துகள், விவசாய நிலங்கள், இன்னும் பிற ஜீவாதாரங்கள், ஆவண ஆதாரங்கள் மற்றும் அம்மண்ணுடனான நேச பாச பிணைப்புகளின் நினைவுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் குடியுரிமையை மீட்டுத் தர வேண்டியது அஜர் பைஜான் ராணுவத்தின் கடமையாகும்.”

பின்பு ஏற்பட்ட தற்காலிக போர் நிறுத்தத்தின் முடிவில் அஜ ர்பைஜான் தன் நிலப் பகுதியில் 20 சதவீதத்தை இழந்துவிட்டது.

அஜர்பைஜான் இழந்த பகுதியில் நகோர்னோ – கரபாக் (Nagorno - Karabakh) என்ற மலைப் பகுதி பிரச்சனைக்குரிய தாகும். இங்கு வாழும் அர்மீனிய இனத்தை சேர்ந்த அர்மீனிய அப்போஸ் தல கிறிஸ்தவர்கள் (Armenian Apostolic Church) கத் தோலிக்க மற்றும் புரட்டஸ் டண்ட்கள் போலல்லாமல் தங்கள் கிறிஸ்துமஸை ஜனவரி – 06–ல் கொண்டாடுபவர்கள். இவர்கள் கிழக்கு ஆர்தோடாக்ஸ் கிறிஸ்தவத்தின் ஒரு பிரிவினர்.

மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி அதிக எண்ணிக்கையில் இல்லை. இப்பகுதியில் இன்றைய கணக்கின்படி பார்த்தாலும் வெறும் 1,50,000 பேர் மட்டுமே இருக்கிறார்கள்.

இவர்களின் சிலுவை மத வெறியும், துரோகமுமே 1991 – 1994 வரையிலான போருக்குக் காரணம். இவர்கள் தங்கள் கிறிஸ்துவ மதவாதத்தை தூக்கிப் பிடித்ததின் காரணமே கடந்த கால மூன்று வருட போராகும்.

இப்போரில் நகோர்னோ – கரபாக் பகுதி யோடு, அதை சுற்றியுள்ள பிற பகுதிகளையும் சேர்த்து அர்மீனியா ஆக்கிர மித்துக் கொண்டது.

இப்போரில் அஜர்பைஜானால் பறிகொடுக்கப்பட்ட பகுதியில் வாழ்ந்த குறிப்பிட்ட தொகையிலான முஸ்லிம்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு கோஜாலி (Khojaly Genocide) இனப்படுகொலை என வரலாற்றில் பெயர். மேலும் அச்சுறுத்தப்பட்டு, கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட முஸ்லிம்கள் 10 லட்சம் பேர் விரட்டப்பட்டனர். உள் நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு அஜர்பைஜானின் பாதுகாக்கப்பட்ட பகுதியில் பழைய நினைவுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின்சொத்துகள், விவசாயநிலங்கள், இன்னும் பிறஜீவாதாரங்கள், ஆவண ஆதாரங்கள் மற்றும் அம்மண்ணுடனான நேச பாச பிணைப்புகளின் நிவைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் குடியுரிமையை மீட்டுத் தர வேண்டியது அஜர்பைஜான் ராணுவத்தின் கடமையாகும்.

> “இப்போர் அர்மீனியாவின் நிலப்பகுதியில் நடக்கவில்லை. மாறாக அஜர்பைஜானிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் தான் அர்மீனிய ராணுவம் மற்றும் கிறிஸ்தவ தீவிரவாதிகளுக்கு எதிராக அஜர்பைஜான் போர் புரிந்து வருகிறது. நகோர்னோ – கரபாக் மற்றும் இத்துடன் அஜர்பைஜானின் பிற பகுதிகளும் உள்ளடங்கியது இது.”

1994–ல் அமெரிக்கா, பிரான்ஸ் தலைமையிலான 11 நாடுகளின் கூட்டமைப்பு இப்போரை தற்காலிகமாக நிறுத்தியது. தற்காலிக போர் நிறுத்தத்திற்கு கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் எடுத்துக் கொண்டனநடுநிலையோடு நடப்பதாக விளம்பரபடுத்தி கொள்ளும் கிறிஸ்தவ நாடுகள் .

இது ஏனெனில், கிறிஸ்தவ மதவாத பிடிப்புதான் காரணம். பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் வரை வேடிக்கை பார்த்துவிட்டு போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

போர் நிறுத்தத்திற்கு முயன்ற அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா தலைமையிலான 11 நாடுகள் அடங்கிய கூட்டமைப்பிற்கு மின்ஸ்க் நாடுகள் (Minsk Group) என பெயர். இதில் அன்றைய



மதசார்பற்ற துருக்கியை (அன்று தன்னை முஸ்லிம் என காட்டிக்கொள்ள விரும்பாத)தவிர மற்ற நாடுகள் கிறிஸ்துவ நாடுகளாகும்.

அர்மீனியா ஆக்கிரமித்த பகுதி அஜர் பைஜானுக்கு சொந்தமானது என இவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஐ.நா.வும் ஏற்றுக்கொண் டது. ஆனாலும் கடந்த 26 வருடங்களில் அர்மீனியா விடமிருந்து ஆக்கிரமிப்பு பகுதியை மீட்டு, அஜர்பைஜானுடன் இணைக்க எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுவரையான ஐ.நா சபையின் 6 தீர்மானங் களையும் ஆர்மீனியா மதிக்கவில்லை. அவைகள் கட்டுப்படுத்த தவறிவிட்டன. அஜர்பைஜானின் சாத்வீகமான அணுகுமுறையை துச்சமாக மதிப் பதை வெள்ளை கிறிஸ்தவர்களின் பிடியிலும், ஆதிக்கத்திலும் இருக்கும் பல்வேறு சர்வதேச அமைப்புகள் வழக்கமாக ஏமாற்றிக் கொண்டே இருந்தன. இதன் தைரியத்தில் ஆக்கிரமிப்பு பகுதியின் போர் நிறுத்த எல்லையிலிருந்து அர்மீனியா அடிக்கடி தொடர் தாக்குதலை நடத்தி வந்தது.

இம்முறை முழு தயாரிப்பு களை செய்து தாக்குதல் நடத்த பிறிதொரு காரணத்தை சாதக மாக்கி கொள்ள ஆர்மீனியா முனைந்ததை சர்வதேச நிகழ்வு களைக் கொண்டு அறிந்து கொள் ளலாம். அது என்னவெனில்,

பெட்ரோல் தேவைக்காக அஜர்பைஜானை சார்ந்தும், இழந்த பகுதியை மீட்க அது மேற் கொள்ளும் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் நாடான துருக்கி, இவ்வருடத்தின் முதல் சில மாதங்களில் தனது கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதியில் பெட்ரோலிய வள இருப்பை கண்டுபிடித்து அதை எடுப்பதற் கான பூர்வாங்க வேலைகளை துவங்கியிருந்தது. இதனைதுருக்கி யின் அண்டை நாடான கிரீஸ் என்ற கிறிஸ்தவ நாடு கடுமையாக எதிர்த்ததோடு மற்ற வெள்ளை மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளை அணிதிரட்டி பிரான்ஸ் ஆதரவுடன் ராணுவ நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. இதனை உறுதியாக எதிர் கொண்டது துருக்கி. கிரீசுக்கு கண்மூடித்தன மாக ஆதரிக்கும் மேற்கத்திய கிறிஸ்தவ ஐரோப் பாவை துருக்கி எதிர்கொண்டது .

> இம்முறை போல் கடந்த 1991–ல் நடந்த போரில் அஜர்பைஜான் ஆயுத பலத்துடன் இருந்திருந்தால் கிறிஸ்தவ ஆதிக்க நாடுகளின் நடிப்பு அப்பொழுதும் அரங்கேறி இருக்கும். கடந்த 1991 – 1994 ல் ஆர்மீனியாவின் கிறிஸ்தவ விரிவாக்க ஆக்கிரமிப்பு போரில் போர் நிறுத்தத்திற்கு கிட்டத்தட்ட மூன்று வருடகால அவகாசம் கொடுத்தவர்கள் செப்டம்பர் – 27 – 2020 போரில் அஜர்பைஜானின் கை ஓங்கியதை பார்த்து இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்திற்கு மிரட்டல் விடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேட்டோ (NATO) உறுப்பினராக இருந்தும் சமாதானநடவடிக்கை, உண்மைஅறிதல்போன்ற காரியங்களில் இறங்காமல் நேட்டோ நாடான துருக்கியை மிரட்ட தொடங்கியது பிரான்ஸ். இதற்கு எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட் ( UAE) போன்ற முஸ்லிம் எட்டப்பன் நாடுகள் பிரான்சை போன்று கிரீசுக்கு உதவின. இப்பிரச்சனையில் அஜர்பைஜான் நட்பு நாடான துருக்கி உழன்றுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் அஜர்பைஜான். மீதான ஆக்கிரமிப்பை விரிவாக்கிடலாம் என்ற எண்ணத்தில் சில தந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டது ஆர்மீனியா .

ஜூலை ,2020, 12 முதல் 14, வரை டோவுஸ் (Tovuz) என்ற அசர்பைஜான் மாவட்டத்தை (இது பிரச்னை அல்லாத எல்லை யில் அமைந்திருந்தும்) கடுமை யாக தாக்கியது. இத்தாக்குதலில் அஜர் பைஜானின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் பலரும் உயிரிழந்தது போர் மிரட்டலாக உருவெடுத்தது.

மேலும் இம்மாவட்டத்தின் வழியே ரஷ்யா, ஜார்ஜியா மற்றும் துருக்கிக்கு செல்லும் 3 முக்கிய பெட்ரோலிய எரிவாயு எடுத்துச் செல்லும் தொலைதூர குழாய்களில் ஒன்று பாகு– டிப்லிசி – சிஹன் (Baku-Tbilisi-Ceyhan ) பைப்லைன் ஆகும். இதை தாக்கி அஜர் பைஜானை பணிய வைக்க முயற்சித்து உள்ளது. இது அஜர்பைஜானின் முக்கிய பொருளாதார உயிர்நாடி. இதிலிருந்து பெட்ரோலும் எரி வாயும் துருக்கியின் சிஹன் துறை முகத்திற்கு சென்று அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும்,



இஸ்ரேலுக்கும் கப்பல் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் ஆபத்தை உணர்ந்த துருக்கி சுன்னத் ஜமாத்தை பின்பற்றினாலும் ஷியா அஜர்பைஜானுக்கு நீதியின் பிரகாரம் ஆதரவை தெரிவித்தது.

கிழக்கு மத்திய தரைக்கடலில் பெட்ரோலிய வளத்தில் கவனமும் அக்கறையும் செலுத்தும் துருக்கி, கிரீஸ் நாட்டால் ஏற்படுத்தப்படும் பிரச்சனையில் காலத்தை கழிக்கும் துருக்கி அஜர்பைஜான் பிரச்சனையில் கவனம் செலுத்த முடியாது என்ற தைரியத்தில் அர்மீனியா (துருக்கியின் வலிமையை , சுய சார்பை உடைக்க நினைத்த வெள்ளை கிறிஸ்தவ நாடுகளின் திட்டத்தின் ஒரு பகுதியாக அர்மீனியா தூண்டி விட பட்டிருக்கலாம்) அஜர்பைஜானை தாக்கியது என்பதை மேற்கண்ட சர்வதேச அரசியல் சதுரங்க ஆட்டத்தை கொண்டு புரிந்துக் கொள்ளலாம் .

இதற்கிடையில் செப்டம்பர் மாத மூன்றாம் வாரத்தில் நேட்டோ அமைப்பின் தலைமையான அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரி கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதியில் துருக்கி அதிபரை சந்தித்தார். பெட்ரோலிய நடவடிக்கையை நிறுத்துமாறும், துருக்கியின் பேச்சுவார்த்தை விருப்பத்திற்கு கிரீஸ் இறங்கி வந்திருப்பதால் பேச்சுவார்த்தைக்கு தயாராகுமாறு கேட்டுக் கொண்டார் . துருக்கியும் தனது பெட்ரோலிய தூர்வாரும் பணியை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது. கிரீசுக்கு கொண்டாட்டம்.

இந்நிலையில் முழு கவனமும் தன் பொருளாதாரத்திற்கும், பிராந்திய அமைதிக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் அர்மீனியா வை கட்டுப்படுத்திட வேண்டிய பணிச்சுமைதுருக்கிக்கு இருந்தது. தனது சக ஐரோப்பிய நாடுகளுக்கு பெட்ரோலிய ஏற்றுமதி செய்ய வேண்டிய பொறுப்பில் அஜர்பைஜானுடன், வாய்ப்புகளை அனுபவிக்கும் ஜார்ஜியா மற்றும் துருக்கி ஆகியவற்றுக்கும் உள்ளதால் களம் காண வேண்டிய நிர்பந்தம்.

ஆர்மீனியாவின் இத்தகைய கடும்போக்கு நடவடிக்கைக்கு பின்னால் இருக்கும் நாடுகளில் ரஷ்யாவும் இருந்ததால் சூதனமாகவும், சாதக சூழலை எதிர்பார்த்தும் இருந்தார் அஜர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ். பொறுமை காத்தார்.

நட்பு நாடான துருக்கியின் ராணுவ ஒத்துழைப்பு இல்லாமல், வெல்ல வேண்டும் என்ற வைராக்கியத்துடன் காத்திருந்தார் அஜர்பைஜானின் அதிபர் .

பொறுமைக்கு பலன் கிடைத்தது. பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக செப்டம்பர் 27, 2020 ல்—எப்பொழுதும் நடத்தப்படும் எல்லை தாக்குதலை போல் அல்லாமல்—தன் ஆக்கிரமிப்பு எல்லையின் முழு நீளத்திலும் அஜர் பைஜான் மீது உயர் ராணுவ தளவாடங்களை கொண்டு தாக்குதலைத் தொடுத்தது அர்மீனியா. இந்த நடவடிக்கை" போருக்கு தயார்" என்பதாக சுட்டிக் காட்டியது .

இம்முறை அஜர்பைஜான் கடுமையாக தடுப்பு தாக்குதல் நடத்த அது அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு மன பாவத்தால் நேரடி யுத்தமாக உருவெடுத்து விட்டது.

இப்போர் அர்மீனியாவின் நிலப்பகுதியில் நடக்கவில்லை. மாறாக அஜர்பைஜானிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் தான் அர்மீனிய ராணுவம் மற்றும் கிறிஸ்தவ தீவிரவாதிகளுக்கு எதிராக அஜர்பைஜான் போர் புரிந்து வருகிறது. நகோர்னோ–கரபாக் மற்றும் இத்துடன் அஜர் பைஜானின் பிற பகுதிகளும் உள்ளடங்கியது இது.

இப்பொழுது நடக்கும் போரில் அஜர்பை ஜான் துருக்கி ராணுவ ஒத்துழைப்பு இல்லாமல் தன் சுய பலத்துடன் கிறிஸ்தவ தீவிரவாதத்தை நிலைகுலைய செய்துள்ளது. பல்வேறு ராணுவ தளவாடங்கள் அழிக்கப்பட்டுள்ளது. மீட்கப் பட்ட பகுதிகளில் அமைதி பாதுகாக்கப்பட்டு வருகிறது . அதன் அண்டை நாடுகளில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையும் உயிரும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ரஷ்யாவும், பிற மேற்கத்திய நாடுகளும் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு அஜர் பைஜானை நிர்பந்தித்து பணிய வைத்துள்ளன. ரஷ்யாவின் மாஸ்கோவில் ரஷ்ய தலைமையில் நடந்த இந்நாடுகளின் பிரதிநிதிகளின் ஆலோ சனை வடிவில் ரஷ்யாவின் நிர்ப்பந்தத்தை ஏற்று அஜர்பைஜான் அக்டோபர்–10–2020 தற்காலிக போர் நிறுத்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

1994–ல் ஆர்மீனியர்கள் எங்கள் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து தற்காலிகமாக போர் நிறுத் தத்தை அறிவித்தது போல், இம்முறை அஜர் பைஜான் தற்காலிகமாக போரை நிறுத்த வேண்டும் என்ற ரஷ்ய மற்றும் மற்ற கிறிஸ்தவ நாடுகளில் குரலில் நியாயம் இல்லை. ஏனெனில், இழந்த 20 சதவீதம் நில பகுதியை மீட்க இவ் வாதம் பொருந்தாது. இருப்பினும் அஜர்பைஜான் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஒத்துக் கொண் டுள்ளது. எப்பொழுதும் போல் இம்முறையும் கிறிஸ்துவ ஆர்மீனியாவின் நலனே முக்கியமாக பார்க்கப்பட்டு. புனிதர்களாக (saints) கிறிஸ்தவ உலகம் நடிக்கிறது.

இம்முறை போல் கடந்த 1991–ல் நடந்த போரில் அஜர்பைஜான் ஆயுத பலத்துடன் இருந்திருந்தால் கிறிஸ்தவ ஆதிக்க நாடுகளின் நடிப்பு அப்பொழுதும் அரங்கேறி இருக்கும்.

கடந்த 1991 –1994 ல் ஆர்மீனியாவின் கிறிஸ்தவ விரிவாக்க ஆக்கிரமிப்பு போரில் போர் நிறுத்தத்திற்கு கிட்டத்தட்ட மூன்று வருடகால அவகாசம் கொடுத்தவர்கள் செப்டம்பர் – 27 – 2020 போரில் அஜர்பைஜானின் கை ஓங்கியதை பார்த்து இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்திற்கு மிரட்டல் விடுத்து நிறுத்தியுள்ளனர். கிறிஸ்த வர்களின் உயிர் மதிப்பு மிக்கதாகவும், முஸ்லிம் களின் உயிர் துச்சமாகவும் பார்க்கும் கர்த்தரின் பிள்ளைகள் ஆயுதங்களை ஏற்றுமதி செய்து கொண்டே தங்களை சமாதான வாதிகளாகவும் மனித உரிமை போராளிகளாகவும் காட்டிக் கொள்கிறார்கள் .நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்த தற்காலிக போர் நிறுத்த அறிவிப்பு நடைமுறை படுத்தப்படவில்லை. அதைத் தொடர்ந்து ஒரு வாரம் கழித்து அக்டோபர் 19–ம் தேதி மீண்டும் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த நடவடிக்கையும் பின்பற்றப்படவில்லை. அக்டோபர் மூன்றாம் வாரம் முதல் தொடர்ச்சி யாக துருக்கியின் அதிநவீன ட்ரோன்கள் வீழ்த் தப்பட்டு கொண்டிருக்கிறது. இந்த திடீர் திருப்பு முனை சுட்டிக்காட்டுவது, போர் நிறுத்தத்தை பின்பற்றாதவர்கள் அர்மீனியர்களே. இதற்கு காரணம் ரஷ்யா அனுப்பிவைத்துள்ள ட்ரோன் களை வீழ்த்தும் நவீன ஆயுதங்கள். கொடுத்த தைரியம். இதன் வருகை போர் நிறுத்தத்திற்கு பதிலாக போரை தீவிரப்படுத்தியுள்ளது.

அர்மீனியாவின் சிலுவை (மனிதர்களை உயிருடன் ஆணி அடித்து கொல்லும் கொடூர ஆயுதம்) போர் பிரகடனம் தொடர்ந்து கொண்டி ருக்கிறது.

– ஜாகிர்



# அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போரில் ரஷ்யாவின் பங்கு..!

சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து தனி நாடுகளாக விளங்கும் பல நாடுகளில் அர்மீனியாவும், அஜர்பைஜானும் போரில் ஈடுபட்டு வருகின்றன.

இப்போருக்கு வேண்டிய ஆயுத தளவாடங்களை அதிகமாக இவ் விருவருக்கும் விற்பனை செய்வது ரஷ்யா. இதுவும் சோவியத்திலிருந்து பிரிந்த நாடு.

அர்மீனியாவை தூண்டிவிடு வதன் மூலம், துருக்கியும் அஜர் பைஜானும் ஆயுதங்களை வாங்கும் நிர்பந்த நிலையை ரஷியா உருவாக்கி தன் எல்லையில் உள்ள நாட்டை தன் பிடியில் வைத்துள்ளது. ஆயுதமும் ஜோராக விற்பனையாகிறது.

அஜர்பைஜான் நாடு தன் எல்லைகளை ஈரான், ஆர்மீனியா, ஜார்ஜியா மற்றும் ரஷ்யா ஆகிய 4 நாடுகளுடன் பகிர்ந்து கொள்கிறது. இதில் அர்மீனிய எல்லைப் மட்டுமே பிரச்சனைக்குரிய, பதற்றத்திற்குரிய, தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள் ளாகும் பகுதியாக இருக்கிறது. இங்கு அர்மீனிய கிறிஸ்தவ தீவிரவாத குழுக்கள் தாக்குகின்றன. இக்குழுக் கள் நகோர்னோ – கரபாக் என்ற காகசஸ் பகுதியை தனி நாடாக அறிவித்து சட்ட விரோதமாக ஆட்சி செய்கிறது. இதற்கு BohNy (Artsakh) என்று பெயரிட்டுள்ளனர். இதை எந்த சர்வதேச நாடும் அங்கீகரிக்க வில்லை. இதற்கு கொல்லைப்புற வழியாக உதவுவது அர்மீனியா மட்டுமே.

உலகின் கிறிஸ்தவ நலனை முற்படுத்தி, அராஜகமாக மற்ற மத, இன, மொழி மக்களை குறிப்பாக முஸ்லிம்களை வேட்டையாடி வரும் மேற்கத்திய வெள்ளை கிறிஸ்த வர் கள் BohNy (Artsakh) நாட்டை அங்கீ கரிக்காமல் இருப்பது முரண்பாடு அல்ல. இவர்கள் ஒன்றுபட்ட அர்மீனியாவை அதாவது நகோர்னோ – கரபாக் பகுதியை உள்ளடக்கிய அகன்ற அர்மீனியாவை உருவாக்கும் நோக்கில் இருப்பதால், அவசர கதியில் இச்சிறு நாட்டை அங்கீகரிக்கவில்லை. உண்மை இதுதான். பொது அவையில் மேற்கத்தியர்கள் போடும் வேஷத்தை நம்ப வேண்டிய தில்லை.

இவை நிதர்சனமாக நடக்க வேண்டுமென்றால், உலக மக்களின், பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிக்க தொடங்கியுள்ள துருக்கி நொறுக்கப்பட வேண்டும். இதை நிறைவேற்ற எதிரெதிர் முகாம்களாக நாம் கணிக்கும் ரஷ்ய ஆதரவு கிறிஸ்தவ நாடுகளும், அமெரிக்க சார்பு கிறிஸ்தவ நாடுகளும் அந்தரங்கமாக ஒன்றுபட்டு காய்களை நகர்த்தி வருகின்றன.

இதற்கு ஆயுத விற்பனை முக்கியம். அதில் பாகுபாட்டு டன் நடந்து கொள்ள வேண்டும். அது ரகசியமாக நடக்க வேண்டும். பின் திடீர் தாக்குதல் நடத்தி முஸ்லிம் உலகை நிலை குலையச் செய்ய வேண்டும்.

இதற்கு உதாரணம் அர்மீனியாவுக்கு ஆயுத விற்பனையில் காட்டப்பட்ட அவசரகதி, உயர் தொழில்நுட்ப ராணுவ தளவாடங்களாகும்.

ஜூலை 12 முதல் 14 வரை, 2020 –ல் அர்மீனியா நடத்திய அஜர்பைஜானின் டோவுஸ் (Tovuz) மாவட்டத்தின் மீதான தாக்குதலில் பெட்ரோலிய எரிவாயு பாதைகளின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளானது. அவ்வழியே செல்லும் 3

பெட்ரோல்,எரிவாயு தொலைதூர குழாய்களில் ஒன்று ரஷ்யாவிற்கும் செல்கிறது.

ரஷ்யா தன் நாட்டிற்கு வரும் பெட்ரோல் பாதை ஆபத்திற்கு உள்ளாகும் அபாயத்தை விரும்பவில்லை என்றோ, பாதுகாக்க பட வேண்டுமென்றோ அக்கறையுடன் எண்ணி யிருந்தால் இப்பொழுது நடந்த செப்டம்பர் 2020 போர்நடந்திருக்காது. ஆனால்கள உண்மை வேறு.

ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 4,2020 வரை யிலான நாட்களில் ரஷ்யா ரகசியமாக ஆர்மீனி யாவிற்கு கிட்டதட்ட 400 டன் அளவில் பல்வேறு விதமான ஆயுதங் களை விமானங்கள் மூலம் சப்ளை செய்தது.

ஜார்ஜியா நாட்டின் நேரடி வான் வழியை (குறைந்த தூரம்) தவிர்த்துவிட்டு, தெற்கு ரஷ்யா வின் ரோஸ்டோவ் (Rostov) பகுதியிலிருந்து கடல் வான்பகுதி வழியாக அர்மீனியாவிற்கு ஆயு தங்களை கொண்டு போய் சேர்த்துள்ளது ரஷ்யா.

இதில் ஏவுகணை தடுப்பு ஆயுதமான S- 300 வான் ஏவுகணை தடுப்பு உயர் தொழில்நுட்ப ராணுவ தளவாடமும் அடங்கும். இது அப்பிராந் திய சமநிலையையும், அமைதியையும் பாதிக்கும். அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது. சுதாரித்துக்கொண்ட அஜர்பைஜான் ரஷ்யாவின் அதிபர் புதினிடமே நேரடியாக எதிர்ப்பு தெரிவித்தது.

கிழக்கு மத்திய தரைக்கடல் பிரச்சனையில் சிக்கிய துருக்கி, தனது நட்பு நாடான அஜர்பை ஜானுக்கு உதவும் வாய்ப்பிருக்காது என்ற கணிப்பில் போரை துவக்கியது ஆர்மீனியா .அது விரித்த வலையில் தானே விழுந்தது. கடும் சேதத்தை சந்தித்துள்ளது. இச்சூதுவிளையாட்டில் அப்பாவி கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் உயிரை பகடையாக்கி விளையாடிய ரஷ்யாவும் ,அகன்ற அர்மீனிய கனவை சுமந்து தெரியும் உலகளாவிய தேவாலய கருத்தாளர்களும் விக்கித்து போனார் கள். அர்மீனியா கடுமையான கடன் சுமையில் சிக்கியதை உணர்ந்து அவசர அவசரமாக போர் நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளனர் சமாதான, அமைதி விரும்பும் முற்போக்கு வேஷதாரிகள்.





# கிறிஸ்தவ தீவிரவாதிகளின் கோட்டையாகும் அர்மீனியா

அஜர்பைஜான் அரசு 'இஸ்லாமிய விழிப்புணர் பிரச்சாரத்தை' தீவிரவாதம் என முத்திரை குத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் அஜர்பைஜான் சிறைகளில் வாடும் மொத்த சிறைவாசிகளில் இஸ்லாமிய நம்பிக்கைகளை உறுதியுடன் பின்பற்றியவர்களே அதிகம்.

முஸ்லிம்கள் தரப்பில் நிலவரம் இப்படி யிருக்க, 2020 ஆண்டின் அர்மீனியா – அஜர் பைஜான் போரிலோ, கிறிஸ்தவ தீவிரவாதிகள் உலகம் முழுவதும் அணிதிரட்டப்பட்டு போர் முனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அரபு தீபகற்பத்தின் மேற்கு ஓரத்தில் அமைந் திருக்கும் லெபனானில் அதன் குடிமக்களாக இருந்தும் தங்களை 'அர்மீனிய கிறிஸ்தவர்கள்' என அடையாளத்துடன் பலரும் போர்முனைக்கு சென்றுள்ளனர் என்ற செய்தி பெரும் அச்சத்தை விளைவித்துள்ளது. இவர்களை தீவிரவாதிகள் (terrorist) என்ற வார்த்தைகளைக் கொண்டு அடை யாளப் படுத்தாமல் தொண்டர்கள் (volunteers) என ஊடகங்கள் குறிப்பிடுவதை கொண்டு நாம் மூளை சலவை அடைய முடியாது.

அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு போருக்கு ஆதரவு தெரிவித்து லெபனான் அர்மீனிய இனத்தை சேர்ந்த கிறிஸ்தவர்கள் சிவப்பு, நீலம் மற்றும் ஆரஞ்சு நிற அர்மீனிய கொடிகளை தங்கள் வீடுகளில் ஏந்தி தங்கள் விசுவாசத்தை காட்டியுள்ளனர் .இது இவர்கள் திறம்பட அணி திரட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது.

இவர்களின் முன்னோர்கள் 1915 –ல் நடந்த முதல் உலகப் போரில் துருக்கி கிலாஃபத்திற்கு எதிராக (துருக்கி குடிமக்களாக இருந்தும்) ஜார் மன்னன் ஆண்ட ரஷ்யாவுக்கு உதவியதின் காரணமாக இனப் படுகொலை செய்யப்பட்ட னர் என பொய்யாக துருக்கி மீது பழி சுமத்திக் கொண்டு, அதே துருக்கி கிலாபத்தின் பிறிதொரு பகுதியான லெபனானில் எங்கள் முன்னோர் களில் தப்பிப் பிழைத்த மிச்ச சொச்சங்கள் குடி யேறினார்கள் என்ற முரண்பட்ட தகவல்களை கொடுக்கிறார்கள்.

லெபனானை சேர்ந்த அர்மீனிய புரட்சிகர முன்னணியின்(Armenian revolutionary federation. இது ஸ்டாலின் சோவியத் யூனியனில் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பாகும்) சட்ட மன்ற உறுப்பினர் ஹகோப் (Hagop pakradounian) கூறும்போது 'நாங்கள் அவர்களை தடுக்க முடியாது. அவர்கள் சுதந்திரமாக சென்று போரிட உரிமை உண்டு' என்கிறார். மேலும் இது அனைத்து அர்மீனியர்களுக்கு எதிரான போர் என்றும் கூறுகிறார்.

வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து அநேக கிறிஸ்தவ தீவிரவாதிகள் அர்மீனிய தலைநகர் 'எரவானில்' முகாம் அமைத்துள்ளனர். இவர்களுக்கு 'விரைவு



ராணுவ பயிற்சி' அளிக்கப்படுகிறது என்பதை ரேடியோ பிரான்ஸ் இன்டர்நேஷனல் (RFI) என்ற பிரெஞ்சு அரசின் வானொலி தகவல்களை தெரிவித்துள்ளதை மேற்கோள்காட்டி டெய்லி சபா. காம் அக்டோபர் – 4 – 2020 செய்தி வெளியிட்டுள்ளது.

கிரீஸ் ராணுவத்தில் கூலிப்படையாக (non commissioned) பணியாற்றியவர் 'அவர்களுக்காக போர் செய்வேன். நான் என்னுடைய சகோதரர்களுக்கு உதவுவேன். ஏனெனில் அவர்கள் கிறிஸ்தவர்கள். நான் கிரேக்கன்' என உணர்ச்சி பொங்க கூறினார். இவ்வளவுக்கும் இவர் அர்மீனிய இனத்தை சேர்ந்தவரில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் 'நான் நூறு சதவீதம் கிரேக்கனாக இருந்தாலும், என்னை யாரும் தடுக்க முடியாது' என்கிறார்.

செப்டம்பர் 28 தேதியிட்ட விளம்பரத்தில் அர்மீனியாவிற்கு உதவிட தொண்டர்கள் (வாசிக்க : தீவிரவாதிகள்) தேவை (call for voluntary enlist ment in the army of Republic of the Armenia) என்றிருக்க,

அதற்கு தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

500 முதல் 800 வரையிலான கிறிஸ்தவ தொண்டர்கள் (வாசிக்க: தீவிரவாதிகள்) அர்மீனியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக (Greek city times. com - October - 3 - 2020 : Former non - commissioned officer," I am going to Artsakh with 500- 800 Greeks to crush the turks ") கிரீக் சிட்டி டைம்ஸ்.காம் தெரிவிக்கிறது .

உண்மை இவ்வாறு இருக்க, பிரான்ஸ், அர்மீனியா மற்றும் பொய்யை பரப்பவே உருவாக்கப்பட்ட பல மேற்கத்திய அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் துருக்கியை குற்றம்சாட்டி கொண்டிருக்கிறார்கள். துருக்கி சிரியாவிலிருந்து கூலிப் படைகளை போர் பகுதிக்கு அனுப்பி வருவதாகவும், அது அப்பிராந்தியத்தை தீவிரவாத பகுதியாக மாற்றும் என ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டி வருகின்றனர்.

திருடனை பிடிக்க ஓடினால் அத்திருடன் 'அப்பாவியை' திருடன் என கத்திக் கொண்டு தன்னை பொதுமக்கள் பார்வையிலிருந்து காப்பாற்றிக் கொண்டானாம். எச்சரிக்கை மனிதர்களே.


ஆதாரம் :

thetimesofindia.com October-9-2020: Armenia - Azerbaija conflict draws in fighters from mideast.

greekcitytimes.com October-3-2020

Soldiers in Artsakh baptized before battles (video)-public radio of Armenia.25-10-2020

மேற்கண்ட ஆதாரங்களை தழுவி எழுதப் பட்ட கட்டுரை இது. – ஜாகிர்

# ரஷ்யாவின் அதிர்ச்சியும் (S-300 அழிவு) துருக்கி ட்ரோன்களின் வல்லாண்மையும்

ரஷ்யா அதிர்ச்சியிலிருந்து மீள கடுமையாக போராடிக் கொண்டிருக்கிறது. காரணம் அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போரால் ரஷ்ய ஆயுதங்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி யுள்ளது.

போரில் ஒரு நாட்டின் வான் பாதுகாப்பே, முதல் வரிசை பாதுகாப்பாகும் (First line of defence). இதற்காக ஒவ்வொரு நாடும் தன் விமானப்படைக்கு அதிமுக்கியத்துவம் கொடுக் கின்றன. இதற்காக விமான ரகங்களுடன், ஏவுகணை, எதிரி ஏவுகணை, எதிரி ஏவுகணை களை வானிலேயே தடுத்து அழிக்கும் தடுப்பு ஏவுகணை அமைப்பு போன்றவற்றிற்க்காக பெரும் செலவு செய்து வருகின்றன. இதற்காக ஆயுத உற்பத்தி நாடுகள், தங்கள் தயாரிப்புகளின் பெருமைகளை விளக்கி உலகின் பல நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்கின்றன.

இப்போரில் முக்கியமாக எதிரி ஏவுகணை களை 300 கிலோ மீட்டர் தூரத்திலேயே வான்வழி தாக்குதல் மூலம் தடுத்து அழிக்கும் அதிநவீன எஸ்– 300 ரக ஏவுகணை ஏவு தளத்தை அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு பகுதியில் அழித்து விட்டதை அஜர்பைஜான் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த ரக ஏவுகணை தடுப்பு அமைப்பை விற்பனை செய்வதன் மூலம், அமெரிக்காவுக்கு எதிரான வலுவான அரசியலை ரஷ்யா செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா போன்ற மேற்கத்திய நாடுகளின் ரஃபேல், F-35 போன்ற ரேடாரை ஏமாற்றும் விமானங்களின் போக்கையும் கூட கண்டுபிடித்து தாக்கி அழிக்கும் வல்லமை உள்ள அதிநவீன வான் பாதுகாப்பு அரண் S-300 என ரஷ்யா உறுதிப்படுத்தி விளம்பரப்படுத்தி பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்து வந்தது.

இத்தகைய வான் பாதுகாப்பு அரணான S-300 இப்போரில் அழிக்கப்பட்டது ரஷ்யாவை கதிகலங்க செய்தும், மேற்கத்தியர்களின் ஆவலை தூண்டியும் விட்டுள்ளது. இனி இரு முகாம்களும் துருக்கி மற்றும் அஜர்பைஜானை அணுகி அதற் கான விடையை அவரவர் தேவைக்கு ஏற்ப அறிய முற்படும். போர்கள ஆய்வுகளின் முடிவை எதிர் பார்க்கும்.

இதை சாதித்தது துருக்கியின் சொந்த தயாரிப்பான பேரக்டர் – டிபி 2 (Bayraktar -TB2) ரக ட்ரோன்கள்.

கடந்த 2014 ஆண்டில் துருக்கி (சிரியா உள்நாட்டு போர் உச்சத்தில் இருந்தபோது) தனது இராணுவ தேவைக்காக அமெரிக்காவிடம் ட்ரோன்களை கேட்டிருந்தது. அமெரிக்கா மறுத்து விட்டது. காரணம், அமெரிக்க சார்பு தீவிரவாதிகளான குர்து இன போராளிகளை (இவர்கள் சுன்னத் ஜமாத்தை சேர்ந்தவர்கள்.





ஆனால் இஸ்லாமிய போராளிகள் அல்ல) துருக்கி தாக்கும். அதனால் குர்து இனத்தாரை பயன்படுத்தி துருக்கி, ஈராக் மற்றும் ஈரானில் முஸ்லிம் இனப்படுகொலையை தொடர்ச்சியாக நடத்த முடியாது என்பதாலும், தீவிரவாதத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இழந்து விடுவோம் என்றும் அமெரிக்க யூத –கிறிஸ்தவ கூட்டணி அஞ்சியது.

துருக்கி தன் சொந்த முயற்சியின் பலனாக பல ரக ட்ரோன்களை (ஆளில்லாத விமானம்) பரிசோதித்து, வெற்றிகரமாக ராணுவ சேவையில் இணைத்துக் கொண்டது.

இந்த ட்ரோன்களை துருக்கி அஜர்பை ஜானுக்கு விற்பனை செய்திருந்தது. இந்த ட்ரோன்கள் அர்மீனியா– அஜர்பைஜான் போரில் சாதித்து காட்டியதை உணர்ந்த ஜார்ஜியா, செர்பியா போன்ற நாடுகள் துருக்கி இடமிருந்து பெறுவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்த பேரக்டர் வகை ட்ரோன்கள் ரஷ்யாவின் எ்–300 வை அழித்ததோடு, ரஷ்யாவின் பிற வான் பாதுகாப்பு ஏவுகணைகளான “Osa” மற்றும் “Strela-10“ வகை ஏவுகணை தளங்களின் ரேடார் களின் கண்களில் மண்ணை தூவி விட்டு தாக்கி அழித்துள்ளது. –ஜாகிர்

# அஜர்பைஜான் எதிர்கட்சிகளின் கூட்டறிக்கை

அண்டை நாடான அர்மீனியாவின் மதவாத ஆக்கிரமிப்பு போக்கை கடந்த 1991 முதல் அஜர்பைஜான் எதிர்கொண்டு வருகிறது .

1991 முதல் 1994 வரை நடந்த போரில் 20 சதவீத நிலப்பகுதியை இழந்ததோடு, கடந்த 26 வருடங்களாக தொடர் போர் அச்சுறுத்தல்களை அஜர்பைஜான் எதிர்கொண்டு வருகிறது.

செப்டம்பர் –27– 2020 முதல் அர்மீனியா தொடுத்த கிறிஸ்தவ ஆக்கிரமிப்பின் விரிவாக் கத்தை கண்டித்து கடந்த 7 –10 –2020 அன்று அஜர்பைஜானின் எதிர்க்கட்சிகள் கூட்டு அறிக் கையை வெளியிட்டன. நீதி மற்றும் அமைதிக் கான அஜர்பைஜான் அரசின் முயற்சிக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

மேலும் பல ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் பிரான்ஸ் ஒருதலை பட்சமாக அர்மீனி யாவை ஆதரித்தும், அநீதிக்குள்ளாக்கப்பட்ட அஜர்பைஜானின் தற்காப்பு மற்றும் மீட்பு நட வடிக்கையை எச்சரித்தும் நடந்து கொண்டதை கண்டிக்கும் போது “அல்ஜீரியா, வியட்நாம், ஜிபௌடி (Djibouti), சாட் (Chad), கபன் (Gabon) மற்றும் துனீசியாவில் இனப்படுகொலை நடத் திய பிரான்ஸ் அர்மீனியாவின் ஆக்கிரமிப்பை ஆதரிப்பது வியப்பில்லை. பிரெஞ்சுக் காரர்கள் தங்கள் பிடியில் வைத்துள்ள கோர்சிகா (Corsica) தீவுக்கு சுயநிர்ணய உரிமையை கொடுத்துவிட்டு, நமக்கு பாடம் நடத்தட்டும் ” என கூறியுள்ளனர் .

கோர்சிகா தீவு பிரான்ஸ் ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை பெற ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்தி வருகிறது. இப்போராட் டத்தை வழிநடத்துவது ”கோர்சிகா தேசிய விடு தலை முன்னணி (National Liberation Front of Corsica )" கோர்சிகா விடுதலை போராட்டம் பல கட்டங்களாக நடந்துவந்துள்ளது. 1920 முதல் நடந்து வருகிறது .ஆகஸ்ட்– 1975 முதல் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ பிரிவை சேர்ந்தவர்கள்.

இத்தீவு மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ளது. இது இப்பகுதியில் அமைந் துள்ள நான்காவது பெரிய தீவாகும் இது.

– ஜாகிர்

# முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு நடத்தப்படும் கருத்து சுதந்திர போர்

# பலியாகும் முஸ்லிம்கள்

## எது கருத்து சுதந்திரம்?.., பிரான்ஸ் சம்பவத்திற்கு முஸ்லிம்கள் காரணமா?.., முஸ்லிம்களே பலியாடுகளாக மாற்றப்படுகிறார்கள்.

சமீபத்தில் பிரான்ஸ் நாட்டில் ஒரு கல்லூரி வகுப்பு ஆசிரியர் கருத்து சுதந்திரம் பற்றியான பாடத்தை எடுக்கும் போது நபி (ஸல்)அவர்களை சித்தரித்து வரையப்பட்ட நிர்வாண கேலிச் சித்திரத்தை (cartoon) காட்டி பாடமெடுத்திருக்கிறார். முஸ்லிம் மாணவர்களையும் வெளியேற சொல்லிவிட்டு இதனை செய்திருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக உணர்ச்சிவசப்பட்ட ஒரு மாணவன் அந்த சாமுவேல் என்ற ஆசிரியரை கொலை செய்திருக்கிறான். இதனை இஸ்லாத்திற்கெதிரான பிரச்சாரமாக பிரான்ஸ் அரசும் உலக ஊடகங்களும் எப்போதும் போல சித்தரித்து வருகிறார்கள். இதையே நமது தமிழ் ஊடகங்களும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் நடந்த கொலை என்று எழுதுகிறார்கள்.

அதாவது, இஸ்லாம் கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது என்று எழுதி வருகிறார்கள்.

### எது கருத்து சுதந்திரம்..?

ஒரு மனிதன் தனிப்பட்ட வாழ்க்கையில் வாழ்வதற்கு சில இங்கிதங்கள் அவசியப்படுகிறது. அதற்கு மீறி அநாகரிகமாக நடந்து கொண்டால் அது குற்றசெயலாகதான்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இங்கே பலருக்கும் கருத்து சுதந்திரத்திற்கான அளவீட்டை கற்றுத்தர வேண்டியிருக்கிறது.

ஒரு மதத்தை சார்ந்தவர் இன்னொரு மதத்தை பற்றி அநாகரிகமாக பேசுவது குற்ற செயலாக பார்க்க வேண்டுமே ஒழிய அதனை கருத்து சுதந்திரமாக பார்த்திட கூடாது. அதனால் தான் சமீபத்தில் ஆபாசமாக இந்து மத புராணங்களை பற்றி பேசிய ஒருவர் கடுமையான பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இதில் இஸ்லாம் காட்டும் நடைமுறையும், முஸ்லிம்கள் நடந்து கொள்ளும் நடைமுறையும் உலகுக்கே வழிகாட்டுகிறது. முஸ்லிம்களால் இதுவரை மற்ற மதக்கடவுள்களை கேலிக்குள்ளாக்கபட்டது என்று இதுவரை உலகில் ஒரு பிரச்சனையும் ஏற்பட்டதில்லை. காரணம், இஸ்லாம் மாற்று மதக்கடவுள்களை பற்றி அநாகரிகமாக பேசாதீர்கள் என்று தடை விதித்திருக்கிறது. அதனை ஒரு குற்ற செயலா கவும் குறிப்பிடுகிறது.

ஒவ்வொரு முறையும் முஸ்லிம்களின் புனித நம்பிக்கைகள் அவமரியாதைக்கு உட்படுத்தப்



**Paris attack: Two Muslim woman are stabbed under the Eiffel Tower**

dailymail.co.uk/news/article-8861799/Paris-attack-Two-Muslim-woman-stabbed-Eiffel-Tower.html

October 21, 2020

**Two Muslim women are stabbed under the Eiffel Tower by white female attackers shouting 'Dirty Arabs' after argument about dogs amid rising tensions after teacher was beheaded for Mohammed cartoons**

படும் போது, அவமானப்படுத்தியவர் கிறிஸ்துவர் அதனால் அவர் மதத்தை கேலியாக பேசுவேன், அவமானப்படுத்தியவர் இந்து அதனால் அவரது கடவுளை நான் கேவலமாக சித்தரிப்பேன் என்று இதுவரை எந்த முஸ்லிம் தலைவர்களும் பேசியதில்லை. அம்மாதிரியான செயல்களை முன்னெடுத்ததுமில்லை.

ஆனால் இதனை குறிப்பாக ஐரோப்பிய நாடுகளும் இஸ்லாத்திற்கு எதிரானவர்களும் தொடர்ச்சியாக செய்து வருகின்றன.

## பிரான்ஸ் சம்பவத்திற்கு முஸ்லிம்கள் காரணமா..?

இப்படியொரு சம்பவம் நடந்த பிறகு அனைத்து ஊடகங்களும் இதனை இஸ்லாமிய தீவிரவாதம் என்று தலைப்பிட்டு அச்சிடுகிறார்கள். பிரான்ஸ் அதிபர் கூட இதே கருத்தைதான் கூறுகிறார்.

கொலை செய்த நபரின் பெயரை குறிப்பிட்டு இவன் தான் கொலையாளி என்பதற்கு பதிலாக அவன் முஸ்லிம் என்ற காரணத்தினாலேயே இஸ்லாமிய தீவிரவாதி என்று குறிபிடுகிறார்கள்.

ஆனால், இதுவே மற்ற நிகழ்வுகளில் குற்றவாளிக்கு மத அடையாளங்கள் தரப்படுவதில்லை. சமீபத்தில் நியூசிலாந்து மசூதியில் நுழைந்து 51 முஸ்லிம்களை சுட்டுக்கொன்றான் பிரண்டன் ஹாரிசன் என்பவன். இவனை யாரும் அவன் மதத்துடன் குறிப்பிட்டு கிறிஸ்துவ தீவிரவாதி என அடையாளப்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களும் அதனை செய்யவில்லை.

ஏன் இந்தியாவில் பசுவின் பெயரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இப்படி முஸ்லிம்களை கொல்பவர்களின் அடையாளங்களை வைத்து “இந்து தீவிரவாதிகள்” என்று யாரும் அடையாளப்படுத்துவதில்லை. பாதிக்கப்படும் முஸ்லிம்களும் இதனை செய்வதில்லை.

பிரான்சில் சாமுவேல் என்ற ஆசிரியர் கொல்லப்பட்டதற்கு பிறகு இரண்டு முஸ்லிம் பெண்கள் முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காகவே கத்தியால் குத்தப்பட்டனர். இந்த சம்பவத்தை உலக ஊடகங்கள் இரண்டு முஸ்லிம்பெண்கள் கத்தியால் பிரான்சில் குத்தப்பட்டனர் என்று செய்தி வெளியிட்டனவே ஒழிய கிறிஸ்துவ பெண்களால் குத்தப்பட்டனர் என்றோ அல்லது கிறிஸ்துவ தீவிரவாதம் என்றோ தலைப்பிட்டு செய்தி வெளியிடவில்லை.

**France shuts Paris mosque, extends crackdown on Muslims**

dailysabah.com/world/europe/france-shuts-paris-mosque-extends-crackdown-on-muslims

October 20, 2020

சாமுவேல் கொல்லப்பட்டதற்கு பிறகு அங்கிருக்கும் பள்ளிவாசல் பிரான்ஸ் அரசால் தற்காலிகமாக பூட்டி வைக்கப்படுகிறது. இதுவே கிறிஸ்துவர்களால் இரண்டு முஸ்லிம் பெண்கள் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு அப்பகுதி தேவாலயம் மூடப்பட்டதா?..

இந்த ஊடக தாக்குதலுக்கு முஸ்லிம்களும் பலியாகிறார்கள். சாமுவேல் கொலை செய்யப்பட்ட பிறகு பிரான்சில் இருக்கும் முஸ்லிம் அமைப்புகளும், இமாம்களும் கொலைக்கு எதிராக கண்டனம் எழுப்புயிருக்கிறார்கள். அதுவே இப்போது முஸ்லிம் பெண்களின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலுக்கு கிறிஸ்துவ பாதிரிமார்களும், கிறிஸ்துவ அமைப்புகளும் கண்டனங்கள் வெளியிட்டார்களா?

இப்படி பல உதாரணங்களை கொடுக்கலாம்.

இங்கே முஸ்லிம் பெயர் கொண்ட ஒருவன் ஏதேனும் செய்யும் போது மட்டும் அதனுடன் மத அடையாளங்களும் சேர்த்து கொள்ளப்படுகிறது.

ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டால் அதற்கு நீதியாக குற்றவாளிக்கு மரண தண்டனை என்பது தான் இஸ்லாமிய சட்டம். இதன் அடிப்படையில் ஆசிரியரை கொலை செய்த நபருக்கு தண்டனை தர வேண்டும் என்று தான் முஸ்லிம் தலைவர்கள் கூறியிருந்தார்கள். யாரும் குற்றவாளிக்கு ஆதரவாக பேசுவதில்லை.

ஆனால், கொலை செய்த நபர் முஸ்லிம் என்ற காரணத்தினாலேயே அவர் தனது மதத்துடன் அடையாளப்படுத்தப்படுகிறார்.

## முஸ்லிம்களே பலியாடுகளாக மாற்றப்படுகிறார்கள்

இப்படி முஸ்லிம்கள் தங்கள் மதத்திற்கு எதிராக அவதூறான கருத்துகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக நேரடியாக வன்முறை செயலில் ஏற்படுவதால் எந்த நன்மையும் ஏற்பட போவதில்ல்லை. அதற்கு மாறாக முஸ்லிம்கள் மொத்தமாக குற்றவாளிக் கூண்டில் ஏற்படுத்துவதற்கு அது ஒரு வாய்ப்பை தான் உருவாக்கி தருகிறது என்பதையும் முஸ்லிம்கள் உணர வேண்டும்.


INDEPENDENT

Support us | Contribute

NEWS CORONAVIRUS ADVICE UK POLITICS US POLITICS VOICES SPORT CULTURE INDY/LIFE INDYBEST LONG READS INDY100

News > World > Americas

Bush: God told me to invade Iraq

President 'revealed reasons for war in private meeting'

ஒரு கார்டூன் போடுவதன் மூலமாகவோ ஒருவன் தரக்குறைவாக பேசுவதன் மூலமாக இஸ்லாத்தையோ முகம்மது நபி அவர்களுக்கோ எந்த விதத்திலும் பாதிப்பை உருவாக்கிட முடியாது. அது அந்த குறிப்பிட மனிதரின் கீழான குணத்தை தான் வெளிப்படுத்தும். குறிப்பாக தமிழகத்தில் இந்த உணர்வு அதிகம் இருக்கிறது.

சமீபத்தில் கூட தமிழகத்தில் கார்டூனிஸ்ட் வர்மா என்ற நபர் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக ஒரு கார்டூன் ஒன்றை வெளியிட்டார். இதனை தமிழக மக்கள் பெரிய ஒன்றாக எடுத்துக்கொள்ளவில்லை. இவனைப் போன்ற வர்களெல்லாம் பேசுவதால் ஒன்றும் ஆகிவிட போவதில்லை என்று உணர்ந்து அதனை பெரிய விதமாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், அதே நேரத்தில் இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டவுடனே இது கலவரத்தை தூண்டுவதற்கான செயல் என்று காவல் துறையில் தமிழகம் முழுக்க தனித்தனியாக புகார் கொடுத்தார்கள். இப்படியான அழுத்தத்தின் பிறகு அந்த நபர் கைது செய்யப்பட்டார்.

பிரான்ஸ் சம்பவத்திலும் கூட சாமுவேல் என்ற ஆசிரியர் மீது கல்லூரியில் படிக்கும் மாணவனின் தந்தை காவலர்களிடம் புகார் பதிவு செய்திருக்கிறார். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, இதன் பிறகு உணர்ச்சிவசப்பட்ட ஒரு இளைஞன் ஆசிரியரை படுகொலை செய்திருக்கிறான்.

2015–ன் கணக்கெடுப்படி உலகில் 180 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் நல்லவர்களாகவே இருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை, முஸ்லிம் நாடுகளில் இருக்கும் சிறைகளில் முஸ்லிம்கள் தான் குற்றவாளிகளாக அடைக்கப்படுகிறார்கள். அதனால் 180 கோடி முஸ்லிம்களில் யாரோ ஒருவர் தனித் தனியாக செய்யும் தவறுகளுக்கு மொத்த சமூகமும் பொறுப்பேற்க முடியாது.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஈராக்கின் மீது போர் தொடுக்கும் போது “கடவுள் என்னை ஈராக்கின் மீது போர் தொடுக்க வேண்டும் என்று சொன்னார்” என்று அறிவித்த போது, உலகில் எவருமே ஏன் முஸ்லிம் நாடுகள் கூட அதனை கிறிஸ்துவ தீவிரவாதம் என்று பெயரிடவில்லை. ஆனால் அதிகாரமற்ற தனி நபராக முஸ்லிம் பெயர் கொண்ட ஒருவன் செய்யும் தவறுகளுக்கு பொதுவாக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத் தையும், இஸ்லாமையும் குறை சொல்வது என்ன மாதிரியான மனநிலை?..

– அபூ சித்திக்

# NIA யின் நாடகம்



இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு முஸ்லிம்களுக்கெதிராக பல்வேறு சதித் திட்டங்களில் தொடர்ச்சியாக நிகழ்த்து கிறது என்பது நமக்கு தெரிந்தது தான். இதனை ஆர்.எஸ்.எஸ் அமைப்பு நேரடியாக செய்வதை விட அதன் கிளை அமைப்புகளான் பஜ்ரங் தள், யுவ வாகினி, சனாதன் சாஸ்தா மூலம் தான் அதிகமான சதித்திட்டங்களை நிகழ்த்தும்.

அந்த வரிசையில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இன்னொரு கிளை அமைப்பாக NIA என்ற தேசிய புலனாய்வு முகமை செயல்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால் NIA ஒரு அரசு சார்ந்த பொது புலனாய்வு அமைப்பு என்று கருதப்பட்டாலும் அதன் தொடர்ச்சியான செயல்பாடுகள் முஸ்லிம்களுக்கெதிராக திட்ட மிட்டு செயல்படுவதாக இருக்கிறது.

இந்த வரிசையில் அக்டோபர் மாதம் 18ம் தேதி மேற்கு வங்காளத்தில் அல்குவைதா இயக் கத்தை சார்ந்தவர்கள் என்று பெரும் பரபரப்புடன் 9 பேர் NIAவால் கைது செய்யப்பட்டனர். எப்போதும் போல ஊடகங்கள் 9 அல்குவைதா தீவிரவாதிகள் கைது வெடிகுண்டுகள் பறிமுதல், இந்தியாவை தகர்க்க சதி என்று முதல் பக்க செய்தியாக வெளியிட்டார்கள்.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் சங்கத்தின் சார்பாக (Association for Protection of Democratic Rights) ஒரு உண்மை கண்டறியும் குழு ஒன்றை உருவாக்கி NIA நிகழ்த்திய கைது நடவடிக்கையை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டனர். அதில் பல்வேறு அதிர்ச்சிகரமான தகவல் வெளியானது.

இந்த உண்மை கண்டறியும் குழுவில் அனைத் திந்திய மக்கள் குழுமம் (AIPF), இடதுசாரி மாணவ அமைப்பை சார்ந்தவர்கள், மற்றும் பத்திரிக்கையாளர்கள் சிலரும் என மொத்தம் 11 பேர் இருந்தனர்.

## உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கை

24ம் தேதி குழு முதலில் கைது செய்யப் பட்ட அபூ சுஃப்யான் வீட்டுக்கு தான் சென் றோம். அக்கிராமத்தில் முதலில் அனைவரும் தயக்கத்துடன் எங்களிடம் பேச மறுத்தார்கள். அந்த கிராம மக்கள் எங்களை பத்திரிகையாளர் கள் என்று நினைத்தார்கள். பத்திரிகையாளர்கள் செய்திகளை தவறாக போட்டு இவர்களுக்கு எதிராக வெறுப்புக் கருத்துகளை பரப்பியதால் ஆத்திரம் அடைந்திருந்தனர்.

பிறகு நாங்கள் உண்மை கண்டறியும் குழு அமைத்து அதற்காகவே வந்தோம் என்று கூறிய பிறகே தயக்கம் கலைந்து எங்களிடம் பேச தொடங்கினார்கள்.

அபூ சுஃப்யான் ஒரு தையல் வியாபாரி, ஆன்மிக நாட்டம் உள்ள நல்ல மனிதர் என்றே ஊர் மக்கள் அழைக்கிறார்கள். அவருக்கு மொத்தம் நான்கு குழந்தைகள். வசதி இல்லாத காரணத்தால் மூத்த மகனை படிக்க வைக்காமல் வேலைக்கு அனுப்புகிறார். மிகவும் ஏழ்மையான குடும்பம்.

18–ம் தேதி நடு இரவில் 30–40 காவலர்கள் அபூ சுஃப்யான் வீட்டை முற்றுகையிட்டு கதவை உடைத்து வீட்டில் உள்ளவர்களை அடித்து அபூ சுஃபுயானை இழுத்து சென்றிருக்கின்றனர். காவலர்கள் ஒருவரது உடையிலும் அவரது பெயர்கள் இல்லையென்று சுஃப்யானின் மகன் கூறுகிறார்.


The items seized by NIA during the raid. Pic courtesy : The Hindu

சுஃப்யான் வீட்டில் தீவிரவாதிகள் பதுங்கு வதற்காக ஒரு ரகசிய சுரங்கம் இருப்பதாக NIA அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அது ரகசிய சுரங்கம் இல்லை. தன் வீட்டில் கழிப்பறை கட்டிக்கொண்டிருந்தார் சுஃப்யான்.

வேலைக்கு ஆள் வைத்து செய்ய முடியாத தால் தானே கழிப்பறைக்கு தேவையான குழி தோண்டியிருந்தார். உண்மை கண்டறியும் குழு ஆய்வு செய்த போது கூட கழிப்பறைக்காக குழி வெட்டப்பட்டிருந்தது வெளிப்படையாக தெரிந்தது. இது அந்த ஊரில் இருக்கும் அனை வருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால், இதனை தான் அதிகாரிகள் ரகசிய சுரங்கம் என்று குறிப்பிட்டிருந்தனர்.

சுஃப்யானை நடு இரவில் இழுத்து செல்லும் போது அவரிடம் இருந்து பல்வேறு காகிதங்களில்

APCR

Association for Protection of Civil Rights

கையெழுத்து வாங்கினார்கள் என்றும் வீட்டிலி ருந்து சில பொருட்களை எடுத்து விட்டு என் னென்னெபொருள்கைப்பற்றப்பட்டதுஎன்பதை வீட்டில் இருப்பவர்களிடம் கொடுக்காமல் சென்றதாகவும் குடும்பத்தார்கள் கூறுகிறார்கள்.

அதே கிராமத்தை சேர்ந்த 22 வயதான முர்ஷித்தும் NIA அதிகாரிகளால் கைது செய்யப் பட்டிருக்கிறார். அபூ சுஃப்யானின் வீட்டுக்கு அருகிலேயே இருக்கும் முர்ஷித்தின் வீடு மிகச்சிறியது. முர்ஷித் பெற்றோர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களின் குடும்ப பொறுப்பை சமாளிப்பதற்காக கேரளாவில் புலம்பெயர் தொழிலாளியாக முர்ஷித் இருந்து வந்தார்.

கேரளாவில் முர்ஷித் கைது செய்யப்பட்ட வுடன் மொத்த குடும்பமும் செய்வதறியாது நிற்கிறார்கள். அண்டை வீட்டுக்காரர்கள் மொத்தமாக முர்ஷித் மிக நல்லவர் தீவிரவாதி யெல்லாம் கிடையாது என்று கூறுகின்றனர்.

அடுத்ததாக, ஹிதான்பூர் பகுதியில் வசிக்கும் 22 வயதான நஜ்மூஸ் சாகிப் NIAவால் கைது செய்யப்பட்டிருப்பதால் அவர் வீட்டிற்கு சென்றோம். சாகிப் கல்லூரியில் இரண்டாம்


House of Murshid Hasan, one of the accused. person.

ஆண்டு படித்து வந்தார். கல்லூரிக்கு செல்வதை தவிர வீட்டை விட்டு வெளியே போக மாட்டார் என்று குடும்பத்தார்கள் கூறுகிறார்கள். படிப்பில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்றும் கூறுகி றார்கள். 18ம் தேதி நள்ளிரவு காவலர்கள் பலர் வந்து சாகிப்பை விசாரணை என்று கூறி அழைத்து சென்றதாகவும், அழைக்க வந்த காவலர்கள் யாரும் பெயர் இல்லாத யூனிபார்மை அணிந் திருந்தார்கள் என்றும் சாகிப்பின் சகோதரர் கூறுகிறார்.

சாகிபுக்கு தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு இருப்பதாகவும் அதனால் சாகிப்பின் வங்கி கணக்குக்கு தீவிரவாதிகளால் பண பரிவர்த் தனை செய்யப்பட்டதாகவும் NIA அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். உண்மை கண்டறியும் குழுவினர் அது தொடர்பாக விசா ரிக்கும் போது, சாகிப்புக்கென்று தனியாக வங்கி கணக்கு கிடையாது. சாகிப்பின் தந்தையுடன் இணைத்து ஒரு இணைப்புக்கணக்கு ஒன்று தான் இருக்கிறது, அந்த வங்கிக்கணக்கின் பணபரி வர்த்தனைகளை பார்க்கும் போது எதுவும் வித்தி யாசமாகவோ தவறான பரிவர்த்தனைகளோ இல்லை.


மாதம் மாதம் இந்த வங்கிகணக்குக்கு 1500 ரூபாய் அரசின் யுவஸ்ரீ திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது, அதைத்தவிர பெரிய பண பரிவர்த்தனைகள் இல்லை. சாகிப்பின் வீட்டி லிருந்து சாகிப் தொடர்பான அனைத்து சான்றிதழ் களையும் காவலர்கள் எடுத்து சென்று விட் டார்கள். எதுவும் திரும்பி ஒப்படைக்கப் படவில்லை. என்னென்ன எடுத்து செல்லப்பட்டது என்ற விபரமும் குடும் பத்தவர்களிடம் வழங்கப்படவில்லை. அத்துடன் சில காலி பாலித்தீன் பேக்கு களின் மேல் சாகிப்பின் கையெழுத்து வாங்கப்பட்டதாக குடும்பத்தார்கள் தெரிவிக்கிறார்கள்.

லியூ யென் அஹ்மத் முசாபர் நகர் மாவட்டத்தின் தோம்கல் கிராமத்தில் வாழ்ந்துவருகிறார். 36 வயதான அஹ்மத் திருமணமாகதவர். ஒரு கல்லூரியில் எலக்ட்ரீஷியனாக வேலை செய்து வரு கிறார். இவருடன் விதவையான அம்மா வும், கணவனை பிரிந்து வாழும் சகோதரி யும் அவரது மகளும் ஒன்றாக இருக்கிறார்கள். இந்நிலையில் 18ம் தேதி காலை 3 மணிக்கு NIA அதிகாரிகள் காவலர்களுடன் வீட்டினுள் புகுந்து அஹ்மதை இழுத்து சென்றிருக்கிறார்கள். அஹ்மதின் சகோதரியிடம் வெற்று தாளில் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். இதுவரை அஹ்மத் எங்கிருக்கிறார் என எங்களுக்கு தெரி யாது என்று குடும்பத்தார்கள் கூறுகிறார்கள். அஹ்மதின் சகோதரி ஊடகங்கள் தவறான செய்தியை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என ஆதங்கப்பட்டார்.

சமீம் அன்சாரி, நவ்தாரா கிராமத்தில் வசித்து வருகிறார். கொத்தனார் தொழில் செய்து வரும் இவர் அம்மாவுடன் இருக்கிறார். மிகவும் ஏழ்மை யான குடும்பம். பெயர் அச்சிடாத யூனிபார் முடன் நுழைந்த காவலர்கள் அன்சாரியை இழுத்து சென்றிருக்கிறார்கள்.

இதுபோக 35 வயதான மாமூன் கலாம் மற்றும் 38 வயதான முசாரப் ஹுசைன் முசா பூர்நகரின் கிராமங்களிலிருந்து நள்ளிரவில் இழுத்து செல்லப்பட்டிருக்கிறார்கள். 29 வயதான முசாபர் நகரை சேர்ந்த மைனூல் மொந்தால் கேரளாவில் புலம்பெயர் தொழிலாளியாக இருக் கிறார். இவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மொத்தமாக NIAவால் கைது செய்யப்பட்ட வர்கள் முழுக்க ஏழ்மை குடும்பத்தை சார்ந் தவர்களாக இருக்கிறார்கள். இவர்களால் சட்ட உதவியை கூட பெறுவதற்கு பொருளாதாரம் கிடையாது.



Leu Yean Ahmed's mother sitting at the door of their house.




Leu Yean Ahmed after his arrest, wearing the 'locally-made bullet prooft vest'

உண்மை கண்டறியும் குழுவின் ஆய்வு முடிவில், NIAவால் கைது செய்யப்பட்டிருக்கும் நபர்கள் யாரும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. அதே போல் அப்பகுதியின் முக்கிய அதிகாரி களிடம் விசாரித்த போதும் இப்பகுதிகளில் தீவிரவாதம் தொடர்பான எந்த நிகழ்வும் உளவுத் துறையிடமிருந்தும் பதிவு செய்யப்பட்டதில்லை என்று கூறுகிறார்கள். கைது நடவடிக்கை திட்ட மிட்டு நள்ளிரவில் நடத்தப்படுகிறது. கைது செய்ய உடன் வரும் காவலர்கள் யார் பெயரும் சீருடைகளில் இல்லை.

அதிகாரிகள் மனிதாபிமானம் இல்லாமல் கைது செய்யப்பட்டவரின் குடும்பத்தை சேர்ந்த வர்களையும் தாக்கியிருக்கிறார்கள். வெற்று காகிதங்களிலும் வெற்று பாலீதின் பைகளிலும் கைது செய்யப்பட்ட குடும்பத்தாரிடம் மிரட்டி கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள்.

NIA வுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார வரம்பை கண்காணிக்க வேண்டும், இந்த சம்பவம் தொடர்பாக முதல்வர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மேலும் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் உண்மை கண்டறியும் குழுவினர்.

## NIA வின் நாடகத்தின் உச்சம்


கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் மிக மோசமானவர்கள் போல சித்தரித்தது NIA. ஒருவரது வீட்டில் தீவிரவாதிகளை, குண்டுகளை பதுக்கி வைக்கும் சுரங்கம் என்று பழி. ஆனால் அது கழிப்பறை கட்டுவதற்காக வெட்டப்பட்ட குழி. ஒருவது வங்கி கணக்கில் தீவிரவாத பண பர்வத்தனை என்று பழி. ஆனால் அவருக்கு சொந்தமாக தனி வங்கிக்கணக்கு கிடையாது, தந்தையின் பெயருடன் வைத்திருக்கும் வங்கி கணக்கிலும் மாதம் அரசு தரும் 1500 ரூபாய் உதவித் தொகை தவிர வேறு எதுவும் கிடையாது, ஒருவரது வீட்டில் கையால் செய்யப்பட்ட புல்லட் ப்ரூஃப் உடை என்று பழி.

ஆனால், அது அவர் தனது எலக்ட்ரிக்கல் வேலைக்கு பயன்படுத்தும் அவர் வேலை சார்ந்த இரும்புக்கவசம். இப்படி NIAவின் கைது நட வடிக்கைகளில் எந்த உண்மையும் இல்லை என்பதை உண்மை கண்டறியும் குழு வெளிப் படுத்தியிருக்கிறது.

## ஏன் கைது நடவடிக்கைகள்?

இன்று இந்தியாவில் அதிகம் பிஜேபியால் பிரச்சனைக்குரிய மாநிலாமாக பார்க்கப்படுவது கேரளாவும், மேற்கு வங்காளமும் தான். இணைய தளங்களில் இந்த இரண்டு மாநிலங்களை குறி வைத்து தான் பாஜக ஆதரவாளர்கள் பொய்ச் செய்திகளை உருவாக்கி வெளியிடுகிறார்கள். அதனால் தீவிரவாத நடவடிக்கைகள் என்று பிரச்சனை கிளப்பும் போது மத்திய அரசின் ஆதிக்கம் கண்டிப்பாக வந்து விடுகிறது, அதனால் மொத்த அரசுக்கும் களங்கம் கற்பிக்க முடியும்.

அதனுடன் தொடர்ச்சியாக முஸ்லிம்களை அச்சத்திற்கு உள்ளாக்குவதற்காக இந்த கைது நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது. இந்த கைது நடவடிக்கை முசாபர்நகரின் மூன்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிரா மங்களை குறிவைத்து நடத்தப்பட்டிருக்கிறது. கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஜலாங்கி கிராமத்தில் 73% முஸ்லிம்கள். ராணி நகர் பகுதியில் 81% முஸ்லிம்கள். தோம்கல் பகுதியில் 90% முஸ்லிம்கள். இப்படி முஸ்லிம் கள் அதிகமாக இருக்கும் பகுதியில் தீவிரவாத செயல்கள் நடைபெறுகிறது என்ற மாயை


The house of Mosaraf Hossein and Atiur Rehman in Murshidabad

உருவாக்கி இந்து முஸ்லிம் பிளவை உருவாக்கவும் இப்படியான கைது நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகிறது.

## மாநில அமைச்சர் கண்டனம்

மேற்கு வங்காள அமைச்சர் சித்திக்குல்லா சௌத்ரி NIAவின் நடவடிக்கைகளை கடுமை யாக விமர்சித்துள்ளார். போர்கால நடவடிக் கைகள் போல NIA அவசர அவசரமாக செயல் பட்டுள்ளது. எந்த விதிமுறையையும் பின்பற்ற வில்லை.

அப்பாவி முஸ்லிம்களை கைது செய்து முஸ்லிம் சமூகத்தை தீவிரவாதத்தின் பெயரில் அச்சுறுத்த நினைக்கிறது என கடுமையாகவே விமர்சித்துள்ளார்.

## தேர்தலுக்காகவே இதெல்லாம்

மேற்கு வங்க தேர்தலுக்காகவே இது அனைத் தும் நடத்தப் பட்டிருப்பதாகவும் சமூக ஆர்வ லர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். NIA நிகழ்த்திய கைது நடவடிக்கைகளில் எல்லாம் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக இருக்கிறர்கள்.

சிஏஏ எதிர்ப்பு போராட்டத்திலும் முன்னனியில் நின்றவர்கள். அஸ்ஸாமை போலவே மேற்கு வங்காளமும் பங்களாதேஷை எல்லையாக பகிரும் நாடு. இங்கே சிஏஏ தொடர்பான அரசியல் பிளவுகள் தொடர்ச்சியாக பாஜகவால் முன்னிறுத்தப்பட்டு வருகிறது,

இதன் தொடர்ச்சியாக முஸ்லிம்களை தீவிரவாத முத்திரையுடன் கைது செய்வதன் மூலம் அவர்களுக்கெதிராக இந்துக்களை ஒன்று திரட்ட வேண்டும் என்ற பாஜக வெறுப்பு அரசியலுக்கு NIA உதவுகிறது என்றே பார்க்கப் படுகிறது.

## NIA வின் முந்தைய கைதுகள்

NIA தமிழகத்திலும் பல இடங்களில் கைது நடவடிக்கை நடத்தியிருக்கிறது. கைது நடவ டிக்கை நடக்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் நமது வைகறை வெளிச்சம் சார்பாக கள ஆய்வு செய்து உண்மையை நமது பத்திரிக்கையில் வெளியிட்டிருக்கிறோம்.

ஒவ்வொரு கள ஆய்விலும், NIA அப்பாவி களையே கைது செய்திருக்கிறது என்பதனை நமது பத்திரிக்கைகள் மூலமாக வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

தமிழகத்தில் நாம் மேற்கொண்ட முயற்சியை மேற்கு வங்காளத்திலும் சிலர் செய்திருப்பதால் உண்மை வெளிவந்திருக்கிறது. NIAவின் தொடர்ச்சியான முஸ்லிம் விரோதப்போக்கை வெளிக்கொண்டு வந்து கொண்டே இருப்போம்

– அபூ சித்திக்

ஆதாரங்கள்

https://thecognate.com/all-nine-accused-are-labourers-non-political-people-apcr-fact-finding-team-on-nias-alleged-al-qaeda-arrests/

https://www.groundxero.in/2020/10/04/nia-operation-in-murshidabad-al-qaeda-operatives-and-apdr-fact-finding-report/http://twocircles net/2020oct13/439395.html

https://clarionindia.net/arrests-of-muslims-by-nia-seen-as-part-of-assembly-poll-build-up-in-bengal/



# தலிபான்களுடனான அமைதி ஒப்பந்தம் இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்காது

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக தலிபான் அமைப்புடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம், இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்காத வகையில் அமையும் என்று அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் தொடர் ஆதரவைப் பெறும் நோக்கில் அப்துல்லா அப்துல்லா கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியா வந்தடைந்தார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரை அவர் தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

இந்நிலையில், அப்துல்லா அப்துல்லா, பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது:

ஆப்கானிஸ்தான் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தலிபான் பயங்கரவாத அமைப்புடன் அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். அந்த ஒப்பந்தமானது இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தாத வகையில் இருப்பது அவசியம்.

அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பிறகு, ஆப்கானிஸ்தான் மண்ணில் செயல்படும் அனைத்து பயங்கரவாத அமைப்புகளும் தங்களது செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆப்கானிஸ்தான் மீதோ மற்ற



நாடுகள் மீதோ எந்தவிதத் தாக்குதலையும் அந்த அமைப்புகள் நடத்தக் கூடாது.

ஆப்கானிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடாக இந்தியா உள்ளது. ஆப்கானிஸ்தானில் பல்வேறு திட்டங்களை இந்தியா செயல்படுத்தி வருகிறது. ஆப்கானிஸ்தானின் வளர்ச்சியில் இந்தியாவுக்கும் முக்கிய பங்குண்டு. அமைதியை ஏற்படுத்துவதற்காக தலிபான்களுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்பது எனது விருப்பம். இது தொடர்பாக இந்தியாதான் முடிவெடுக்க முடியும். அது குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றார் அப்துல்லா அப்துல்லா.

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்கு முழு ஆதரவளிப்பதாக அப்துல்லா அப்துல்லாவிடம் இந்தியா உறுதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மை குடிமக்களின் உரிமை..!

மொழி, கலாச்சாரம், இனம், மதம் என்று பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட மக்களைக் கொண்டிருக்கும் நாடு., பன்முகத் தலைமைக் கொண்ட நாடு, வேறுபாட்டில் ஒற்றுமை உள்ள நாடு, மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சியைக் கொண்ட நாடு. குடிமக்களின் உரிமைகள் பேணும் நாடு இந்தியா என்று நம் நாட்டைப் பற்றி நாம் பெருமையாய் பேசிக் கொண்டாலும் செயலில் உண்மை இருக்கின்றதா என்று பார்த்தால் உண்மையை ஏற்றுக் கொள்பவர்கள் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட மதத்தவர்கள் மீது நடத்தப்படும் கலவரங்கள் மதத் துவேசங்கள், குறிப்பிட்ட இனத்தவர், ஜாதியினர் மீது ஒருசில பண முதலைகளின் வளர்ச்சிக்காக வழங்கப்படும் சலுகைகள், நேர்மையற்ற திறனற்ற ஆட்சியாளர் களின் ஆட்சி முறையால் அப்பாவி குடிமக்கள் மீது நிகழ்த்தப்படும் வரிச்சுமைகள், நீதி மறுக்கப்படுதல், மாற்றப்படுதல், உயிர் உடமைகளுக்குப் பாதுகாப் பின்மை. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். உதாரணத்திற்கு சில சம்பவங்கள்...

*1955* ஆம் ஆண்டு நாகா குன்றுகள் (Naga Hills) என்ற வடகிழக்கு பகுதியில் பழங்குடி மக்களின் இரத்தத்தை ஆறாக ஓட்டியது இந்த இராணுவம்தான். இந்த கொலை வெறி 'நாகா'வில் பிரிவினைவாதிகள் தலையெடுத்து விடாமல் தடுப் பதற்கு என்றோம். அப்போது, இந்த கொடுமை களும் சித்திரவதைகளும், ஆங்கிலேயர்கள் நம் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட கொடுமைகளை விடவும், சித்திரவதைகளை விடவும் கொடுமை யானவை, கோரமானவை.

மணிப்பூரில் இராணுவத்தினர் சித்திரவதையின் ஒரு பகுதியாக பெண் சமூக உரிமை ஆர்வலரைக் கற்பழித்தார்கள். அதற்கு எதிராக பெண்கள் முழு நிர்வாணப் போராட்டம் ஒன்றை இராணுவ அலுவலகம் முன் நடத்தினார்கள். இந்த அளவுக்கு சாதாரண குடிமக்கள் நொந்து போயுமிருந்தார்கள். மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சியா? – இது என வெதும்புகின்றது மனம்.

*1987* ஜூலையில் நமது இந்திய ராணுவம் மணிப்பூரில் உள்ள ஓனியம் என்ற கிராமத்தின் மீது ஒரு தாக்குதலை நடத்தியது. இது அங்கு இடம்பெற்ற மிகவும் மோசமான ஒரு தாக்குதலாக இன்றளவும் பேசப்படுகின்றது. வீடுகளை தீவைத்துக் கொளுத்துவது, கல்விக் கூடங்கள், தேவாலயங் களை அழிப்பது என்பவை தாராளமாக நிறை வேறின. பெண்களை பொது வெளியில் வைத்து (இதர கிராமத்தவர்கள் முன் வைத்தே) கற்பழித் தார்கள். *14* அப்பாவி கிறிஸ்தவர்கள் மக்கள் முன் னிலையில் கொலை செய்யப்பட்டார்கள். அம் னஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) என்ற சர்வதேசிய ஆணையம் அத்தனை கொடுமை களையும் ஆவணப்படுத்தியது. *30* ஆண்டுகளா கியும் அந்த கிராம மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

*2004* ஆம் ஆண்டில் தஞ்ஜாம் மனோரமா தேவி என்ற பெண்மணி (வயது *32*) நடு இரவில் தனது வீட்டிலிருந்து இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டார். மூன்று நாட்களுக்குப் பின் அவளுடைய உடல் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில் அவருடைய வீட்டுக்கு அருகில் கிடந் தது. அவளுடைய மறைவிடத்தில் பல குண்டுகள் பாய்ச்சப்பட்டு இருந்தன. இது அவள் கற்பழிக்கப் பட்டிருப்பதை மறைப்பதற்கு என பின்னர் தெரிய வந்தது. அவளது குடும்பத்தவர்கள் இன்னும் நீதிக் காக காத்திருக்கின்றார்கள்.

*2006* ஆம் ஆண்டு மராட்டிய மாநிலம் மும்பு ராவைச் சேர்ந்த இர்ஷத் ஜஹான் என்ற பெண் மணிக்கும் இதுவே நடந்தது. அவளைக் கற்பழித் துக் கொலை செய்த காவல்துறையினர் தண்டிக் கப்பட்டார்கள். ஆனால் பின்னர் மோடியால் விடுதலை செய்யப்பட்டு, உயர் பதவிகளும் வழங்கப்பட்டன. இதுதான் பாசிசம்.

கஷ்மீரில் உள்ள முஸ்லிம்கள் தங்களிடமிருந்து அழைத்துச் செல்லப்பட்ட மகன்களை, கணவன் களை எங்கே இருக்கின்றார்கள் என கேட்டு இது வரை *15,000* (*2009* புள்ளி விவரம்) புகார்களை மனுக்களை நீதி மன்றங்களில் தாக்கல் செய்திருக் கின்றார்கள். ஆனால் எந்த நிவாரணமும் கிடைக்க வில்லை. கஷ்மீரில் நீண்ட நாட்களாகவே இந்தச் சித்திரவதைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு கணிப்பின்படி *70,000* இளைஞர்கள் அங்கே காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டி ருக்கின்றார்கள். (Front Line, 20th July 2018)

அவற்றை நாம் கஷ்மீரின் பாதி விதவைகள் என்ற நூலில் ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கின் றோம். வாசகர்கள் அதனை வாங்கிப் படிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம். (மேலும் விபரங்களுக்கு படிக்கவும், இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்கள் – வேர்கள் பதிப்பகம்)

*2014 முதல் 2017 வரை 3000 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இதில் 2300 தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவும், 700 தாக்குதல்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்டுள்ளன.*

*2018 ஆண்டு பீகாரில் 13 மாவட்டங்களும், ராஜஸ்தானில் 3 மாவட்டங்களும், மேற்கு வங்கத்தில் 3 மாவட்டங்களிலும், மதக் கலவரங்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.*

மொத்தம் *124* மத குண்டர்கள் செய்த கும்பல் கொலைகளால் முஸ்லிம்கள் *– 561*, தலித் மக்கள் *10%* ஆதிவாசி பழங்குடியினர் *3%*, பிற்படுத்தப்பட்ட மக்கள் *9%*, சீக்கியர்கள் *5%*, அடையாளம் தெரியாதோர் *18%* மரணித்துள்ளனர்.

*கிறிஸ்தவர்கள் வாழ்வதற்கு ஆபத்தான நாடுகளின் பட்டியலில் 2014 ஆண்டு 35–வது இடத்தில் இருந்த இந்தியா 10வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.*

சிறுபான்மை மக்கள் இந்திய மக்கள் தொகையில் *21%* இருந்தாலும், சிறுபான்மை அமைச்சகத்திற்கு *0.14%* மட்டுமே நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த சொற்ப நிதியும் முழுமையாக செலவழிக்கப்படுவது இல்லை. (தீக்கதிர், அக்டோபர் – 24,2020)

இப்படிப்பட்ட கொடுமைகள் இந்தியாவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும் தன் சொந்த குடிமக்களையே துன்புறுத்துகின்ற அவலங்கள் நடைபெறுகின்றன. இதற்கு முக்கியக் காரணம் மனிதன் மனிதனின் மீது ஆட்சி புரிவதே! இதற்கு மாறாக, மனிதன் மீது இறைவனின் ஆட்சி ஏற்படுத்த வேண்டும். இறைவனுக்கு அஞ்சி நடைபெறுகின்ற ஆட்சியில்தான் மக்கள் உரிமைகள் பேணப்படும். இஸ்லாமிய ஆட்சியில் மட்டும்தான் அனைத்துத் தரப்பு மக்களும் நிம்மதியாக தங்கள் உரிமைகள் பேணப்பட்டும் வாழ்ந்ததை நாம் பார்க்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

*(இஸ்லாமிய அரசுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டு அதன்கீழ் வாழ்ந்து வரும்) ஓர் ஒப்பந்தப் பிரஜையைக் கொன்று விடுபவன் சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகர மாட்டான். அதன் நறுமணமோ நாற்பதாண்டுப் பயணத் தொலைவிலிருந்தே வீசிக் கொண்டிருக்கும். இதை அப்துல்லா பின்அம்ர்(ரழி) அவர்கள்அறிவிக்கிறார்கள்.(புகாரி)*

*'ஓர் அடியானுக்குக் குடிமக்களின் பொறுப்பை அல்லாஹ் வழங்கியிருக்க, அவன் அவர்களது நலனைக் காக்கத் தவறினால், சொர்க்கத்தின் வாடையைக் கூட அவன் பெறமாட்டான்' (புகாரி)*

அபூபக்ர் (ரழி) அவர்களுடைய காலத்தில் 'ஹய்ரா'வாசிகளோடு ஃகாலித் இப்னு வலீத் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் *'அவர்களுடைய வழிபாட்டிடங்களோ, தேவாலயங்களோ நிர்மூலமாக்கப்பட மாட்டாது. பகைவர் தாக்குதல்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக அவர்கள் எழுப்பியுள்ள கோட்டைகளில் எந்த ஒன்றும் தகர்க்கப்பட மாட்டாது, ஆலயமணி அடிக்க அவர்களுக்கு தடை விதிக்கப்படாது, பண்டிகை நாளன்று சிலுவைப் புறப்பாட்டுக்கும் தடையிராது.'*

ஒரு யூதரின் சடலம், இறுதி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டபோது, நபிகள் நாயகமும் தோழர்களும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். "அது ஒரு யூதரின் சடலம்தானே?" என ஒரு தோழர் கூற, "அதுவும் இறைவன் படைத்த ஆன்மாதான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

கலீபா உமரின் ஆட்சியில், ஈராக் நாட்டில் இருந்த ஏசுநாதர் சிலையின் மூக்கு சிதைக்கப்பட்டது. கிறிஸ்துவர்கள் கலீபாவிடம் முறையிட்டனர். ஒரு வார காலத்தில குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாவிடில், பொது இடத்தில் வைத்து நீங்களே என் மூக்கைச் சிதைக்கலாம் என்றார். குறித்த காலக்கெடுவுக்குள் குற்றவாளியைப் பிடிக்க முடியவில்லை. கலீபா உமர் தன் மூக்கை சிதைக்குமாறு கிறிஸ்தவ மக்கள் முன்பு வந்து நின்றார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த இளைஞன், ஏசுவின் சிலையை தானே சிதைத்ததாகவும், இஸ்லாமிய ஆட்சியில் கிறிஸ்தவர்களின் உரிமை மதிக்கப்படுகின்றதா என்பதைச் சோதிக்கவே அவ்வாறு செய்ததாகவும் ஒப்புக் கொண்டான்.

உமர் (ரழி) அவர்கள் கூறியதாவது ;

*(எனக்குப் பின் வருகின்ற புதிய) கலீபாவுக்கு நான் உபதேசிக்கின்றேன். அல்லாஹ்வின் பொறுப்பிலும், அவனது தூதர் (ஸல்) அவர்களின் பொறுப்பிலும் உள்ள (முஸ்லிமல்லாத)வர்களின் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும். (அதன்படி) அவர்களைப் பாதுகாப்பதற்காகப் போரிட வேண்டும். அவர்களுடைய சக்திக்கேற்பவே தவிர (ஜிஸ்யா எனும் பாதுகாப்பு வரியின் பாரத்தை அவர்கள் மீது சுமத்தக்கூடாது) (புகாரி)*

*நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுகிறவர்களாக (உண்மையின் மீது) நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள். ஒரு கூட்டத்தார் மீது (நீங்கள் கொண்டு) ள்ள பகையை நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே, இறையச்சத்திற்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (அல்மாயிதா : 8)*



# இந்திய பிரிவினையின் முதல் மூளை சாவர்க்கர்

அமித்ஷாவின் ‘சாவர்க்கர் பாசம்’ அகிலம் அறிந்த ஒன்று. அவரது வீட்டில் நிரந்தர மாகவே ஒரு சாவர்க்கர் வரைபடம் உண்டு. எப்போதும், அதன் முன்னால் அமர்ந்தபடிதான், போட்டோவுக்கு போஸே கொடுப்பார் மனிதர்.

ஆக, விஷயம் தெளிவாகிறது. சாவர்க்கரை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கான வேலைகள், வேகமெடுத்துவிட்டன.

ஏற்கெனவே, ‘ரூபாய் நோட்டில் சாவர்க்கர் படத்தைப்பொறிக்கவேண்டும்’என்றகோரிக்கை வேறு நிறைய ஆண்டுகளாக நிலுவையில் இருக் கிறது. அதுவும் இனி மேலெழுந்து வரக்கூடும். இதன் ஆபத்தை நாம் எந்தளவுக்கு உணர்ந்திருக் கிறோம் என்று தெரியவில்லை. ஏனென்றால், சாவர்க்கருக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் என்பது, வெறுமனே அவருக்கான அங்கீகாரம் மட்டுமல்ல. அது, அவரது கோட்பாட்டுக்கு அளிக்கப்படும் அங்கீகாரமும்கூட.

இந்த நேரத்தில், சாவர்க்கர் யார், அவரது அரசியல் எப்படிப்பட்டது, அவர் பாடுபட்டது யாருக்காக என்பதையெல்லாம், விரிவாகப் பேச வேண்டியது அதிஅவசியமாகிறது.

இல்லையென்றால், நாளைக்கு ரூபாய் நோட் டில் காந்திக்குப் பதில் சாவர்க்கர் சிரிப்பதை, வரும் தலைமுறைப் பிள்ளைகள் பார்க்க நேரிடும். அமித்ஷா வேறு ‘வரலாற்றை மாற்றி எழுது வோம்’ என்று பீதி கிளப்பிக் கொண்டிருக்கிறார். ஆகவே,

இப்போது பேசுவதுதான் சரி!.

சாவர்க்கர் ஒரு சிந்தனைவாதி என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அவர் சிந்தனைவாதிதான்!

ஆனால், அவரது சிந்தனைகள் எதை நோக்கி இருந்தன என்பதுதான் முக்கியமானது. அதையே அதிகம் கவனத்தில் எடுத்து விவாதிக்க வேண்டும். அவரது சிந்தனை என்ன. இந்து ராஷ்டிரம்தான்! அந்த இந்து ராஷ்டிரம் எப்படியிருக்கும் அவரே அதை விவரிக்கிறார்... ‘எவரெல்லாம் இந்து மதத் தைச் சார்ந்தவர்கள் இல்லையோ, அவர்களெல் லாம் இந்தியர்களும் அல்ல’.

ஒரு தேசியத்துக்கு கொடுக்கப்படும் `Mother land, Fatherland' என்ற கருத்துரு வாக்கங்களைத் தாண்டி, 'Holy land' என்ற கருத்துருவாக்கத்தை கொண்டுவந்து வைக்கிறார் சாவர்க்கர். அவரது அந்தத் தத்துவத்தின்படி, இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் இந்தியர்கள் அல்லர். ஏனென் றால், அவர்களின் புண்ணியபூமி அரேபியா விலும் பாலஸ்தீனத்திலும் இருக்கிறது என்பது அவரது வாதம்.

இதைத்தான் *1905* தொடங்கி *1966* வரை

வெவ்வேறு வார்த்தைகளில் பேசிக்கொண்டிருந் தார் அவர். அதாவது, அவர் மரணத்தைத் தழுவும் வரை அதிலிருந்து மாறவே இல்லை. கடைசிக் காலங்களில், 'இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்து பெண்களைச் சூறையாடியதைப் போலவே, இந் துக்கள் இஸ்லாமியப் பெண்களைச் சூறையாட வேண்டும்' என்று சொல்லும் அளவுக்குக்கூட அவர் இறங்கியிருக்கிறார்.

மத அடிப்படைவாதத்தில் அவரது மனம் எந்த அளவுக்கு கெட்டித்தட்டிப் போயிருந்தது என்பதற்கான உதாரணம், அந்த வார்த்தைகள்.

காந்தி 'Power to people' என்று சொன்னார் என்றால், சாவர்க்கர் அதிலிருந்து அப்படியே வேறுபட்டு 'Power over people' என்று சொன்னார். அதாவது, மக்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதை அப்பட்டமாக ஆதரித்தவர் சாவர்க்கர்.

போதாக்குறைக்கு, இந்தியாவை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு ராணுவ தேசமாக உருவகித்தார் சாவர்க்கர். அதனால்தான் அவருக்கு ஜெர்மனி பிடித்தது.

பின்னாளில், இஸ்ரேலும் அவரது மனதைக் கவர்ந்ததற்குக் காரணம் அதுவே. இந்தியாவை காலனியாதிக்கத்தின் கண்கள் கொண்டு பார்த்தவர் சாவர்க்கர்' என்று சில ஆய்வாளர்கள் சொல்வது, அதனாலேயே!

இந்துத்துவத்தை கண்டுபிடித்தவர் சாவர்க்கர் தான்!

விவேகானந்தரும் அரவிந்தரும் திலகரும் 'இந்துயிஸம் (Hinduism)' என்று பேசியதை, 'இந்துத்துவம் (Hindutva)' என்ற இடத்துக்கு நகர்த்தியவர் சாவர்க்கர். இந்துயிஸத்தை, இந்து மதத்தைப் பின்பற்றுவது, அதைப் பற்றி பேசுவது, அதன் தத்துவங்களை பரப்புவது என்று வரை யறுக்கலாம்.

ஆனால், இந்துத்துவம் அப்படியல்ல. அது, இந்துக்களை ஒருங்கிணைப்பது, ஒருங்கிணைத்து ஓர் இந்து சமுதாயத்தைக் கட்டமைப்பது! அதாவது, இந்துயிஸம் இந்துக்களை ஒரு மதமாகப் பார்த்தால், இந்துத்துவா ஓர் இனமாகப் பார்க்கும். அந்த இனத்தின் ஆதிக்கத்துக்குள் அது தேசத்தைக் கொண்டு வரும். அந்தத் தேசத் தில், சிறுபான்மை இனத்தவர்கள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படுவார்கள். அவர்களுக் கென்று எந்த உரிமையும் இருக்காது.

இதை நோக்கியே, அந்த 'Holy land' என்ற பதத்தை வெகு சாதுரியமாகப் பயன்படுத்தினார் சாவர்க்கர்.

இந்தியாவை முழுவதுமாக 'இந்துமயமாக்கு வதே' சாவர்க்கரின் நோக்கம். அதற்காக, படை உருவாக்குவது, அந்தப் படையை மக்கள் மேல் செலுத்தி அவர்களை ஆளும் அதிகாரத்தை அடைவது, அந்த அதிகாரத்தின் வழியே, நாடு முழுவதும் ஒற்றைத்தன்மையைக் கொண்டு வருவது என்று, தெளிவாக வரைபடம் வரை கிறார் சாவர்க்கர்.

"Hinduise all politics, Militarize Hinduism' என்ற பதத்தை அவர் அடிக்கடி பயன்படுத்துகிறார். இந்த ஒருங்கிணைத்தலை செய்ய அவருக்கு ஒரு எதிர்த்தரப்பு தேவைப்பட்டது. அதனால்தான், இந்து அல்லாதவர்களை, அதாவது இஸ்லாமியர் களை, கிறிஸ்துவர்களை "Others' என்று அழைத்து,

"Self' எனப்படும் இந்துக்களின் எதிரிகளாகக் கட்டமைக்கிறார் அவர். ஜைனர்கள், சீக்கியர்கள், பௌத்தர்களைக்கூட அவர் ஓரமாகவே நிறுத்து கிறார். அதுவும், அன்பையும் சமத்துவத்தையும் போதித்த பௌத்தத்தை, இஸ்லாம் கிறிஸ்து வத்துக்கு இணையாக வெறுக்கிறார்.

அவருடைய, 'Hindutva : Who is a Hindu' புத்தகம், ஏறக்குறைய ஹிட்லரின் 'Mein kampf' புத்தகத்துக்கு இணையானது!

சாவர்க்கரின் இந்து ராஜ்ஜியத்தின் இன் னொரு ஆபத்து, அது இந்து சமுதாயத்தையே பிளவுபடுத்திப் பார்க்கிறது என்பது. இதற்கு, சாவர்க்கர் அவ்வளவு பெரிய சனாதனவாதியும் அல்ல. கடவுள் நம்பிக்கையும்கூட அவருக்கு குறைவுதான்.

Agnostic வகையைச் சேர்ந்தவர். அவரின் மனைவியும் மகனும் இறந்தபோது கூட, அவர் மதச்சடங்குகள் ஏதும் செய்யவில்லை. ஆனால், சாவர்க்கர் கோயில்கள் கட்ட குரல் கொடுத் திருக்கிறார். 1939−ல் டெல்லியில் சிவன் கோயில் ஒன்று இடிக்கப்பட்டபோது, அதை எதிர்த்தவர் களுள் சாவர்க்கர் முக்கியமானவர்.

அதில் கிடைத்த வெற்றியைப் பெருமளவில்

கொண்டாடியவர் சாவர்க்கர். 'இது போன்ற நடவடிக்கைகளே இந்து மக்களை ஒருங்கிணைக்கும்' என்று அருகிலிருப்பவர்களிடம் சொல்லி மகிழ்கிறார்.

கடவுளையே வணங்காதவர், கோயில் கட்டுமானங்களை ஏன் ஆதரித்தார் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். காரணம் அதுவேதான். அது, அவருக்கு ஓர் அரசியல் ஆயுதம்!

இந்துத்துவத்தின் தந்திரமே அதுதான். அதற்கு, மதம் என்பது மக்களை அடக்கியாளும் ஓர் அரசியல் கருவி மட்டுமே. அதைக் கடந்து யோசிப்பதற்கு இந்துத்துவத்தில் எந்த இடத்தையும் ஏற்படுத்தி வைக்கவில்லை சாவர்க்கர்.

சாவர்க்கரின் இந்து சமுதாயமும் எப்படிப்பட்டது தெரியுமா? உயர்சாதி இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவதாகவே அது இருக்கும். ஏனென்றால், இந்து சமுதாயத்தின் அடித்தளமாக 'வர்ணப் பாகுபாடு' இருக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல் கிறார் சாவர்க்கர்.

அந்த இந்து சமுதாயத்தின் முக்கிய மொழிகளும்கூட இந்தியும் சம்ஸ்கிருதமும்தான். கடவுளர்களும்கூட கிருஷ்ணனும் ராமனுமே. 'பழங்குடி மக்கள் தங்களின் குலதெய்வத்தை துறந்துவிட்டு, ராமவழிபாட்டுக்கு மாற வேண்டும்' என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்

சாவர்க்கர். 'வறண்டு கிடந்த இந்து மதத்தை, சாதிதான் செழிப்பாக்கியது' என்று சொல்லுபவராகவும் இருந்தார் அவர்.

அவரது தீண்டாமை ஒழிப்பு முழக்கங்கள் எல்லாமே, வெறும் பாவ்லா மட்டுமே. ஆங்கிலத்தில் "Escapism' என்று அதைச் சொல்வார்கள். வெற்று, தப்பித்தல்வாதம்! இது போதாதென்று, கறுப்பு நிறத்தவர்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்வதிலும் அவருக்கு தயக்கம் இருந்தது.

இந்து பெண்களைப் பற்றியும் எங்கும் பெரிதாகப் பேசுவதில்லை சாவர்க்கர். 'அவர்களின் கடமை அடுப்பங்கறை, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதல் மட்டுமே' என்பது சாவர்க்கர் கொண்டிருந்த எண்ணம்.

இத்தகையவரைத்தான், தனது அணிகலனாக இந்தியத் தாய் சூட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தாலும், அவரை அங்கீகரிப்பதற்கு மூன்று இடையூறுகள் இருக்கின்றன. முதலாவது, அடிமைப்படுத்திய ஆங்கிலேயனிடமே 'நான் உங்கள் சேவகன்' என்று அவர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தார்.

இரண்டாவது, 'இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன' என்று ஜின்னாவுக்கு பாயின்ட் எடுத்துக்கொடுத்ததும்கூட அவரேதான்.

மூன்றாவதுதான் மிக முக்கியமானது. அதாவது, தேசப்பிதா காந்தி கொலைக்குத் தூண்டுதலாக இருந்ததாக அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

1911−ம் ஆண்டு ஜூன் மாதம், அந்தமான் செல்லுலார் சிறையை வந்தடைகிறார் சாவர்க்கர். நாசிக் மாவட்ட நீதிபதி ஜாக்சன் கொலைக்கு, அவர் தூண்டுதலாக இருந்தார் என்பது வழக்கு. அப்போது, 'ஆபத்தான கைதி' என்று அவருக்கு அடையாளம் இடப்பட்டது உண்மைதான். 'ஈ' என்பது அந்த கோட்வேர்ட். ஆனால், சாவர்க்கர் ஒன்றும் அவ்வளவு ஆபத்தானவராக ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை என்பதுதான் முரண்பாடு.

சாவர்க்கர் 1924−க்கு முன்பு மன்னிப்புக் கடிதம் எழுதினார் என்பதுதானே, நாம் அறிந்தது. ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட சில மாதங்களிலேயே, ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார் சாவர்க்கர். 1911−லேயே அவர் ஒரு கடிதம் எழுதினார். அது இப்போது கிடைப்பதில்லை. ஆனால், 1913 அவர் அனுப்பிய மற்றொரு கடிதத்தில் அந்த முந்தைய கடிதத்தைக் குறிப்பிடுகிறார். கடிதத்தில், 'அடிபணிதல்' வாசகங்கள் பளிச்சென்று இருக்கின்றன.

"To : The home member of the government of India' என்று தலைப்பிடப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில், 'சிறைக் கொடுமைகளை என்னால் தாங்க முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கிறார்கள். அரசு கருணை காட்டி என்னை விடுவித்தால், நான் அரசியலமைப்பின் தீவிர ஆதரவாளனாகச் செயல்படுவேன் என உறுதி கூறுகிறேன். எந்தச் சூழ்நிலையிலும்

அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் அரசே கருணை காட்ட வில்லையென்றால், இந்த மகன் வேறு எங்கே சென்று நிற்பேன்...' என்று சொல்கிறார் சாவர்க்கர்.

சாவர்க்கரைப் போலவே, பகத்சிங்கும் ஒரு கடிதத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எழுதினார். லாகூர் சிறையில் இருந்து 1931–ம் ஆண்டு அவர் அனுப்பிய கடிதம் அது. அதில், 'உங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு, எங்களை போர்க்கைதிகளாக வகைப்படுத்துகிறது. ஆம், நாங்கள் போர்க்கைதிகள்தான். ஆகவே, எங்களை நீங்கள் தூக்கிலிடக்கூடாது. மாறாக, துப்பாக்கித் தோட்டாக்களால் சுட வேண்டும்' என்று, அறிவித்தான் அந்த 23 வயது இளைஞன்.

அடுத்து, 'இந்தப் போர் தொடரும்' என்று அறிவித்துவிட்டு, 'எங்களைக் கொல்லப்போகும் ராணுவ அதிகாரிகளை எப்போது அனுப்பு கிறீர்கள்' என்ற கேள்வியோடு அந்தக் கடிதத்தை முடிக்கிறார் அவர்.

கடிதத்தில் ஓர் இடத்தில், குறித்துக் கொள்ளுங்கள். முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் நாள்கள் எண்ணப்படுகின்றன. ஒருநாள் இங்கு, சோசியலிஸ சமுதாயம் மலரும்' என்று கர்ஜிக்கிறான், அந்த மாவீரன்.

கடிதம் முழுவதுமே, அப்படித்தான். அதிகமும் தேசத்தைப் பற்றித்தான் பேசுகிறார் பகத்சிங். இதற்கு லாகூர் சிறையும் ஒன்றும் சொகுசு சிறையல்ல. ஆனாலும், பகத்சிங் அதைப் பற்றியெல்லாம் கவலைகொள்வதில்லை.

உதிரம் முழுவதும் விடுதலை வேட்கை ஓடும் ஒருவனின் வார்த்தைகள் எப்படியிருக்குமோ, அப்படியிருக்கின்றன பகத் சிங்கின் வார்த்தைகள்.

உறைவிட்டெழும் வாளென, நாண் தொட்டு புறப்படும் அம்பென பாய்கின்றன, அவன் சொற்கள்!

அப்படியே சாவர்க்கரின் வார்த்தைகளையும் பார்க்கவும். 'நான் இப்படியெல்லாம் கஷ்டங்களை அனுபவிக்கிறேன்... கருணை காட்டுங்கள். நல்ல படியாக நடந்துகொள்வேன்' என்றெல்லாம் அந்நியனிடம் பணிகிறார் சாவர்க்கர்.

இவர் எப்படி பாரதத்தின் ரத்தினம் ஆவார்? 'நீங்கள் என்னை விடுவித்தால், இந்தியாவில் உங்கள் புகழ் பெருகும்' என்றெல்லாம்கூட ஆங்கிலேயர்களிடம் உருகியிருக்கிறார் சாவர்க்கர்.

1924–ல் அவரது விடுதலைக்குக் காரணமான மன்னிப்புக் கடிதம், இன்னும் உக்கிரமானது. 'என்னை விடுவித்தால் நான் உங்களுக்கு நல்ல சேவகனாக இருப்பேன்' என்று அதில் பட்டயமே எழுதித் தருகிறார் சாவர்க்கர்.

'நான் எவ்வளவு நன்றாக நடந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு நன்றாக நடந்து கொள்கிறேன்.' என்றும் கூட வாக்குறுதி அளிக்கிறார். வெளிவந்த பின், அவர் அதைத்தான் செய்தார். சிறையிலிருந்து வெளியேவந்த பிறகுதான் "Hindutva : Who is a Hindu' புத்தகத்தையே எழுதினார்.

அது, இந்தியாவை பிரித்தாளத் துடித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷாருக்கு ஒரு கையேடாகவே உதவியது. ஜின்னாவுக்கும் அது ரெஃப்ரன்ஸாக மாறியது.

1926–ல் சாவர்க்கரைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் அது. பெயர், "Life of Barrister Savarkar'. அதை எழுதியவரின் பெயர் சித்திரகுப்தன். விநோதம் என்னவென்றால், அந்த சித்திர குப்தனே சாவர்க்கர்தான். ஏனென்றால், அந்தச் சித்திரகுப்தன் அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எந்தப் புத்தகமுமே எழுதவில்லை.

எழுதிய ஒரே புத்தகம் சாவர்க்கருடைய வரலாறு மட்டும்தான். சுயவரலாறு எல்லோரும் எழுதுவதுதான். ஆனால், அதை அவர்களின் பெயரில் எழுதுவது அல்லவா உலக வழக்கம்! தனது படத்தை தானே வணங்கிய நித்யானந்தாவைப்போல, தன்னைப் பற்றி தானே புகழ்ந்து எழுதியவர் சாவர்க்கர்.

இதுதான் அவரது நேர்மை!

'அவர் ஏன் மன்னிப்புக் கேட்டார் தெரியுமா? தேசப் பணிக்காகவே அதைச் செய்தார்' என்கிறார்கள் சிலர். அப்படி மன்னிப்புக் கேட்டு வெளியே வந்து சாவர்க்கர் செய்த மாற்றங்கள் என்று எதுவுமில்லை. ஆங்கிலேயனை எதிர்க்கும் எந்தச் செயல்களையுமே அவர் முழுவீச்சில் செய்யவும் இல்லை.

மழைக்கு பயந்து எலி வளைக்குள் ஒடுங்கிக் கொள்வதைப்போல, ஒடுங்கிக் கொண்டார். ஆங்கிலேயன் இந்தியாவைவிட்டு விலகும் வரை, அவருக்கு மழைக்காலம் போகவே இல்லை. காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்தபோது, அதிலிருந்து விவரமாக விலகி நின்றவர் சாவர்க்கர். இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

'காந்தி 4 வருடங்கள்தான் சிறையில் இருந்தார். ஆனால், சாவர்க்கர் 14 வருடங்கள் சிறையில் இருந்தார். அப்படியென்றால், யார் பெரிய தேசபக்தர்' என்றும் கேட்கிறார்கள். இதில் இருக்கும் தகவல் சரி, ஆனால், பார்வை தவறு. காந்தி ஒரே முறையாக 4 வருடங்கள் சிறையில் இருக்கவில்லை. மொத்தம் பதினொரு முறை அவர் சிறைக்குச் சென்று திரும்பினார்.

தென்னாப்பிரிக்கச் சிறைகளும் அதில் அடக்கம். ஒன்றை நோக்கவும். ஒவ்வொரு முறையும் ஒரு போராட்டம், அதில் விசாரணை, அதற்குப் பிறகு தண்டனை என்று சிறை சென்றவர் அவர். அவர் சிறை சென்றபோதெல்லாம், மக்கள் கொதித்தெழுந்தார்கள். காந்தியை விடுவிக்கக்கோரி போராடினார்கள். அவரும் தன் பங்குக்கு சிறை சீர்திருத்தம் என்று களமிறங்கினார்.

ஆக, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு கண் முன்னால் இருந்த ஒரே வழி, காந்தியை விடுவிப்பது மட்டும்தான். ஒரு தடவை, நான்கு நாள்களுக்குள் மூன்று முறை காந்தி கைது செய்யப்பட்டு திரும்பத் திரும்ப விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

அந்தளவுக்கு ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குபவராக இருந்திருக்கிறார் காந்தி!

தென்னாப்பிரிக்காவில் காந்தி சிறைத் தண்டனை முடிந்து வெளியே வந்தபோது, காந்தியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் வாசலில் திரண்டு நின்றார்கள் என்பது வரலாறு. அவர் பின்னால் எப்போதுமே மக்கள் இருந்தார்கள். ஏனென்றால், அவர், அவர்களின் மனங்களில் இருந்தார்.

75 வயதிலும்கூட சிறைக்குச் செல்லும் துணிவை, அவருக்கு அளித்தது அந்த மக்களின் அன்புதான்!

ஆனால், சாவர்க்கர் விவகாரம் அப்படியல்ல. அவருக்காக யாரும் இங்கே கொதித்தெழவில்லை.

சாவர்க்கரை விடுவிக்கக்கோரி ஒரு போராட்டம் கூட இங்கே நடக்கவில்லை. ஏன், அவரது தரப்பினரே கூட அவரை மறந்து விட்டிருந்தார்கள்.

சாவர்க்கருக்கும் மக்கள் செல்வாக்குக்கும் காத தூரம். சாவர்க்கர் என்றொருவர் இருக்கிறார் என்பதையே மக்கள் அறிந்திருக்கவில்லை. அறியும் அளவுக்கு சாவர்க்கரும் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை. அவர் பேசியதெல்லாம் வன்முறை, வெறுப்பு, பிரிவினை மட்டும்தான். சிறைக்குள்ளேயும் அவர் அதைத்தான் செய்தார்.

கைதிகளை இஸ்லாமியர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்த்து வேலையைக் காட்டினார். இது, அவர் எழுதிய அந்தமான் சிறை அனுபவங்கள் புத்தகத்திலேயே பதிவாகியிருக்கிறது. 'இஸ்லாமியர்களின் தொழுகை நேரத்தில், சங்கநாதம் எழுப்புங்கள் என்று இந்துக்களை அவர் தூண்டினார்' என்று, அவரது ஆதரவாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலே, 'நான் நெருப்புடன் விளையாடுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை நான் தொடர்ந்து செய்வேன்' என்று, ஆங்கிலேயனின் நீதிமன்றத்தில் நெஞ்சம் நிமிர்த்தி அறிவித்தவர் காந்தி!

ஜின்னாவுக்கு முன்பே, இரண்டு தேசங்கள் கோட்பாட்டை முன்மொழிந்தவர் சாவர்க்கர் தான். நன்றாகக் கவனிக்கவும். ஜின்னாவை வழிமொழிய வில்லை சாவர்க்கர். அவர்தான் முன்மொழியவே செய்கிறார்.

அந்த "Holy land' கருத்தாக்கத்திலேயே, இரண்டு தேசங்களுக்கான அடித்தளம் போடப்பட்டுவிட்டது. அதையே, பின்னாளில் அரசியல் வெளியில் விரித்தெடுத்தார் ஜின்னா.

அதாவது, கல்லை உரசி நெருப்பைப் பற்ற வைத்தார் சாவர்க்கர். ஜின்னா அதை ஊதிப் பெரிதாக்கினார். அவ்வளவுதான்.

உண்மையில் 1939–ம் ஆண்டு லாகூர் மாநாட்டில்தான், 'இரண்டு தேசங்கள் (பஜ்ர்

Nations)' எனும் தீர்மானத்தையே போடுகிறது, முஸ்லிம் லீக். ஆனால், 1937–ம் ஆண்டே, 'இரண்டு தேசங்கள்' தீர்மானத்தை முன் மொழிந்து விட்டது, இந்து மகா சபா. சாவர்க்கர் அப்போது அதன் தலைவர்.

1937–ம் ஆண்டின் முற்பகுதியில், அகமதா பாத்தில் நடந்த இந்து மகா சபா கூட்டத்தில் பேசிய சாவர்க்கர், 'இங்கே இரண்டு தேசங்கள் இருக் கின்றன. ஒன்று இந்துக்களுடையது, இன்னொன்று முஸ்லிம்களுடையது' என்று பிரகடனம் செய்தார். அந்தப் பிரகடனமே பின்னர் தீர்மானமானது.

அடுத்து காட்சிக்கு வருகிறார், மாதவ சதாசிவ கோல்வால்கர். சாவர்க்கரின் சிஷ்யப்பிள்ளை இவர். கோல்வால்கர் என்ன சொல்கிறார் தெரியுமா?

'இந்துப் பெரும்பான்மை அடையாள அரசி யலே உண்மையான தேசியவாதம். அது அல்லாத எந்த அரசியலும் இந்தியாவுக்கு விரோதமானது' என்று இன்னொரு குண்டைத் தூக்கி வீசுகிறார்.

இவர்களின் இதுபோன்ற கூற்றுகளுக்குப் பிறகுதான், ஜின்னா அதிக நம்பிக்கை கொள் கிறார். 'அவர்களே சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன?' என்று பிரிவினைக்கத்தியை இன்னும் ஆழமாக இந்தியாவின் நெஞ்சில் ஜின்னா இறக்க ஆரம்பித்தது 1940–களுக்குப் பிறகே!

இன்னொரு தகவல். 1945–ம் ஆண்டு இன்னும் எல்லையைக் கடக்கிறார் சாவர்க்கர். 'ஜின்னாவின் இரண்டு தேசங்கள் எனும் கருத் தாக்கத்தில் எனக்கு எந்த முரண்பாடும் தெரிய வில்லை. நாம் இந்துக்கள் ஒரு தேசம், முஸ்லிம் கள் இன்னொரு தேசம்' என்கிறார்.

இங்கே நாம் இன்னொன்றை பார்க்க வேண் டும். இன்றுவரை பெரியாருக்கும் அண்ணாவுக் கும் ஏன் பாரத ரத்னா மறுக்கப்படுகிறது?

எம்.ஜி.ஆரால் அடைய முடிந்த அந்த விருதை அவரின் ஆசான்களான அவர்களால் ஏன் அடைய முடியவில்லை?

இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது ஒரே ஒரு விஷயம்தான். அதாவது, 'அவர்கள் பிரிவினை பேசினார்கள்' என்பது. பெரியாரும் அண்ணாவும் பேசியது பிரிவினை என்றால்,



சாவர்க்கர் பேசியதற்கு பெயர் என்ன? பெரியார், அண்ணாவுக்கு ஒரு நியாயம், சாவர்க்கருக்கு ஒரு நியாயமா? 'அதெப்படி ஒரே விஷயத்தில் இரண்டு நியாயங்கள் இருக்க முடியும்' என்பதே நாம் எழுப்பும் கேள்வி!

கடைசியாக, காந்தி கொலை! காந்தி கொலை யில் சிக்கியவர்கள், மொத்தம் 9 பேர். நாதுராம் கோட்சே, அவரின் சகோதரர் கோபால் கோட்சே, நாராயண் ஆப்தே, விஷ்ணு கர்கரே, மதன்லால் பஹ்வா, ஷங்கர் கிஸ்தயா, தத்தாத்ரேயா பர்சுரே மற்றும் விநாயக் தாமோதர் சாவர்க்கர். இன் னொருவர் இருக்கிறார். அவர் திகம்பர் பாட்ஜே.

இந்த பாட்ஜே மிகவும் முக்கியமானவர். ஏனென்றால், இவரது வாக்குமூலம்தான் கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த தொடர்பை, தெள்ளத்தெளிவாகக் காட்டியது.

பாட்ஜேவின் வாக்குமூலம் இது... '1948 ஜனவரியில் நாங்கள் இருமுறை சாவர்க்கரை சந்தித்தோம். முதல் சந்திப்பு ஜனவரி 14–ம் தேதி நடந்தது. நான், நாதுராம், ஆப்தே மூவரும் பாம்பேயில் இருக்கும் சாவர்க்கர் சதனுக்குச் சென்றோம். இரண்டாவது மாடியில் அவரது அறை இருந்தது. நான் கட்டடத்துக்கு வெளியே நின்றேன். நாதுராமும் ஆப்தேவும் உள்ளே சென்றனர். சிறிது நேரம் கழித்து இருவரும்

வெளியே வந்தனர். 'காந்தியையும் நேருவையும் முடிக்க வேண்டும் என்று அவர் சொன்னதாக கோட்சே என்னிடம் சொன்னார்'.

"Gandhi and Nehru should be finished' என்ற வார்த்தையையே வாக்குமூலத்தில் சொல்கிறார் பாட்ஜே. அந்த ஜனவரி 14-ம் தேதிதான், கோட்சேவின் கைக்கு துப்பாக்கியும் வந்து சேர்கிறது.

அடுத்த சந்திப்பு, ஜனவரி 17-ம் தேதி நடக்கிறது. இப்போதும் அதே மூவர்தான் செல்கிறார்கள். இந்த முறை பாட்ஜே, சதனுக்குள் நுழைந்து, முகப்புப் பகுதியில் நிற்கிறார். 10 நிமிடம் கழித்து கோட்சேவும் ஆப்தேவும் மாடி அறையில் இருந்து வெளியே வருவதை, பாட்ஜே கவனிக்கிறார். அவர்களுக்கு முன்னால் நின்றபடி ஒரு மனிதர் பேசிக்கொண்டிருக்கிறார். அவரது முகம் பாட்ஜேவுக்கு சரியாகத் தெரியவில்லை.

ஆனால், குரல் நன்றாகக் கேட்கிறது. அந்த நபர், மராத்தியில் பேசுகிறார். 'வெற்றியுடன் திரும்புங்கள்' என்று, அவர் இருவர்களிடம் சொல்லும் வார்த்தை பாட்ஜேவின் காதில் விழுகிறது. அடுத்து, ஜனவரி 20-ம் தேதி, காந்தியைக் கொல்லஒருமுயற்சிநடக்கிறது. அதைச்செய்தது, மதன்லால் பஹ்வா. 'விஷ்ணு கர்கரேவால் சாவர்க்கரிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவன் அவன்' என்பது, சாவர்க்கரின் உதவியாளர்களான ராமச்சந்திர காசரும் விஷ்ணு தம்லேவும் அளித்த வாக்குமூலம். ஆனால், அந்த முயற்சி தப்புகிறது. பஹ்வா கைது செய்யப்படுகிறான். ஜனவரி 30-ம் தேதி காந்தி கொல்லப்படுகிறார். கோட்சேவின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட மூன்று குண்டுகள் அதைச் செய்கின்றன.

பாட்ஜேவை 'நம்பகமான சாட்சி (Trustful Witness)' என்றே வரையறுக்கிறார், விசாரணை நீதிமன்றத்தின் நீதிபதி ஆத்ம சரண். ஆனால், அவரது சாட்சியத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், கிடைக்காமல் போகின்றன. இதன் அடிப்படையிலேயே, சாவர்க்கர் விடுவிக்கப்படுகிறார். உண்மையில், கோட்சேவுக்கும் சாவர்க் கருக்கும் இருந்த உறவு குரு - சிஷ்யன் வகையிலானது. இந்து மகாசபா கூட்டங்களுக்கு, கோட்சேவையும் ஆப்தேவையும் அழைத்துச் செல்வதில், அதிக ஆர்வமாக இருந்திருக்கிறார் சாவர்க்கர். ஆனால், காந்தி கொலைக்குப் பிறகு, இருவருக்கும் இடையே விரிசல் உண்டாகிறது.



காரணம், சாவர்க்கரின் சந்தர்ப்பவாத வாக்குமூலம்! கோபால் கோட்சேவின் வழக்கறிஞர் இனாம்தார் நாதுராமின் அப்போதைய மனவோட்டம் என்னவாக இருந்தது என்பதைப் பதிவு செய்கிறார். 'நாதுராம் சிறையில் தனிமைப் பட்டுக்கிடந்தார். அவருக்கு அப்போது தேவைப் பட்டது அவரது கையை அன்பாகத் தொட்டு உரையாடக்கூடிய அவரது குருவின் சொல். ஆனால், அது நடக்கவில்லை. அந்த வருத்தத்தை சிறையில் என்னை சந்தித்தபோது பகிர்ந்து கொண்டார் நாதுராம்' என்கிறார் அவர்.

1964 அக்டோபரில் கோபால் கோட்சே விடுதலையானார். அடுத்த மாதமே, அவருக்கு

ஒரு வரவேற்பு விழா நடக்கிறது. அதில், 'காந்தியைக் கொல்வதன் அனுகூலங்களை எனக்கு விளக்கினான் நாதுராம்' என்று சொல்கிறார் கோபால் கோட்சே. விவகாரம் மீண்டும் வெடிக்கிறது. நீதிபதி ஜேஎல் காபூர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு, காந்தி கொலை மறு விசாரணை செய்யப்படுகிறது. இது நடந்தது **1965** மார்ச் மாதம். அடுத்த வருடம், பிப்ரவரி மாதம் சாவர்க்கர் இறக்கிறார்.

உணவையும் தண்ணீரையும் மறுத்து வலுக்கட்டாயமாக அவர் அந்த மரணத்தைத் தேடிக் கொள்கிறார். அவர் அந்த முடிவை எடுக்க முக்கியமான காரணம், காபூர் கமிட்டியால் அவர் முற்றிலுமாக சுற்றி வளைக்கப்பட்டிருந்தார் என்பது. இன்னும் கொஞ்சநாள் இருந்திருந்தால், காபூர் கண்டிப்பாக சாவர்க்கர் கையில் விலங்கு மாட்டியிருப்பார். காபூர் அறிக்கையின் ஆறாம் அத்தியாத்தில், "Background of the accused' என்றொரு பகுதி இருக்கிறது. அதில், காந்தி கொலையில் சாவர்க்கருக்கு இருந்த பங்கு, விரிவாகவே பேசப்படுகிறது.

காந்தி மீதான சாவர்க்கரின் பகைக்கு மிக முக்கியக் காரணம், அவரது அகிம்சை! வாழ்வு முழுதுமே, "Hindu Masculinity (இந்து வீரம்)' என்பது குறித்து தீவிரமாகப் பேசுகிறார் சாவர்க்கர்.

ஒன்று தெரியுமா? சாவர்க்கர் பசு வழிபாட்டை கடுமையாக எதிர்த்தவர். அதற்குப் பின்னால் இருந்தது, பன்மைத்துவத்தைப் பேணும் அக்கறை என்று தவறாக நினைக்க வேண்டாம். 'பசுவை வணங்கினால் பசுவைப் போலவே நாமும் சாந்தமாகிவிடுவோம்' என்று அவர் எண்ணியதே, அதற்குக் காரணம். அந்த அளவுக்கு அகிம்சை அவருக்கு ஆகாத ஒன்றாக இருந்தது.

அவர் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த, அபினவ் பாரத் அமைப்பு, அடிப்படையிலேயே வன்முறையைப் போற்றும் அமைப்பு. அதிலிருந்து கிளைத்து எழுந்து வந்தவர் அவர்! இந்துக்களை வீரம்மிக்க ஒரு சமுதாயமாகவே அவர் உருவகித்தார். 'பள்ளிகளில் படிப்பைவிட உடற்பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்' என்று அவர் குரல் கொடுத்தது, அதற்காகவே. கனவு வெளியில், வேத காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்த மனிதர் அவர். ஆகவே, அகிம்சை அவருக்கு பிடிக்கவில்லை.

இப்படிப்பட்டவர், வீரம் செறிந்த நேதாஜியுடன் இணைந்திருக்கலாமே என்ற கேள்வி, சிலருக்கு எழலாம். அந்தக் கேள்வி நியாயமான ஒன்று. ஆனால், அங்கேதான் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, காந்தியைப்போலவே, நேதாஜியும் உடையாத, மதச்சார்பு இல்லாத ஒரு இந்தியாவை கனவு கண்டவர். நேதாஜியின் அகிம்சையைக் காந்தி சந்தேகித்தாரே ஒழிய, அவரது மதச்சார்பற்ற தன்மையை அவர் எப்போதுமே சந்தேகித்ததில்லை. நேதாஜியின் படையில் இஸ்லாமியர்களும் அதிகளவில் பங்கெடுத்ததற்கு, அவரது மதச்சார்பற்ற தன்மையே காரணம். அது, சாவர்க்கரின் பிரித்தாளும் கொள்கைக்கு உவப்பானதாக இல்லை. அதுவும் இல்லாமல், சாவர்க்கர் களவீரரும் அல்ல. அவர் எப்போதுமே பின்னால் இருந்து இயங்குபவர். தூண்டிவிடுவதில் சமர்த்தர். "Man in the chair' என்போம் அல்லவா, அதே போன்றவர்.

இன்னொன்று தெரியுமா? அவர், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படவில்லை. லண்டனில் வைத்துதான் கைதானார். வில்லியம் கர்சனின் கொலையாக இருக்கட்டும், ஜாக்சனின் கொலையாக இருக்கட்டும், அவர் நேரடியாகச் செயலாற்றவே இல்லை. அதற்குரிய அத்தனை உதவிகளையும் செய்தார், திட்டங்களை வகுத்தார். '20 துப்பாக்கிகளை அவர் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பினார்' என்கின்றன, தரவுகள். ஆனால், எங்குமே காட்சிக்கு வராமல் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொண்டார் சாவர்க்கர். அந்தமான் சிறையிலும்கூட தூண்டிவிடும் வேலையை கச்சிதமாகச் செய்திருக்கிறார். சக கைதிகளை உண்ணாவிரதத்துக்குத் தூண்டிவிட்டுவிட்டு, அவர் உணவருந்த சென்ற நிகழ்வும்கூட நடந்திருக்கிறது.

ஆகவே, இதுதான் சாவர்க்கர்! இவைதான் அவரது அரசியல்! மக்களைப் பிரித்தாளும் சித்தாந்தம், களத்துக்கு வராமல் பின்னே இருந்து இயங்குவது, மாட்டிக்கொண்டால் சீடனாகவே இருந்தாலும் கழட்டிவிடுவது என்று இருந்தவர் சாவர்க்கர். அவரது சித்தாந்தத்தாலோ, அவரது செயற்பாடுகளாலோ இந்தியாவுக்கும் எந்தப் பயனுமில்லை. இவ்வளவு எடுத்துச் சொன்ன

பிறகும், 'சாவர்க்கருக்கு பாரதரத்னா கொடுத்தால் என்ன தப்பு' என்று கேட்பவர்களிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

குறைந்தபட்சம் ஒன்றை மட்டுமேனும் உணர்வோம். சாவர்க்கர் முன்னே எழுந்துவரும் ஒவ்வொருமுறையும் அசோகர் புதைக்கப்படுகிறார், அவரது தத்துவம் புதைக்கப்படுகிறது. ஒன்றை யோசிப்போம். அகிலத்தின் எத்தனையோ நாடுகளில் ஜனநாயகம் வெறும் கனவாக மட்டுமே இருக்கும் சூழலில், இந்தியா மட்டும் எப்படி அதை இன்னும் தக்கவைத்திருக்கிறது? காற்றடித்தாலும் மழையடித்தாலும், இந்தியாவின் ஜனநாயக தீபம் மட்டும் தொடர்ந்து ஒளிர்வது எப்படி. காரணம் எளிது.

ஏனென்றால், இந்தியாவின் மரபிலேயே ஜனநாயகப் பண்புகள் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டியவர், அந்த மகா சக்கரவர்த்தி அசோகர்! அவரும் ஓர் அரசர்தான். ஆனால், மற்ற அரசர்களிடம் இருந்து அசோகர் எங்கே வேறுபடுகிறார் தெரியுமா. மக்களின் மீதான அபிமானத்தில் வேறுபாடுகிறார். மரபை சீரமைத்து முன்னெடுத்துச் சென்றதில், வேறுபடுகிறார். கலிங்கத்தின் தயா நதிக்கரையில் இறந்து மிதந்த மனித உடல்களைக் கண்டு, 'என்ன செய்துவிட்டேன் நான்...' என்று வருந்திய குரலில், வேறுபடுகிறார்.

ஆம். இத்தேசம் அசோக தத்துவத்தால் கட்டமைப்பட்டது! 'வரலாற்றை நிறைத்து நிற்கும் எத்தனையோ பேரரசர்களின் பெயர்களின் மத்தியில், அசோகர் மட்டுமே ஒரு வீழா நட்சத்திரமென தனித்து ஒளிர்கிறார்' என்று ஆய்வாளர் ஹெச்.ஜி. வெல்ஸ் விழிவிரித்து கூறினாரே, அந்த அசோகரின் தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது! இதை உணர்ந்தே, சிவாஜியை இடது பக்கமும் அக்பரை வலது பக்கமும் ஒதுக்கிவிட்டு, அசோகரை இந்தியாவுக்கு அடையாளமாக்கினார் நேரு. தர்ம சக்கரம் சுழலும் அந்தச் சிங்கச்சிலையை இந்திய சின்னமாக்கி, 'எழுக அவர் வேதம். எக்குடியும் என்குடியே என்றுரைக்கும் அசோகவேதம்' என்று நேரு அறிவித்தபோது, இந்திய அன்னை துள்ளிக்குதித்து கூத்தாடினாள். சாவர்க்கர் வழிபாடு, அவளின் அந்த சந்தோஷத்தைக் கண்டிப்பாக நிர்மூலமாக்கும். 2,000 ஆண்டுகளாக இந்த மண்ணில் ஊறி நின்றிருக்கும் மகத்துவத்தை, அது 20 வருடங்களுக்குள் அழித்தொழிக்கும்.

அறிக... அசோகரே புதைகிறாரென்றால் காந்தியும் இருக்கப்போவதில்லை. நேருவும் அகன்றிருப்பார். அம்பேத்கரும் கூட கைவிட்டிருப்பார். இது உருவாக்கப்போகும் விளைவை, நம்மால் இப்போது உணர முடியாது.

ஹிட்லரின் ஜெர்மனியாக, நத்தேன்யாஹூவின் இஸ்ரேலாக இத்தேசம் மாற்றப்பட்ட பிறகுதான், நமக்கு அந்த உணர்வு எழும். ஆனால், அப்போது எல்லாமே கையைமீறிப் போயிருக்கும். நமக்கான கங்கைகளைத் தேடிநாம் அலையத் தொடங்கியிருப்போம். நாசிக்குள் புகுந்து நம்மை நிலை குலையச் செய்யும் ரத்தத்தின் வீச்சத்தை நம்மால் கடக்கவே முடியாமல் இருக்கும். அது வீடோ, அலுவலகமோ, பேருந்தோ, ரயிலோ, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வெறுமனே அமர்ந்திருப்போம். உண்ணச் சென்றால், தட்டில் இஸ்லாமிய குழந்தையின் உடைக்கப்பட்ட வெள்ளெலும்பு உணவென நெளியும். உறங்கச் சென்றால், கிறிஸ்துவ குழந்தையின் உரிக்கப்பட்ட தோல், படுக்கை விரிப்பென விரியும். அரண்டு ஓடிவந்து வெட்டவெளியில் நின்று, வான்நோக்கி இறைஞ்சுவோம், 'அய்யோ... அப்போதே உணரத் தவறிவிட்டோமே...' என்று. அதைக் கேட்கவும் அப்போது நாதியிருக்காது.

**கடவுளால் தனித்துவிடப்பட்டிருப்போம். அறத்தால் தள்ளிவைக்கப்பட்டிருப்போம். மனிதர்களை மதத்தாலும், இனத்தாலும் பிரித்து அரசியல் செய்த அரக்கர்களின் பின்னால் நின்ற அத்தனை பேருக்கும் கடைசியில் எஞ்சுவது, தீரா பழிச்சொல்லும், விலகா பெரும் பாவமுமே.**

**அது நமக்கு உவப்பென்றால், சாவர்க்கருக்கு பாரதரத்னா அளிப்போம். அடுத்து, கோல்வால்கருக்கும். கடைசியாக, கோட்சேவுக்கும்!**

நன்றி விகடன்
நன்றி: வைத்தியலிங்கம் நடராாசன்

# உலமாக்கள், உமராக்கள் சமூகத்தின் இரு கண்கள்

ஹாஜி. பி.எம். அப்துல் கரீம்,
குளச்சல்



உலகில் மனித இனம் பல்கிப் பெருகிய போது சிலர் ஆற்றோரங்களில் சிலர் காடுமலை பிரதேசங்களில், சிலர் கடற்கரை பிரதேசங்களில் எங்கெல்லாம் வாழ வசதி அமைந்ததோ அங்கெல்லாம் வாழ்ந்தனர். ஆதம் நபிக்கு பிறகு நபிமார்கள் பல்வேறு பகுதிகளுக்கு வந்து இறை கட்டளைகளை மக்களுக்குச் சொல்லி எச்சரிக்கை செய்தும் வந்தனர்.

அல்லாஹ்வாகிய என்னைப் பயப்படக் கூடியவர்கள் ஆலிம்கள் (அறிஞர்கள்) என்னுடைய சமூகத்தில் தோன்றி உலமாக்கள் பனீ இஸ்ராயீல் கால நபிமார்களுக்கு ஒப்பான வர்கள் என்று திருமறையும், நபி மொழியும் உலமாக்களின் உயர்வை உயர்வுறச் சொல்கிறது.



நபிகள் நாயகம் (ஸல்) நபித்துவம் முற்றுப் பெற்று இறுதி நபியாக வந்தவர்கள். நபிக்குப் பிறகு இஸ்லாமிய பிரச்சாரப்பணி இஸ்லாமிய கலிபாக்கள் பெருமானார் தோழர்கள் இமாம்கள் உலமாக்கள் போன்றோர் செவ்வனே ஆற்றி இஸ்லாம் வளர பாடுபட்டுள்ளனர். இன்றும் பல்வேறு பட்ட இஸ்லாமிய பெரியார்கள் இப்பணி ஆற்றி வருகின்றனர்.

ஒரு பொழுது பெருமானார் (ஸல்) சொன்னார்கள், என் சமுதாயத்தவர் வாழ்வு தாழ்வு இருசாரர் கையில் இருக்கிறது. அவர்கள் உலமாக்கள் உமராக்கள் என்றார்கள். அவர்கள் இருவரும் ஒழுக்க சீலர்களாக இருந்தால் சமுதாயம் மேம்பாடுடையதாக இருக்கும். வழி தவறியவர்களாக இருந்தால் சமுதாயம் வழி தவறியதாக இருக்கும் என்றார்கள். உலமாக்கள் உமராக்கள் சமுதாயத்தின் இரு கண்களைப் போன்றவர்கள்.

ஒரு சமூகம் மேம்பாடுடையதாக திகழ்வதும், சமூகம் ஒழுக்கமின்மையிருந்ததாக திகழ்வதும் சமூகத்தின் படித்த கல்வியாளர்களே காரணமாகும். இஸ்லாமிய சமூகத்தில் இன்று உள்ள பிரிவுகள் தோன்றக் காரணம் உலமாக் களும், உமராக்களுமாகும்.

பெருமானார் சொன்னார்கள் ஈஸா (அலை) சமுதாயம் எழுபத்திரண்டு பிரிவாகவும், என் சமுதாயம் எழுபத்தி மூன்று பிரிவுகளாகவும்

பிரியுமென்றார்கள். தத்துவ வித்தகர் இமாம் கஸ்ஸாலி (ரழி) ஒரு பொழுது தோழர்களுக்கு உபதேசம் செய்யும் பொழுது சொன்னார்கள் பிற்காலத்தில் தும்பை ஆட்டின் குணாதிசயத்தை ஒத்த ஆலிம்களின் பசாதுகளை விட்டும் இறை வனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன் என் றார்கள். இதற்கு விளக்கம் சொன்ன இமாம் கஸ்ஸாலி (ரழி) தும்மை ஆடு கூட்டமாக வரும் பொழுது ஒன்று கூட்டத்தை விட்டுப் பிரிந்தால் அந்த கூட்டமே பிரிந்துவிடும். தும்மை ஆடு இயற்கையிலேயே பொறாமை குணம் உடையது என்றார்கள்.

நம் சமுதாயம் பல பிரிவாக உலமாக்களால் பிரிக்கப்பட்டு வெறும் உலக வாழ்வை மைய மாகக் கொண்ட உலமாக்கள் மிகுந்த காலம். நல்ல உலமாக்கள் இறைமறை காயாக வாழ் கிறார்கள். இவ்வுலகில் இன்று உலக ஆதாய உலமாக்கள் மிகுந்துள்ளனர். ஆணும் பெண்ணும் ஒரு சேர கல்வி கற்பது தவறு என சொன்ன சவூதி அரசின் தலைமை நீதிபதி பதவி நீக்கம் செய்யப் பட்டார் என பத்திரிகை செய்தி சொல்கிறது. ஓர் இஸ்லாமிய ஆட்சியாளர் நிர்வகிக்கும் நாட்டில் இன்றுள்ள நிலை இது.


கியாமத் எப்பொழுது ஏற்படும் நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது வினா கேட்டவரும் கேட்கப்பட்டவரும் இது விசயத் தில் அறியாதவர்கள். ஆனால் கியாமத் என்னும் இறுதி நாளின் அடையாளம் சொன்ன நபி (ஸல்) அவர்கள் என் நடைமுறையை சமுதாயம் புறக் கணித்து சானுக்கு, சான், முழத்துக்கு முழம் யூத நஸராக்களை பின்பற்றுவார்கள். காலத்தால் முந்தியவர்களை பிந்தியவர்கள் நிந்திப்பார்கள்.

உலகில் பெரும் எண்ணிக்கையில் என் சமூகம் இருக்கும். ஆனால் ஈமான் பலகீனமாக காற்றாத்து வெள்ளத்தில் நுரையை ஒத்ததாக இருக்கும். ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் மோதிக் கொண்டிருப்பவர். உலகில் கொலை அதிகரிக்கும் போன்ற பல முன்னறிவிப்புகள் சொன்னார்கள். அவை ஒவ்வொன்றும் இன்று முறையாக நடைபெறக் காண்கிறோம்.

இமாம் கஸ்ஸாலி (ரழி) உலகாயித உலமாக் களை ஆலிமே ஹய்வானி, ஆலிமே சைத்தானி என்றும் சமூகத்தில் உண்மையான பெருமா னாரின் வாரிசான உலமாக்களை ஆலிமே ரூஹானி என்றும் ஆலிமே இன்சானி என்றும் பிரித்துள்ளார்கள். இமாம் கஸ்ஸாலி (ரழி) உலமாக்களை அவர்கள் செயல்பாடுகள் வைத்து பிரித்துள்ளது சரியான கணிப்பாகும்.

சமுதாய தலைவர்களும் மக்கள் தொண்டு எனச் சொல்லி தன் நலம் விரும்பிகளாக உள்ளனர். சமுதாயத்தின் பெயர் சொல்லி பிழைப்பு நடத்துவோர் இன்று சமுதாயத் தலை வர்களாக உள்ளனர். உலமாக்கள் உமராக்கள் மேன்மக்களாக திகழ்ந்தால் சமுதாயம் நல்ல சமுதாயமாக திகழும்.

ஆகவேதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலமாக்கள், உமராக்கள் சமுதாயத்தின் இரு கண்கள் என்றார்கள். இது இரு சாராருக்கும் நபிகள் நாயகம் (ஸல்) கொடுத்த உயர்வான சொல்லாகும். நல் உலமாக்கள் உமராக்களை இறைவனே! சமூகத்தில் உண்டாக்கி சமூகத்தை உன்னத சமுதாயமாக ஆக்கியருள்வானாக! ஆமீன்.



சிலுவைப் போர்கள் 2.0
தொடர்

# வெறுப்பை வளர்த்த தலைமுறைகள்




இந்தத் தொடரில் நாம், உலகெங்கும் இந்த வெறுப்பை முஸ்லிம்கள் எப்படி வென்று வருகின்றார்கள் என்பதையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றோம். இதன்மூலம் நாம், இந்த முயற்சியில் அதாவது : இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வளர்க்கப்படும் வெறுப்பை எதிர்கொள்வதில் தீர்க்கமாகக் களமிறங்கிட வேண்டும். இஃதோர் தொடர் முயற்சி என்பன வற்றை வலியுறுத்துகின்றோம்.

எதிரிகளின் வெறுப்புப் பிரச்சாரத்தைத் தெரிந்து கொண்டு உண்மைகளை அகழ்ந்தெடுத்து பதில்களைத் தந்திட வேண்டும். இதில் விழிப்பு டனிருக்க வேண்டும்.

உண்மைகளை நமது எதிரிகளை வீழ்த்திடும் வலிமையான ஆயுதம். – இந்த ஆயதத்தைக் கையிலெடுப்போம் கள மிறங்கிடுவோம். வெற்றி பெறுவோம். இன்ஷா அல்லாஹ்.

சென்ற இதழில், 14 ஆம் நூற்றாண்டில் மிகவும் பிரபல்யமான ஊடகமாகத் திகழ்ந்த நாடகங்கள் எப்படி இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம் களுக்கெதிராகவும் பயன்படுத்தப்பட்டன என்பதை விரித்துரைத்தோம். அதில் இஸ்லாமோஃ போபியாவால் இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்த்திருந்த ஆங்கில அறிஞர் Lord Byror என்பவர் ஒருமுறை துருக்கிக்கு வந்தார். அப்போது அவர் முஸ்லிம்களின் வாழ்க்கையை நேரில் கண்டார், மனம் திருந்தினார். தான் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் கொண்டிருந்த கருத்துக்களை மாற்றிக் கொண்டார் என்பதைப் பார்த்தோம். அவர் மேலும் இஸ்லாத்தைப் பற்றிச்

### அன்பார்ந்த வாசகர்களே!

முஸ்லிம்கள் எதிர்கொண்டு வீழ்த்திட வேண்டிய மிகப்பெரிய எதிரி, தலைமுறை, தலைமுறை யாக, இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் தொடர்ந்து செய்யப்படும் பொய்ப் பிரச்சாரங்கள்.

இந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் வழி, தலைமுறை, தலைமுறையாக முஸ்லிம்கள் மீது வளர்க்கப்படும் வெறுப்புகள். இதைத்தான் இஸ்லாமோஃபோபியா என்கின்றோம்.

இந்தப் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கத் தவறியதால்தான், இன்று உலகெங்கும், முஸ்லிம்கள் கொலைகளுக்கும், குரூரம் நிறைந்த சித்திரவதை களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்.

ஏனெனில், 'இஸ்லாமோஃபோபியா' என்ற இஸ் லாத்தின் மீதுள்ள வெறுப்பு இன்றையக் காலக் கட்டத் தில் உச்சத்தில் இருக்கின்றது. இந்தியாவிலும் இதுவே நடந்து கொண்டிருக்கிறது.

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் முஸ்லிம்கள், இஸ்லாமோஃபோபியா – என்ற குரூரமான வெறுப்பை எதிர்கொண்டு வருகின்றோம் என்பதைக் கூட அறிந்திடாமலிருக்கின்றார்கள். இதில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என்பதற் காகவே இந்தத் தொடர்.

சொன்னவற்றை இந்த இதழில் தருகின்றோம். இவை அனைத்தும் அப்துல் ரஹ்மான் கித்வைய் அவர்கள், மௌலானா ஆசாத் தேசிய உருது பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்டது.

இஸ்லாத்திற்கும் கிருஸ்தவ உலகிற்கும் இடையே நடந்த சண்டையை பிறைக்கும், சிலுவைக்கும் இடையே நடந்த போர் என வரலாற்றில் வரைந்தார்கள்.

இந்த சண்டைகளாலும், ஏற்கெனவே போதிக் கப்பட்டிருந்த தவறான சிந்தனைகளாலும் கீழைநாட்டு சிந்தனையாளர்கள் இஸ்லாத்தை யும், முஸ்லிம்களையும் தவறாகச் சித்தரித்தார் கள். இவர்களின் அதாவது, கீழ்திசை சிந்தனை யாளர்களின்எழுத்துக்கள்மேலைநாட்டுமுஸ்லிம் களை அதிகமாகப் பாதித்தன.

மேலைநாட்டு இளம் தலைமுறை முஸ்லிம் களைப் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் தவறான முடிவுகளை எடுக்கவும், இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்க்கவும் வழிவிட்டன.

கீழ்த்திசை சிந்தனையாளர்களுக்கு இருந்த அறிவும், ஆற்றலும் அறிவுலகத்தை தவறாக வழி நடத்தவே பயன்படுத்தப்பட்டன. இவர்கள் அறிவுலகை தவறாக வழி நடத்திட, மிகவும் கடுமையாக உழைத்தார்கள்.

கீழைநாட்டு எழுத்தாளர்கள் கிருஸ்தவ உலகின் வேதமாகிய பைபிளும், யூத இலக்கி யங்களும் முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் எப்படிச் சித்தரித்தனவோ அப்படியே சித்தரித் தார்கள். அவர்கள் மக்களை இஸ்லாத்திற்கெதி ராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் வார்த் தெடுத்தார்கள். இன்றைய நாட்களில் சொல் வதைப்போல் மூளைச் சலவை எனச் சொல்லிட முடியாது. மாறாக, அது, வார்த்தெடுப்புகள். ஆனால், இன்றைய நாட்களில் பலர் தங்கள் கடந்த கால தவறுகளுக்காக வருந்துகின்றார்கள். இது நல்லதொரு திருப்பமாகும். - MG. : 1-15, Dec. 16

"Orientalists Laid the foundation for the intellitual bias against muslims" - Prof. Abdul Rahim Qudwal As Narrated by N.A. Ansari.

Prof. Abdul Rahim Qidwai - is a scholar of English Leterature and Director of UGC Human Resource Development Centre. in AMU. The above content is from A Lecture in the Moulana Azad National Urdu University (Manuu) on the Topic of Orintalism in Literature.

ஜான் பெஃபர் அவர்களின் கருத்துப்படி, சூதும் சூட்சியும் நிறைந்த ஆங்கில இலக்கியங்கள் கூட முஸ்லிம்களின் பெருந்தன்மைகளைச் சுட்டிக் காட்டாமல் தவிர்த்திட இயலவில்லை. அந்த அளவுக்கு இஸ்லாத்தின் வரலாற்றில் தாராளத் தன்மையும், தயாள குணங்களும் நிரம்பி வழிந்தன.

ஆங்கில இலக்கியங்களில் இன்பெஃபர்னோ என்றொரு நூல் (Inferno) இந்த புதினம் நூல் அதற்குத் தரப்பட்ட நூலாக ஆகிவிட்டது. இந்த நூலின் மையப் பொருள். "பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடையே பொய்யைப் பரப்பியதால் நரகத்திற்கு அதுவும் மிகவும் அதிக மான அனல் கக்கும் நரகத்தில் தள்ளப்படுகின்ற ார்கள்" எனக் குறிப்பிடுகின்றது. (நவூதுபில்லாஹ்) (இதுபோன்ற தவறான எண்ணங்களிலிருந்து அல்லாஹ் அனைவரையும் காத்தருள்வானாக)

டன்டி இன்பெஃபர்னோ (Dante Inferno) என்ற புதினம் ஆங்கில உலகில் மிகவும் அதிக மாப் படிக்கப்பட்ட புதினம். அதன்பின் அதே பெயரில் பலர் புதினங்களை எழுதினார்கள். இவையெல்லாம் முஸம்மத் (ஸல்) அவர்களை தாழ்வாக மக்கள் மனதில் காட்டியது. மட்டு மல்ல, முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் மிகப்பெரிய தீராத, தீர்க்க முடியாத வெறுப் பையும் பகையையும் வளர்த்தன.

நாம்இங்கேகவனிக்கவேண்டிய, மிகப்பெரிய செய்தி என்னவெனில், 15 வருடங்களுக்கு முன் னால் வரை மக்கள் அதிகமாக படிப்பவனாக புதினங்களே இருந்தன. பொழுது போக்கும் புதினங்கள் வழிதான். அதேபோல் பயணங்களில் புதினங்கள்தான்வழித்துணை. அப்படிப்படிக்கப் பட்ட புதினங்கள் பெரும்பாலும், இஸ்லாத்தை ஒரு பெரிய நாகரிக சக்தியாக ஆபத்தான சக்தியாகக் காட்டிவந்தன. மக்கள் வெறுப்பில் உச்சத்திலேயே நின்றார்கள்.

– இன்ஷா அல்லா தொடரும்.

# அப்துல் கலாம் விருது!






ஒரு நாட்டின் சிறந்த குடிமகன்களை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கான பங்கு என்பது அலாதியானது. நாட்டின் எதிர்கால சக்தியான இளைய சமுதாயத்தினரை ஒழுக்க முள்ள தலைமுறையினராக பாடசாலை களிலிருந்து வெளிவரச் செய்வதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடைப்பட்ட உறவுப்பாலமாகவும் உணர்வுப்பாலமாகவும் திகழ வேண்டியவர்களே ஆசிரியர்கள். ஆசிரியர் என்பவர் தனது அறிவாற்றலாலும், மனவாற்றலாலும் சமூக முன்னேற்றத்தினை முன்னெடுத்துச் செல்பவராக இருக்க வேண்டும்.

இத்தகையப் பொறுப்புகளை உணர்ந்து தனது ஆசிரியர் சேவையை செவ்வனச் செய்து வருபவர் திருவல்லிகேணி, முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியின் முதல் திரு.ஷாகுல் ஹமீது அவர்கள்.


கல்லூரி மூலமாக ஆசிரியர் பயிற்சி வகுப்புகளுக்காக என்னை திருவெல்லிகேனி அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது என்னிடமும், என்னுடன் வந்த சக மாணவிகளிடமும் அவர் நடந்து கொண்ட விதம் எங்களை மிகவும் கவர்ந்தது.

மாணவர்களுக்கு மட்டுமில்லாத எங்களைப் போன்ற பயிற்சி வகுப்புகள் எடுக்க வரும் ஆசிரியர்களுக்கும் ஒழுக்க மாண்புகளை போதித்து நெறிப்படுத்தக்கூடிய நல்லுள்ளம் கொண்டவர்.

ரோட்டரி கிளப் சார்பாக அவருக்கு 2020ம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான அப்துல் கலாம் விருது வழங்கப் பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. ஆசிரியர்கள் சார்பாகவும், வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு: ஆசிரியர் சாகுல் ஹமீது அவர்கள்,

தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகம் சார்பாக நிறந்த நல்லாசிரியர் விருது மற்றும் பல விருதுகளை பெற்றவர். - Fathima Ali



# அப்பாவி என 23 ஆண்டுக்கு பிறகு விடுதலையாகும் முஸ்லிம்கள்..!

16 வயதில் சிறையில் அடைக்கப்பட்டு 40 வயதில் நீதிமன்றத்தால் நிரபராதி என்று 23 வருட சிறைக்காலத்திற்கு பிறகு வெளியில் வந்த ஹுசைனின் வாழ்க்கை இந்தியாவின் பல நூறு முஸ்லிம்களின் வாழ்க்கையாக இருக்கிறது.

ஹுசைன் தீவிரவாத முத்திரையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதற்கு இரண்டே காரணம் தான். முதலாவது அவர் முஸ்லிம். இரண்டாவது அவர் ஒரு காஷ்மீரை சேர்ந்த முஸ்லிம். இந்த இரண்டு காரணத்திற்காக மட்டும் வேட்டையாடப்பட்ட ஹுசைன் 16 வயதில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதன்பிறகு 23 வருடத்திற்கு பிறகு நீதிமன்றத்தால் எந்த தவறும் செய்யாதவர் என்று விடுவிக்கப்பட்டார். ஆனால் அவர் வாழ்க்கை சிறையில் இருந்து வெளிவந்த பிறகும் எந்த மாற்றத்தையும் தரவில்லை என்பதை சமீபத்தில் ஒரு ஊடகத்திற்கு பேட்டியாக கொடுத்திருந்தார்.

அதில்,

‘நான் 16 வயதில் இருக்கும் போது என் அண்ணன் இஃப்திகாருடன் சேர்ந்து துணி வியாபாரம் செய்ய தொடங்கினேன். எங்கள் துணிவியாபாரத்தின் ஒரு பகுதியாக நேபாளத்தில் இருக்கும் காத்மண்டு பகுதிக்கு சென்றிருக்கும் போது என்னை இந்திய காவல்துறையினர் கைது செய்தனர். ஆனால், எங்களிடம் எந்த காரணத்தையும் சொல்லவில்லை.

கைது செய்யப்பட்டு டெல்லிக்கு எங்களை அழைத்து சென்றனர். அப்போது தான் என் அண்னன் இப்திகாரும் கைது செய்யப்பட்டது எனக்கு தெரிய வந்தது. குறிப்பாக டெல்லியில் இருக்கும் காஷ்மீர் முஸ்லிம்கள் சிலரையும், நேபாளத்திற்கு வியாபாரத்திற்காக வந்திருந்த முஸ்லிம்கள் சிலரையும் கைது செய்திருந்தார்கள்.

கைது செய்து எங்களை சித்ரவதைகளுக்கு உட்படுத்தும் போது தான் 1996ல் டெல்லியில் நடந்த லாஜ்பாத் குண்டுவெடிப்பு வழக்கில் எங்களை கைது செய்தனர் என்பதே எங்களுக்கு தெரியும்.

மிக கொடுமையான சித்ரவதைகளை எங்களுக்கு கொடுத்தார்கள். அதன் பிறகு நீங்கள் இக்குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொண்டால் உங்களுக்கு சித்ரவதைகள் இருக்காது என்றனர். ஒரு கட்டத்தில் வேதனை தாங்க முடியாமல் நாங்கள் ஒப்புக்கொண்டோம். அதன்படி கட்டுக்



கட்டாக பல பக்கங்களில் எங்களிடம் கையெழுத்தை வாங்கினார்கள். அதன் பிறகே எங்கள் சித்ரவதைகள் குறைந்தது.

1996ல் நான் கைது செய்யப்பட்ட போது எனக்கு வயது 16. என் அண்ணனுக்கு வயது 22. எங்களுடன் வேறு சிலரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அப்பாவிகள்.

நாங்கள் சிறைப்படுத்தப்பட்ட பிறகு வெளியே எங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழித்து விட்டனர். என் தந்தை சிறுக சிறுக கஷ்டப்பட்டு வளர்த்து உருவாக்கிய எங்கள் கடையை நிரந்தரமாக சீல் செய்து அடைத்து விட்டனர் காவலதுறையினர்.

கைது செய்யப்பட்டு சில மாதங்களுக்கு பிறகு விசாரணை ஆரம்பமானது. ஒவ்வொரு முறையும் நாங்கள் விசாரணைக்காக நீதிமன்றம் செல்லும் போதும் எங்கள் வழக்கை இழுத்தடிப்பதற்கான வேலைகள் நடக்கும்.

எங்கள் வழக்கு மொத்தம் 10 வருடங்கள் நடந்தது. அதில் இறுதியாக 2012ல் நாங்கள் அனைவரும் நிரபராதிகள் என்று தீர்ப்பு வந்தது, அதுவரை மொத்தம் 34 நீதிபதிகள் எங்கள் வழக்கு விசாரணையில் மாறி மாறி வந்தனர்.

இறுதியாக நாம் விடுதலையாக போகிறோம் என்று நினைத்த போது என்னை ராஜஸ்தான் சிறைக்கு மாற்றினார்கள். அங்கே எனக்கு 8 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது, என் மீது புதியதாக ராஜஸ்தான் சல்மேத்தி குண்டு வெடிப்பு வழக்கு புனையப்பட்டது. (இது காவல்துறை பல காலமாக பின்பற்றி வரும் நடைமுறை. தாங்கள் புனைந்து சிறையில் தள்ளிய வழக்கில் நீதிமன்றம் அவரை விடுவிக்க முனைந்து விட்டால் மற்றொரு வழக்கில் அவரை குற்றவாளியாக சேர்த்து விடுவார்கள். அவர் குறைந்தது 20 வருட சிறை அனுபவிக்கும் வரை இப்படி தொடர்ச்சியாக செய்வது பல வழக்குகளில் நடத்தப்பட்டிருக்கிறது.)

அதன் பிறகு என் வாழ்க்கையின் மீதி காலம் சிறையில் தான் இருக்கும் என்று நினைத்தேன். அதற்கேற்றவாறு எனக்கு ராஜஸ்தான் கீழ் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது, எனது அண்ணன் கீழ் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் போகும் போது அங்கே இந்த வழக்கை விசாரித்த பெண் நீதிபதி ஒருவர் நேர்மையாக எங்கள் வழக்கை கையாண்டார். முழு விசாரணைக்கு பிறகு 23 வருட சிறைக்காலத்திற்கு பின்பு எந்த குற்றமும் அற்றவர் என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன்.

ஆனால் எனது இத்தனை வருட சிறைக் காலத்தில் என் இளமை அழிந்து போனது, என் குடும்பத்தின் வாழ்வாதாரம் மொத்தமாக உடைந்து போனது ஆனாலும் இந்த அநீதிக்கு எனக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

23 வருட சிறைக்கு வெளியே சொந்த வீட்டுக்கு திரும்பிய போது காஷ்மீரின் பிரிவு 370 அகற்றப்பட்டு மாநிலமே சிறைக்குள் வைக்கப்பட்டது. 23 வருட சிறைக்கு பிறகும் ஒரு சிறை அனுபவத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

சிறையில் விடுதலையான பிறகு சில நாட்களுக்கு ஊடகங்கள் என்னை தேடி வந்தார்கள். நானும் நடந்த அனைத்தையும் கூறி உதவிக்கும் பலரை அணுகினேன். ஆனாலும் எந்த உதவியும் எனக்கு கிடைக்கவில்லை. என்னுடன் 23 வருடம் சிறையில் ஒன்றாக இருந்து விடுதலையான என் நண்பர்களுக்கும் இதே நிலை தான் என்பதை நாங்கள் பேசும் போது தெரிந்து கொண்டோம். ”

இது தனிப்பட்ட ஹுசைனின் வாழ்க்கை மட்டுமல்ல. இதுபோல் இந்தியாவில் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் போலியான வழக்குகளின் கீழ் பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்க்கையை சிறையில் தொலைத்திருக்கிறார்கள். தொலைத்து கொண்டிருக்கிறார்கள்.

ஹுசைனின் குடும்பத்தில் இரண்டு பேர் 20 வருட சிறைத்தண்டனைக்கு பிறகு அப்பாவிகள் என்று விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் குடும்பம் என்ன சோதனைகளையெல்லாம் சந்தித்திருக்கும்! இப்படியொரு அநீதியை அவர்களுக்கு இழைத்த நீதிமன்றங்கள் குறைந்த பட்சம் நிவாரணம் கொடுக்க கூட முன்வரவில்லை.

இப்படி நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்ட சிலரின் தரவுகளை டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை வெளியிட்டது.

“behind bars for no fault: people wrongly

arrested in terror case" (எந்த தவறும் செய்யாமல் தீவிரவாத வழக்குகளில் தவறாக கைது செய்யப் பட்டு சிறையில் இருப்பவர்கள்) என்ற தலைப் பின் கீழ் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி வெளி யிட்டார்கள். அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்குகளில் விடுதலையானவர்கள் முழுக்க முஸ்லிம்கள் தாம். இதுவே இந்தியாவில் முஸ்லி ம்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிக்கு ஒரு மிகப்பெரும் சான்று.

அதன் படி, இதுவரை இந்தியாவில் தீவிரவாத முத்திரையில் கைது செய்யப்பட்டு பல ஆண்டு சிறைக்கு பின் அப்பாவிகள் என விடுதலை செய்யப்பட்ட வழக்குகளில் சில,

நஸ்ருதின் அஹ்மத் – 23 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 1994.

விடுதலை செய்யப்பட்டது – 2015

கைது செய்யப்படும் போது வயது – 19.

வழக்கு – பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத்தின் போது நடந்த ஐந்து இரயில் குண்டுவெடிப்பு, இரண்டாம் ஆண்டு மருத்துவ படிப்பின் போது குற்றம் இழைக்கப்பட்டதாக கைது செய்யப் படார்.

குல்சார் அஹ்மத் பானி – 16 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 2001

விடுதலை செய்யப்பட்டது – 2017

கைது செய்யப்படும் போது வயது – 28.

வழக்கு – சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பு வழக்கு.

ஜாஹீருதீன் அஹ்மத் – 23 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 1994

விடுதலை செய்யப்பட்டது – 2016

வழக்கு – மும்பையில் சிவில் பொறியாளராக இருக்கும் போது தீவிரவாத செயலில் ஈடுபட்ட தாக கைது செய்யப்பட்டார்.

முஹம்மது ஆமிர் கான் – 14 வருட சிறை

கைது செய்யப்பட்டது – 1998

விடுதலை செய்யப்பட்டது – 2012

கைது செய்யப்படும் போது வயது – 20.

வழக்கு – டெல்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்.

ஹபீப் பாவா மற்றும் ஹனிப் பாகிட்வாலா – 14 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 2003

விடுதலை செய்யப்பட்டது – 2017

வழக்கு – 2002 ல் டிபன் பாக்ஸ் குண்டு பேருந்தில் வெடித்த வழக்கு.

ஹுசைன் பாசிலி மற்றும் ராபிக் ஷாஹ் – 12 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 2005

விடுதலை செய்யப்பட்டது – 2017

வழக்கு – ஷாஹ் மதரஸா மாணவராக இருக்கும்போது கைது செய்யப்பட்டார், டெல்லி தொடர் குண்டுவெடிப்பின் குற்றவாளிகள் என கைது செய்யப்பட்டார்.

ஆறு முஸ்லிம்கள் – 11 வருட சிறை.

கைது செய்யப்பட்டது – 2003

விடுதலை – 2014

வழக்கு – 2002 அக்ஸர்தம் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள்.

இர்ஷத் அலி மற்றும் மௌரிப் கமர் – 11 வருட சிறை.

கைது – 2005, விடுதலை – 2017

வழக்கு – அல்–பத்ர் எனும் தீவிரவாத குழுவில் உறுப்பினர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள்.

ஒன்பது பேர் – 10 வருட சிறை.

கைது – 2006, விடுதலை – 2016

வழக்கு – மாலேகான் குண்டுவெடிப்பு.

அப்துல் வாகித் செய்க் – 9 வருட சிறை

கைது – 2006, விடுதலை– 2015

வழக்கு–11/07 மும்பை ரயில் குண்டுவெடிப்பு,

ஐந்து முஸ்லிம்கள் – 9 வருட சிறை.

கைது – 2007, விடுதலை – 2016.

வழக்கு – தடைப்பட்ட ஹுஜி குழுவை சார்ந்தவர்கள் என்றும், பாகிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள்.

சொஹெப் ஜாஹிர்தார், அப்துல் நய்யிம்,

*முஹம்மது இம்ரான் கான் மற்றும் சையத் கான்.*
*– 7 வருட சிறை.*

*கைது – 2007, விடுதலை– 2014*

*வழக்கு – மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு.*

*ரியாஸ் கான் மற்றும் அப்துல் சையத்*
*– 7 வருட சிறை.*

*கைது – 2010, விடுதலை – 2017*

*வழக்கு – மக்கா குண்டுவெடிப்பு வழக்குக்கு பழிவாங்க காவலதிகாரியை கொலை செய்ததாக கைது.*

*17 பேர் – 7 வருட சிறை.*
*கைது – 2008, விடுதலை – 2015*

*வழக்கு – சிமி அமைப்பில் இருந்து நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்டவர்கள்.*

*ஹாரூன் ரஷீத், முஹம்மது இஃப்திகார், மசூத் அஹ்மத், திலாவர் கான் – 5 வருட சிறை.*

*கைது – 2005, விடுதலை – 2010*

*வழக்கு – டெஹ்ராடூனில் இருக்கும் மிலிட்டரி பள்ளியில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.*

*மஹ்பூப் இப்ராகிம், சபாப் சோப்தார்*
*– 5 வருட சிறை*

*கைது – 2006, விடுதலை– 2011*

*வழக்கு – டெல்லியில் உள்ள ஐஐப மீது தீவிரவாத தாக்குதலை நடத்த முயற்சித்தார்கள் என்று கைது.* ( TOI 11/08/17)

*இப்படி கைது செய்யப்பட்டு அப்பாவி என்று கூறி விடுவிக்கப்பட்ட எவருக்கும் எந்த வித இழப்பீடும் கிடையாது. பொய்யான குற்றச் சாட்டின் பெயரில் 23 வருடங்கள் வரை தங்கள் வாழ்வை இழந்தவர்கள் கூட இதில் இருக்கிறார்கள்.இந்த நிலையை கொண்டு வந்ததற்கே நமது நீதிமன்றங்கள் குற்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்.*

*ஆனால், உச்சநீதிமன்றத்தில் அக்ஸர்தம் குண்டுவெடிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேர் இழப்பீடு கேட்டு தொடர்ந்த வழக்கில் இது “ஓர் மோசமான முன்மாதிரியாக” மாறி விடும் என சொல்லியது நீதிமன்றம்.*

*டைம்ஸ் ஆப் இந்தியா 2017 வரை வெளி வந்தவர்களில் சிலரை தான் குறிப்பிட்டிருக்கிறது, தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாமல் 20 வருடங்களுக்கு மேல் சிறையில் இருந்து அப்பாவி என விடுதலையாகும் எண்ணிக்கையும் அதிகம் இருக்கிறது.*

*இதில் நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு முக்கியமான விசயம் என்னவென்றால் இப்படி பல ஆண்டுகளுக்கு பிறகு அப்பாவி என விடுதலை ஆகும் முஸ்லிம்கள் அனைவரும் பாஜகவின் ஆட்சியின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. பெரும்பாலும் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்.*

*முஸ்லிம்களுக்கு ஆதரவாக செயல்படுகிறோம் என்ற போர்வையில் ஆட்சி செய்த காங்கிரஸ் ஆட்சியிலேயே முஸ்லிம்கள் இந்தளவுக்கு கொடூரமாக அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் பாசிசக் கட்சியான பாஜவின் ஆட்சியின் கீழ் கைது செய்யப்பட்டு வரும் முஸ்லிம்களின் நிலை என்ன?..*

*இப்போது திட்டமிட்டு நீண்ட காலத்திற்கு சிறைக்குள் வைத்திருக்க வழிவகை செய்யும்* UAPA *போன்ற சட்டங்களையே கடுமையாக்கியிருக்கிறது இப்போதுள்ள பாஜக அரசு. இதன் கீழ் தான் தொடர்ச்சியாக முஸ்லிம்கள் இந்தியா முழுவதும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு இன்னும் 20 வருடத்திற்கு பிறகோ அல்லது 30 வருடத்திற்கு பிறகோ அப்பாவிகள் என்று தீர்ப்பு கிடைத்து என்ன பலன் வந்து விடப்போகிறது?..*

*இப்படி தீவிரவாத வழக்குகளின் கீழ் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படும் போது அவருக்காக நின்று வாதாடுவதற்காக கூட வழக்கறிஞர்கள் முன்வரமாட்டார்கள். அப்படி வருபவர்கள் மீது தீவிரவாதிக்காக வாதிடும் வழக்குறிஞர் என்ற பெயர் திட்டமிட்டு பரப்படும். இதனால் அரசின் மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்படுவார். வழக்கறிஞர்கள் இல்லாமல் அப்பாவிகளாக இருந்தும் சிறையில் இருக்கும் முஸ்லிம்களின்வழக்குகளும்பலநூறு இருக்கிறது.*

*– அபூ சித்திக்.*

தாங்கள் ஏற்கெனவே பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. (ISI) என்ற அமைப்பைக் குறை கூறிவிட்டோம். அது அப்படியே இருக்கட்டும் எனக் கூறிவிட்டார்கள்.

உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல் தப்பி விட்டார்கள். (Times of India - Pune 18th November - 2008)


சம்சவ்தா விரைவு ரெயில் வண்டி குண்டு வெடிப்பு விசாரணையை இரண்டுமுறை வழி மறித்தது மத்திய உளவுத்துறை. ஆனாலும் உண்மைகளை அதிக நாட்கள் மறைத்து வைத்திட இயலவில்லை.

மாலேகான் குண்டு வெடிப்புகள் 2008–ஐ தொடர்ந்து அபிநவ் பாரத் என்ற அமைப்பின் சதிகள் நாடெங்கும் விவாதமானது. முஸ்லிம்கள் அப்பாவிகள், வீண் பழியைச் சுமப்பவர்கள் என்ற உண்மை மக்களுக்கு வந்து சேர்ந்தது. இதனால் இதற்கு முன்னால் நடந்த குண்டு வெடிப்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என்ற எண்ணங்கள் எழுந்தன.

இந்த வகையில் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பையும் மறு ஆய்வுக்கு உள்படுத்திட வேண்டும் என பலரும் கோரலாயினர். இதனால் அரசு சம்சவ்தா எக்ஸ்பிரஸ் வழக்கை தேசிய புலனாய்வு முகமையிடம் 2010 ஆம் ஆண்டு ஒப்படைத்திட வேண்டிய நிலைக்கு ஆளாகியது.

ஹரியானா காவல்துறை குண்டு வெடிப்பு நடந்த ஒரு மாதத்திற்குள் (2007) உண்மையான குற்றவாளிகளின் பக்கம் நெருங்கி இருந்தது. ஆனால் மத்திய உளவுத்துறையின் தலையீட்டால் அது உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்திடாமல் தடுத்தது. அதனால் NIA புலன் விசாரணை அந்த நிலையிலேயே கைவிடப்பட்டது. இப்போது 2010 இல் தேசிய புலனாய்வு முகமை ஹரியான காவல்துறை விட்டதிலிருந்து அப்படியே தொடர்ந்தது.

'NIA' என்ற தேசிய புலனாய்வு முகமை தனது புலன் விசாரணையை நடத்திக் கொண்டிருந்த போது, அதற்கு ஓர் அதிசய அத்தாட்சி கிடைத்தது. அதுதான் ஆர்.எஸ்.எஸ்.–இன் தலைவராகிய சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம். அதில் அவர் நீதிபதியின் முன் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு ஆகியவையும் – (2007), மாலேகான் குண்டு வெடிப்பு (2008) ஆகியவை அனைத்தும்




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்



ஒரே தீவிரவாத குழுவின் கைவரிசை தான் என்றும், அவை அனைத்தையும் தான் தான் ஏற்பாடு செய்ததாகவும் குறிப்பிட்டார்.

ஹரியானா காவல்துறை விட்டதிலிருந்து தொடர்ந்த தேசிய புலனாய்வு முகமை, தனது புலனாய்வில் கிடைத்த ஆதாரங்கள், அசீமானந் தாவின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் கிடைத்த புது தகவல்கள், ஆதாரங்கள் இவற்றைக் கொண்டு தனது புலனாய்வை முடித்தது. அத்தோடு இந்தக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய உண்மையான குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகையைத் தாக்கல்செய்டிதது.

இந்தக் குண்டு வெடிப்புகளை, அதாவது மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு (2007), அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு 2007, சம்சவ்தா விரைவு வண்டி குண்டு வெடிப்பு (2007), மாலேகான் குண்டு வெடிப்பு (2007) ஆகியவற்றை நடத்தியது ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்கள்.

இவர்கள் மீதான குற்றப்பத்திரிகை ஜூன் 2011 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் குற்றவாளிகள்,

1) சுனில் ஜோஷி, 2) சுவாமி அசீமானந்த்,
3) சந்தப் டான்கி 4) ராம்ஜி கல்சங்கரா,
5) லோகேஷ் ஷர்மா 6) தேவேந்திரகுப்தா
7) அமித் சவ்ஹான் 8) பாரத் பாய்

குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர். காரணம் குற்றம் சுமத்திட வேண்டிய அரசு வழக்கறிஞர், குற்றவாளிகளுக்கு சாதகமாகவும் – அரசே தொடுத்த வழக்குக்கு எதிராகவும் திரும்பி விட்டனர்.

இந்த சம்சவ்தா ரெயில் குண்டு வெடிப்பு விசாரணை சுமார் (8) எட்டு ஆண்டுகள் நடந்தது. இதில் 224 சாட்சியங்கள், உட்படுத் தப்பட்டன. விசாரிக்கப்பட்டன. குற்றவாளி களை முழுயைமாக விடுதலை செய்யும் பாங்கி லேயே வழக்கை அரசு நடத்தியது IB என்ற மத்திய உளவுத்துறையின் கிடுக்கிப் பிடியை கீழ் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றம், மார்ச்சு 20, 2019 இல் தனது தீர்ப்பை வழங்கியது. அதில் நான்கு குற்றவாளிகளை விடுதலை செய்தது.

அப்படி விடுதலை செய்யப்பட்டவர்கள், சுவாமி அசீமானந்தா, லோகேஷ் ஷர்மா, தேவேந்திர குப்தா, பாரத் பாய். – இவர்களைத் தண்டிக்கும் அளவில் உள்ள சாட்சியங்கள் இல்லை என்ற அடிப்படையில் விடுதலை செய்தது.

மீதமுள்ள நான்கு குற்றவாளிகளுள் சுனில் ஜோஷி என்பவரை 2007 டிசம்பர் மாதம் கொலை செய்து விட்டார்கள். (இதனை மாலே கான் குண்டு வெடிப்புகளில் முக்கிய குற்ற வாளியாகிய பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசி தான் கொலை செய்தார். இதற்காக பிரக்யாசிங்தாக்கூர்மீதுவழக்குத்தொடரப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது.

மீதமுள்ள மூன்று பேரையும் (NIA) தேசிய புலனாய்வு முகமை கைது செய்யவில்லை. அதனால் அவர்கள் தேடப்படும் குற்றவாளி களாக அறிவிக்கப்பட்டார்கள். அவர்கள் அமித் சவ்கான், இராமச்சந்திரா கல்சங்கரா, சந்தீப் டாங்கே.

இந்தத் தீர்ப்பு மார்ச்சு–20, 2019 இல் வெளிவந்தது என்றாலும், இந்த 160 பக்க தீர்ப்பை, நீதிமன்றம் பொதுமக்களின் பார்வைக்கு 29, மார்ச்சு 2019 இல் வைத்தது. அந்தத் தீர்ப்பில் நீதிபதி அவர்கள் குற்றவாளிகளை விடுதலை செய்ததைக் குறித்து இப்படிக் குறிப்பிட்டார்.

“நான் இப்படி குற்றவாளிகளை மிகுந்த மன வருத்தத்துடனும், ஆதங்கத்துடனுமே விடுதலை செய்கின்றேன்.”

இன்னும் அவர் குறிப்பிட்டார்,

குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற் றுத் தரும், சிறந்த அத்தாட்சிகளையெல்லாம் அரசு வழக்கறிஞர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக் காமல் தனது கைகளிலேயே வைத்துக்கொண் டார். அரசு தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பித்த அத்தாட்சிகளில் நிறைய இடைவெளிகள் இருந்தன. அரசு தரப்பு வாதத்தில் இடம் பெற்ற வையும், அரசின் தரப்பில் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும், சட்டத்தின் முன் செல்லாதவை. சட்டத்தின் முன் செல்லாதவற்றை மட்டுமே சாட்சியமாகச் சமர்ப் பித்தார்கள். அவை குற்றவாளிகள் கொடுத்த வாக்கு மூலங்களாகவும், எந்த உண்மையையும் வெளிப்படுத்தாமலும் இருந்தன.

“குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றிய எந்த பொருளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவில்லை. வாய்மொழிகள் மட்டுமல்ல விஞ்ஞான ரீதியான அறிவியல் பூர்வமான எந்த உண்மை சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இதனால் குற்றவாளிகளை குற்றத்தோடு சம்மந்தப்படுத்திட வழி இல்லாமல் செய்து விட்டார்கள்.

தனித்துவமான சாட்சியங்கள் எனச் சொல் லப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கே வர வைக்க வில்லை. சாட்சியங்கள் குற்றவாளிகளுக்கு உதவி செய்வார்கள் என்ற நிலையில் அவர்களை எதிராகப் போய்விட்ட சாட்சியங்கள் என அறிவிக்கவில்லை.

நீதிமன்றம் சொன்ன இந்த வார்த்தைகளுக்கு, அதிக விளக்கம் தேவை இல்லை. மஹ்மூதிய மஸ்ஜித் குண்டுவெடிப்பு வழக்கில் அரசும், அரசு தரப்பு வழக்கறிஞரும் என்ன செய்தார்களோ அதைத்தான் இந்த சம்சவ்தா குண்டு வெடிப்பு வழக்கிலும் செய்தார்கள். அது, குற்றவாளிகள் மீது குற்றத்தை நிரூபித்திட வேண்டிய அரசு வழக்கறிஞர், குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பதாக வாதாடினார்கள். பார்பானி மஸ்ஜித் குண்டு வெடிப்பு அத்தியாயம் 99 இல் விவாதிக்கப் பட்டுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பிலும் போதுமான விஞ்ஞான ரீதியான அத்தாட்சிகள் இருந்தன. அதேபோல் இன்னும் பல தண்டனை தரதக்க ஆதாரங்கள் இருந்தன. ஆனால் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இந்த சம்சவ்தா விரைவு ரெயில் வண்டி குண்டு வெடிப்பில் மறைக்கப்பட்ட சாட்சியங்கள் – அறிவியல் பூர்வமான சாட்சியங்கள்.

*1)* இந்தக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி யவர்கள், டெல்லியின் பழைய இரயில் நிலையத் திலிருந்து தான் ரெயிலில் ஏறினார்கள். அப் போது அந்த ரெயில் நிலையத்தில் CCTV என்ற கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டி ருந்தன. அதில் இந்தக் குற்றவாளிகள் ரெயிலில் ஏறிடும் காட்சிப் பதியப்பட்டிருந்தது. ஆனால் இந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை NIA யும் என்ற தேசிய புலனாய்வு முகமையோ அரசு வழக்கறிஞரோ நீதிமன்றத்தின் முன் வைத்திட வில்லை.

இந்தக் கண்காணிப்பு கேமரா பதிவுகளின் அடிப்படையில் தீவிர விசாரணைகள் நடத்தப் பட்டிருக்குமேயானால் இன்னும் நிறைய சாட்சி யங்கள், சதித் திட்டங்கள் இவை வெளிச்சத்திற்கு வந்திருக்கும். இவை இந்த சம்சவ்தா ரெயில் குண்டு வெடிப்பு வழக்கிலும் இதர குண்டு வெடிப்பு வழக்கிலும், பல புதிய தகவல்களை – புலன் விசாரணைகளிலும் தந்திருக்கும். ஆனால் அவையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கைவிடப் பட்டன. ஆனால் இவையெல்லாம் முற்றாக மறைக்கப்பட்டுவிட்டன.

*2)* சில செல்பேசிகளில் பதிந்திருந்த ஆவணங்களின் அடிப் படையில் (CDR : Call Data Record) இந்த சம்சவ்தா குண்டு வெடிப்பின் மூளையாக விளங்கிய சுனில் ஜோஷி. குண்டு வெடிப்புக்கான தயாரிப்புகள் நடந்த (2007) நேரத்தில், கோத்தாரி அங்காடியில் நின்றிருந்தார் என்பது உறுதியானது. இந்த அங்காடியில்தான் குண்டுகளை எடுத்து வருவதிற்கான சூட்கேஸ்கள் வாங்கப்பட்டன

பிரக்யா சிங் தாக்கூர், சுனில் ஜோஷி, சந்தீப் டாங்கே, அசீமானந்தா ஆகியோரின் செல்போன் பதிவுகள் அசீமானந்தா, ஆகியோரின் செல்போன் பதிவுகள், இவர்களெல்லாம் இந்த சம்சவ்தா குண்டுவெடிப்புப் பற்றி பிப்ரவரி, மார்ச் – 2007 இல் அடிக்கடி பேசியது தெரியவந்தது. ஆனால் இந்த அறிவியல் ஆதாரத்தை "NIA" என்ற தேசிய புலனாய்வு முகவான்மையோ அல்லது அரசின் சார்பில் குற்றத்தை நிரூபிக்க நியமிக்கப்பட்ட வழக்கறிஞரோ நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்ததில்லை.

நீதிமன்றத்தின் கண்களிலிருந்து முற்றாக மறைத்து விட்டார்கள். அதேபோல் இந்தக் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட செல்போன்கள், சிம் கார்டுகள் இவை பற்றியும், எந்தத் தகவல்களையும் தந்திடாமல் இந்தக் குண்டு வெடிப்புகள் பயன்படுத்தப்பட்ட செல் போன்கள் யாருக்குச் சொந்தம், சிம் கார்டுகள், யார் பெயரில் வாங்கப்பட்டிருந்தன என்பவை யெல்லாம் பல அரிய தகவல்களைத் தந்திருக் கும். ஆனால் அவையெல்லாம் மறைக்கப்பட்டு விட்டன.

*3) 2008* ஆம் ஆண்டில் போப்பாலில் நடந்த ஒரு கூட்டத்தில்தான் “குண்டுக்குக் குண்டு” என்ற

ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் அசீமா னந்த் குண்டு வைத்து அப்பாவி இந்துக்களைக் கொலை செய்யும் ஜிஹாதிகளை நாமும் குண்டு வைத்து கொலை செய்திட வேண்டும் எனப்பேசி இருக்கின்றார்.

இதற்கிருந்த ஒரே சாட்சி கண்ணால் கண்ட சாட்சி டாக்டர். ராம் பிரதாப் சிங். ஆனால், இவர் பின்னால் சாட்சியம் சொல்லிட மறுத்து விட்டார். இந்தநிலையில் அவரை எதிராய்ப் போய்விட்ட சாட்சியம் என அறிவித்திருக்க வேண்டும். அத்தோடு அவரை நீதிமன்றத்தில் நிறுத்தி அவரை குறுக்கு விசாரணை செய்திருக்க வேண்டும். அவருடைய முரண்பட்ட செயலை, நீதிமன்றத்தின் முன் தோலுரித்துக் காட்டி இருக்க வேண்டும்.



*4) டாக்டர் ராம்பிரசாத் சிங் – ஐ போல் 51* (ஐம்பத்தொரு) சாட்சியங்கள், எதிராகத் திரும்பி விட்டார்கள். இவர்களை எதிராகத் திருப்பி விட்ட சாட்சியங்கள் என அறிவித்திருக்க வேண் டும். ஆனால், அவர்களை எதிராகப் போய்விட்ட சாட்சியம் என்று அறிவிக்கவில்லை. அவர் களைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை.

*5) சம்சவ்தா விரைவு ரெயிலில் வைக்கப்* பட்ட குண்டுகளில் இரண்டு குண்டுகள் வெடிக்கவில்லை. இந்த இரண்டு குண்டுகளும், இரண்டு சூட்கேஸ்களில் இருந்தன. இவை இந்த சூட்கேஸ்களுக்கான மேலுறையைத் தைத்தது இந்தூரைச் சார்ந்த ஒரு டெய்லர். இந்த டெய்லரை வைத்து ஓர் அடையாளம் காணும், அணிவகுப்பு நடத்தி இருக்க வேண்டும். (TIP-Test Indenfication Parade). இதை நடத்தி இருந்தால் யார் அந்த சூட்கேஸ் உரையைத் தைக்க வந்தார். அவருக்கும் இந்தக் குண்டு வெடிப்பிற்கும் என்ன சம்மந்தம்? என்பவையெல்லாம்தெளிவாகத் தெரிய வந்திருக்கும்.

இந்த வழக்கை புலன் விசாரணை செய்த முகமை, இதைச் செய்யவில்லை இதனால், பல முக்கிய தெளிவான சாட்சியங்களை விட்டு விட்டார்கள்.

மேலே நாம் குறிப்பிட்ட வற்றிலிருந்து ஓர் உண்மை தெளிவாகும். அது சாட்சியங்கள்தாம், வழக்கில் எதிராகப் போய்விட்டன என்பது மட்டுமல்ல, வழக்கை விசாரித்த முகமைகளும் எதிராகப் போய்விட்டன. மட்டுமல்ல வழக்கை விசாரித்தவர்கள், குற்றவாளிகளுக்கு எதிராக குற்றவாளிகளை இவர்தாம் குற்றவாளிகள் என வாதிட வேண்டிய அரசு வழக்கறிஞர்கள் அனை வரும் குற்றவாளிகளைப் பாதுகாப்பவர்களாக ஆகிவிட்டார்கள்.

குற்றவாளிகளைக் கூண்டிலே நிறுத்தி இவர்கள்தாம் குற்றவாளிகள் என வாதித்திட வேண்டியவர்கள், இவர்கள் குற்றவாளிகள் அல்ல என வாதிக்கத் தலைப்பட்டு விட்டார்கள்.

இந்த இடத்தில்தான் அதாவது இப்படிப் பட்ட சூழ்நிலையில் தான் நீதிமன்றம், சட்டப் படியாகத்தான் செய்திட வேண்டிய கடமை களைச்செய்திட முன்வந்திட வேண்டும். அதாவது இந்த இடத்தில் உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டு தல்களின் கீழ் நீதிபதி செயல்பட வேண்டும். இந்த வழிகாட்டுதல் பெஸ்ட் பேக்கரி வழக்கு என அறியப்பட்டு (2004) வழக்கில் வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டுதலின் படி, நீதிபதி அவர்கள் இந்த விசாரணையில் ஓர் அங்கமாக மாறிவிட வேண்டும். மறைக்கப்படும் எல்லா விவரங்களை யும், கேட்டுப் பெற்றிட வேண்டும் உண்மையை கண்டறிந்திட வேண்டும். நீதி பரிபாலனத்தை செம்மையாக நிறைவேற்றிட வேண்டும். பக்க சார்பாக நின்றிடக் கூடாது. நடுவு நிலையோடு நடந்திட வேண்டும்.

(ஆதாரம் : உச்சநீதி மன்ற தீர்ப்பு : Zakir Habibullah. H.S. Saaik VS State of Gujarath, 2004 (A) Supreme Court Cases 158 Whichis commonly known as best Bakery Case : P.39)

தொடர் – 22

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்..?



– காஞ்சனா (எ) கதீஜா ஃபாத்திமா

கடவுளைப் பற்றி படிக்க போகின்றேன். உண்மையான கடவுளை கண்டுபிடிக்க போகின்றேன். என்றெல்லாம் யாரேனும் சொல்லிவிட்டு கிளம்பினால், “எதற்கு உனக்கு இந்த வேண்டாத வேலை. கடவுளை பற்றின கல்வி என்பது தெளிவில்லாத குழப்பமான சப்ஜக்ட். அதிலெல்லாம் நமக்கு திருப்தியான பதில்கள் எங்குமே கிடைக்காது. நேரத்தை வீணடிக்காதே!” என்று சொல்லிவிடுவார்கள்.

கடவுளைப் பற்றி அறிதல் என்றாலே, குழப்பமான சப்ஜக்ட் என்றொரு மனநிலை இன்று மக்களிடத்தில் இருக்கின்றது. அதற்கு காரணம் உலகில் உள்ள மதங்கள் கடவுள் விஷயத்தில் கொண்டிருக்கும் மனிதனின் யதார்த்த வாழ்வியலுக்கு பொருந்தாத, குழப்பமான கோட்பாடுகள் தான்.

உதாரணத்திற்கு இந்து மதத்தில், “33 ஆயிரம் கோடி கடவுள்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு வேலை” என்றும், “கிருஸ்தவ மதத்தில் பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் முக்கடவுள் கொள்கை, கடவுள் மனித உருவில் பூமிக்கு வந்து மனிதர்களின் பாவங்களை வாங்கிக் கொள்வார்” போன்ற மனித அறிவிற்கு பொருந்தாத யதார்த்த நிலைகளை மீறிய கடவுள் கோட்பாடுகளை சொல்லலாம்.

ஆனால் இஸ்லாம் கடவுள் கொள்கையில் மிகத் தெளிவாக உள்ளது. இறைவனைப் பற்றினத் தேடல் என்ற தலைப்பில் ஒரு சராசரி மனிதன் இஸ்லாத்தின் இறைக் கோட்பாட்டை அனுகினால், தெளிந்த நீரோடையைப் போல அவன் இறைவன் பற்றின உண்மைகளை அறிந்து கொள்வான். அப்படி உண்மையான கடவுள் யார் என்ற தேடலை பத்து வயதிலிருந்து தொடங்கிய சகோதரி காஞ்சனா, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு கதீஜா ஃபாத்திமா ஆன கதை!

## காஞ்சனா (எ) கதீஜா ஃபாத்திமா

என்னுடைய பெயர் கதீஜா ஃபாத்திமா. என்னுடைய பழைய பெயர் காஞ்சனா. நான் இஞ்சீனிரிங் முடித்துள்ளேன். நான் பிறப்பால் ஒரு இந்து. தற்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன்.

## இந்து மதமும் நானும்

நான் இந்துவாக இருக்கும் போது அந்த மதத்தில் மிகுந்த பக்தியாகத்தான் இருந்தேன். ஒரு சிறிய தவறிழைத்தால் கூட அதற்காக மிகவும் வருந்துவேன். எனக்கு பத்து வயது இருக்கும் போது கூட, "நமக்கு முன் நம் அப்பா, அம்மா பிறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன் அவர்களது அப்பா, அம்மா பிறந்துள்ளார்கள். இப்படியே சென்று கொண்டே இருக்கும் போது நிச்சயமாக முதன் முதலில் தோன்றிய ஒரு மனிதர் இருப்பார். அது யார்?" என்றெல்லாம் சித்திப்பேன்.

ஆனால் அந்த நேரத்தில் யாரிடத்தில் இதை கேட்பது? எப்படி இதை கண்டுபிடிப்பது? என்றெல்லாம் தெரியாது. மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு அமைதியாக இருந்துவிடுவேன்.

மேலும் எனக்கு கடவுள் யார்? அவர் எப்படி இருப்பார்? அவர் தான் நம்மையெல்லாம் படைத்தாரா? என்ற தேடல் இருந்து கொண்டே இருந்தது. எந்தளவுக்கென்றால், நான் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் நேரத்தில் கூட, தேர்வுக்காக படிப்பதை விட கடவுளைப் பற்றின தேடல் சிந்தனைகள் தான் அதிகமாக இருந்தது. மேலும் அது எனக்கு ஒரு குழப்பமான மனநிலையையும் ஏற்படுத்தியது.

## கிருஸ்தவமும் – கடவுளும்

அப்போது எனக்கு தெரிந்த ஒரு கிருஸ்தவ சகோதரியிடம் என்னுடைய இந்த நிலையைப் பற்றி சொன்னேன். அதற்கு அவர், "நீ எல்லாவற்றையும் கடவுளாக ஏற்றுக் கொள்வதால் தான் இப்படியெல்லாம் ஆகிறது. கர்த்தர் எப்போதும் ஒருவராகத்தான் இருக்க முடியும். கர்த்தருடைய படைப்புகளை நாம் கடவுளாக வணங்கக் கூடாது" என்று சொன்னார்.

அந்த சமயத்தில் அவர்களின் இந்த கூற்று எனக்கு அமைதியை கொடுத்ததால் அவர்களிடமிருந்து ஒரு பைபிளை வாங்கி படிக்க ஆரம்பித்தேன். அப்படி படிக்கும் போது பைபிளின் ஒரு பகுதியில் கர்த்தர் தான் இறைவன். அவரைத்தவிர யாரையும் வணங்கக்கூடாது என்று இருந்தது. இன்னொரு பகுதியில் இயேசு தான் கர்த்தர் அவரை வணங்க வேண்டும் என்று இருந்தது.

எனக்கு பைபிளை கொடுத்த அந்த சகோதரியிடமே என்னுடைய சந்தேகங்களை, குழப்பங்களை கேட்க தொடங்கினேன். அதற்கு அவர்கள், "கர்த்தர் தான் மனிதனுடைய பாவங்களை மன்னிப்பதற்காக மனித உருவில் இயேசுவாக பூமியில் அவதரித்தார். கர்த்தரும், இயேசுவும் ஒன்றுதான்" என்று சொன்னார்கள்.

சந்தேகங்களும், குழப்பங்களும் தீர்ந்தபாடில்லை என்றாலும், அந்த நேரத்தில் எனக்கு கிருஸ்தவ மதம் ஏற்றதாக இருந்ததால் சுமார் இரண்டு வருடங்கள் என் பெற்றோர்களுக்கு தெரியாமல் கிருஸ்தவ மதத்தை பின்பற்றினேன்.

## இஸ்லாமும் – கடவுளும்

கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயின்று கொண்டிருக்கும் போது ஒரு புத்தகக் கண்காட்சிக்கு நான் சென்றிருந்தேன். அங்கு செல்லும் வரை எனக்கு தெரியாது அது ஒரு இஸ்லாமிய புத்தகக் கண்காட்சி நிலையம் என்று. எனக்கு பெரியதாக அதிர்ச்சி ஒன்றும் இல்லை. ஏனென்றால் கடவுள் யாரென்று தேடிக் கொண்டிருந்த எனக்கு இஸ்லாத்தை பற்றி தெரிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக அது அமைந்தது.

அந்த கண்காட்சியில் திருக்குர்ஆனுடைய விஞ்ஞான அற்புதங்களை பறைசாற்றும் விதமான பேனர்கள் தொங்கவிடப்பட்டிருந்தது.

முதல் பேனரில், "இறைவன் என்றால் யார்? அவனுடைய தன்மைகள் என்ன? அவனுடைய படைப்புகளின் நிலைகள் என்ன?" போன்றவைகள் எல்லாம் இருந்தது. *(பார்க்க அடிக்குறிப்பு – 01)*

இரண்டாம் பேனரில், "இயேசு கிருஸ்து ஓர் இறைத்தூதர். அவர் கடவுளில்லை" என்ற திருக்குர்ஆன் வசனங்களெல்லாம் இருந்தது. *(பார்க்க அடிக்குறிப்பு – 02)*

மூன்றாம் பேனரில், "ஒரு குழந்தை தன் தாயின் வயிற்றில் கருப்பையில் எப்படி உருவாகிறது" என்ற விஞ்ஞான உண்மைகளை சொல்லக்கூடிய

வசனங்கள் இருந்தது. இந்த மூன்றாவது பேனர் தான் என்னை மிகவும் கவர்ந்தது. (பார்க்க அடிக்குறிப்பு – 03)

தற்போதுள்ள நவீன மருத்துவ உலகில் நவீன கருவிகள் மூலமாக கருப்பையில் என்ன நடக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த விஞ்ஞான உண்மையை சர்வ சாதாரணமாக 1400 ஆண்டுகளுக்கு முன்னாள் திருக்குர்ஆனால் எப்படி சொல்ல முடிந்தது? என்ற சிந்தனை எனக்குள் தோன்றியது. அதன் பின் நான் இஸ்லாத்தை பற்றி அதிகமாக படிக்க ஆரம்பித்தேன்.

## முஸ்லிம்களும் நானும்

எனக்கு முஸ்லிம்களைப் பற்றின சில தவறான சிந்தனைகள், எண்ணங்கள் சிறு வயதிலிருந்தே இருந்து வந்தது. அது, ''முஸ்லிம் ஆண்கள் நிறைய பெண்களை திருமணம் செய்துக் கொள்வார்கள். பெண்களை புர்கா எனும் பெயரில் அடிமைப் படுத்துவார்கள்'' என்று.

ஆனால் இஸ்லாத்தைப் பற்றி படிக்கும் போதுதான் எனக்கு அவைகளெல்லாம் விளங்கியது. இஸ்லாத்தில் பெண்கள் பொக்கிஷம் போன்றவர்கள். இஸ்லாத்தில் ஆண்கள், பெண்களை புர்கா அணியுமாறு வற்புறுத்துவதில்லை. மாறாக நம்மை படைத்த அல்லாஹ் சொல்கிறான். அதை அவர்கள் செய்கிறார்கள்.

அதேபோல் இஸ்லாத்தில் ஆண்கள் பல மனைவிகளை திருமணம் செய்துக் கொள்ளலாம் என்பதெல்லாம் ஓர் அனுமதிதானே தவிர, கட்டாயம் அல்ல. நபி(ஸல்) அவர்கள் தனது முதல் திருமணத்திற்காக தேர்ந்தெடுத்த பெண், அன்னை கதீஜா (ரழி) அவர்களின் வயது அப்போது 40. ஆக ஆசைக்காகவும், இச்சைக்காகவும் இஸ்லாத்தில் ஆண்கள் பெண்களை திருமணம் செய்வதில்லை. இஸ்லாத்தில் திருமணம் என்பது அழகிய வாழ்வியல் முறை. அதில் பெண்களுக்குத்தான் அதிக பாதுகாப்பும், சலுகைகளும் உள்ளது என்று நான் புரிந்து கொண்டேன்.

இவைகளெல்லாம் எனக்கு புரிந்த அந்த நேரத்தில் ஒரு நொடிக்கூட தாமதிக்காமல், உடனேயே திருக்கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். அன்றைய இரவு எனக்கு எந்த குழப்பமுமில்லை. தெளிந்த நீரோடையைப் போல என் மனம் இருந்தது. அன்று நான் என்றைக்கும் இல்லாத அளவுக்கு நிம்மதியாக தூங்கினேன்.

## சோதனைகள்

நான் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டேன் என்பது என் பெற்றோர்களுக்கு தெரியாது. அதனால் இஸ்லாமிய போதனைகளை பின்பற்றுவது எனக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. தொழுகையைக் கூட என்னால் சரிவரத் தொழ முடியாத சூழல் இருந்தது. படுத்துக் கொண்டு, புத்தகம் படிப்பதைப் போல், உட்கார்ந்து கம்யூட்டர் உபயோகப்படுத்துவது போன்று பெற்றோர்களின் கவனத்தை திசைத் திருப்பியெல்லாம் தொழுவேன்.

நோன்பு நேரங்களில் காலையில் யாருக்கும் தெரியாமல் பாலும், பேரித்தம் பழமும் சாப்பிட்டு விட்டு நோம்பு வைத்து விடுவேன். மாலை கல்லூரி விட்டு வரும் போது, பேருந்திலேயே கிடைப்பதை வைத்து நோம்பு திறந்து விட்டு வீட்டிற்கு வந்துவிடுவேன்.

இந்த சூழ்நிலைகளெல்லாம் எனக்கு சிரமமாக இருந்தது. அந்த நேரத்தில் நான் திருக்குர்ஆனில் ஒரு வசனம் படித்தேன்,

''இன்னும் எவர் அல்லாஹ்வின் பாதையில் நாடு கடந்து செல்கிறாரோ, அவர் பூமியில் ஏராளமான புகலிடங்களையும், விசாலமான வசதிகளையும் காண்பார். இன்னும் தம் வீட்டை விட்டு வெளிப்பட்டு அல்லாஹ்வின் பக்கமும், அவன் தூதர் பக்கமும் ஹிஜ்ரத் செல்லும் நிலையில் எவருக்கும் மரணம் ஏற்பட்டு விடுமானால் அவருக்குரிய நற்கூலி வழங்குவது நிச்சயமாக அல்லாஹ்வின் மீது கடமையாகிவிடுகின்றது. மேலும் அல்லாஹ் மிக மன்னிப்போனாகவும், பேரன்புமிக்கோனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன்: 4:100)''

இந்த வசனம் என்னுடைய ஈமானை வலுப்படுத்தியது. இனி இங்கு இருக்க வேண்டாம் என்று முடிவெடுத்தேன். வீட்டை விட்டு வெளியேறி சென்னையில் இருக்கும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் அலுவலகத்திற்கு சென்று என் நிலையைச் சொன்னேன்.

## எனக்கு பைத்தியம் பிடித்து விட்டதாம்

அவர்கள் உடனேயே முறைப்படி என் பெற்றோர்களுக்கு தகவல் சொன்னார்கள் என் பெற்றோர்கள் அங்கு வந்தார்கள். என்னிடம் கெஞ்சினார்கள். என் காலில் விழுந்து அழுதார்கள். ஆனால் நான் விடாப்பிடியாக இஸ்லாத்தை முறைப்படி படித்துவிட்டு நானே வீட்டிற்கு வருவேன். இப்போது நான் வரமாட்டேன் என்று கூறிவிடுவேன்.

தினமும் வந்து என்னை மனம் மாற்ற முயற்சிப்பார்கள். அன்பாக பேசுவார்கள். சில நேரங்களில் ஆத்திரமாக பேசுவார்கள். ஆனால் நான் எதற்கும் அடிபணியாததால், எனக்கு ஏதோ பைத்தியம் பிடித்துள்ளது. அதனால் தான் இப்படியெல்லாம் செய்கின்றேன் என்று என்னை மனநல மருத்துவரிடம் அழைத்து சென்று காண்பித்தார்கள்.

அந்த மனநல மருத்துவர் என்னிடம் எதுவுமே பேசாமல் என் பெற்றோரிடமே பேசிக் கொண்டிருந்தார். இறுதியாக என்னிடம் வந்தார். “ஒரு விடயம் அதிகமாக இருந்தாலும் பிரச்சனை. குறைவாக இருந்தாலும் பிரச்சனை. உனக்கு இறைநம்பிக்கை அதிகமாக இருக்கின்றது. அதனால் நீ என்னிடம் ஒரு வாரம் சிகிச்சை பெற்றே ஆகவேண்டும்” என்று கூறிவிட்டார்.

அந்த நேரத்தில் என் குடும்பத்தார்கள் மீது எனக்கு மிகுந்த கோவம் ஏற்பட்டது. நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக எனக்கு “பைத்தியம்” பட்டம் கட்டி, மருத்துவமனையில் சிகிச்சையளிக்கக் கூடிய அளவிற்கு சென்று விட்டார்களே என்று.

ஆனால், நபியவர்களின் வாழ்விலேயே இதுபோன்ற சம்பவங்களெல்லாம் நடந்துள்ளது. நமக்கு நடக்காதா என்ன? என்று எனக்கு தோன்றியது. என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

என் பெற்றோர்கள் என்னை எப்படியாது இஸ்லாத்தை விட்டு மீட்டுக் கொண்டு வந்து விட வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்தார்கள். ஆனால் எதற்கும் நான் அசரவில்லை. இறுதியாக நான் காயல்பட்டினம் மத்ரஸாவிற்கு சென்று இஸ்லாத்தை படிக்க வேண்டும் என்று முடிவெடுத்து சென்னையிலிருந்து கிளம்பினேன்.

என்ன செய்தாலும் இவள் இனி இஸ்லாத்தை விடமாட்டாள் என்பதை உணர்ந்த எனது பெற்றோர் இறுதியாக, நான்கு மாதங்கள் படித்து விட்டு திரும்பி வந்து விடவேண்டும் என்று கூறி அனுப்பிவைத்தார்கள். ஆனால் நான் ஆலிமா பட்டப்படிப்பு படிக்க வேண்டும் என்று தற்போது முடிவெடுத்துள்ளேன்.

நான் இந்த உலகில் அதிகமாக நேசித்தது என் பெற்றோர்களைத்தான். ஆனால் அல்லாஹ்விற்காக அவர்களை விட்டு தனியே வந்துள்ளேன். என்னைப் போல் என் பெற்றோர்களுக்கும் நேர்வழியான இஸ்லாம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். அஸ்ஸலாம்.

### அடிக்குறிப்பு-01

இதுபற்றி திருக்குர் ஆனுடைய 112–வது அத்தியாயம் பேசுகிறது. உலகில் எந்த ஒரு நூலும் இறைவனுக்கான இலக்கணத்தை இவ்வளவு சுருக்கமாக அதுவும் நான்கு வரிகளில் சொல்லியதில்லை. அந்த வசனங்கள்

1. அல்லாஹ் அவன் ஒருவனே.
2. அவன் எவரிடத்திலும் தேவையற்றவன்.
3. அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை.
4. அன்றியும் அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1–4)

### அடிக்குறிப்பு-02

இதுபற்றி திருக்குர்ஆனின் மூன்றாவது அத்தியாயம் பேசுகிறது. அதில் இயேசு (எ) ஈஸா (அலை) அவர்களைப் பற்றியும், அவரது தாயார் மர்யம்(அலை) அவர்கள் பற்றியும் அல்லாஹ் தெளிவாக விவரிக்கின்றான்.

### அடிக்குறிப்பு-03

இதுகுறித்து திருக்குர்ஆனுடைய பல வசனங்கள் பேசுகிறது. உதாரணத்திற்கு திருக்குர்ஆனின் 75வது அத்தியாயத்தில் 37 வசனம் முதல் 40வது வசனம் வரை காணலாம்.

- Source: OATS PRODUCTION youtube channel.

– த. அஷ்ரஃப் இஸ்லாம்.




# கஷ்மீர் மக்கள் ஏன் போராடுகின்றார்கள்..?

சந்தோஷ் பாரதிய்யா

கஷ்மீர் ஏரிகளில் உல்லாசப் படகுகளில் ஏறி பயணம் செய்து எதிர்வரும் சுகங்களைக் கொள்ளைக் கொள்ளும் நாள் மீண்டும் எப்போது வருமோ!

அங்குள்ள தோட்டங்கள், தன்மைத் தாவிடும் தளிப்பொழில்களில் உலாவி உடன்வரும் உல்லா சத்தைச் சுவைக்கும் நாள் எந்நாளோ!

கஷ்மீரத்த மழலைகள் உள்ளம் மகிழ வெளியே உலாவி அன்புத்தடாகங்களில் மூழ்கித் திளைக்கும் நாள் எந்நாளோ!

தம்பதியரின் முதலிரவு உல்லாசத்தை உவகைக் கூட்டித் தந்திடும் உல்லாசபுரி கஷ்மீர் இனி களைகட்டி கம்பீரமாய் நிமிரும் நாள் எந்நாளோ!

இன்று கஷ்மீரின் நிலை இதுதான்.

எந்தப் பக்கத்திலிருந்து குண்டு பொழியுமோ கொடுவாள் பாயுமோ என வினாடிகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டு நிலைகுலைந்து நிற்கின்றனர் மக்கள்.

இப்போது கஷ்மீரைப் பற்றி ஒரே ஒரு கவலை தான்! அதாவது நிலைமை இப்போது இருப்பதைப்

அன்பார்ந்த வாசகர்களே...!

1990களில் "Illustrated Weekly" என்ற (1880 – 13. நவம்பர் – 1993) என்ற வார இதழில் இடம்பெற்ற கட்டுரை ஒன்றை இங்கே இடம்பெறச் செய்கின்றோம். கட்டுரையாளர் சந்தோஷ் பாரதிய்யா அவர்கள் கஷ்மீரு; சென்று வந்து எழுதிய கட்டுரை. இது கடந்த 70 – 75 ஆண்டுகளாக கஷ்மீரில் என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துரைப்பது.

1990 களின் நிகழ்வுகளே இன்றும் 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் நடக்கின்றன. அவை இன்று நடப்பன போன்றிருக்கின்றது. – படியுங்கள்....

கட்டுரை இன்று “உத்தமர்” வேஷம் போடும் ஃபரூக் அப்துல்லாஹ்வின் முகத்திரையைக் கிழித்துக்காட்டும்.

இன்று கஷ்மீர் பிரச்சினையில், நீலிக் கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் காரர்கள் அன் றென்ன செய்தார்கள் என்பதையும் சொல்லும்.

போல் மோசமாகவே நீடிக்குமோ? அல்லது இன்னும் (இதைவிட) மோசமாகுமா?

ஆனால்,

ஒரு விஷயத்தை எல்லோரும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

இன்று கஷ்மீரிலிருந்தும் பதற்றமும் பர பரப்பும் பொதுவாகப் பேசப்படுபவரைப் போல் மூன்ற மாதங்களில் உருவானதல்ல என்பதே! மூன்றே மாதங்களில் நிலைமை இவ்வளவு மோசமாகிடவும் முடியாது.

கொழுந்துவிட்டெரியும் இன்றைய கஷ்மீர் நிலவரங்களுக்கு ஒரு நாற்பதாண்டு கால பின்னணியே உண்டு.

இன்று சின்னா பின்னமாக ஆக்கப்பட்டி ருக்கும் கஷ்மீர் பள்ளத் தாக்கினை சீர் செய்திட நம்மால் இயன்றவற்றை யெல்லாம் செய்திட வேண்டும் என்பது இன்றியமையாதது. அதை விட இன்றியமையாதது, அங்கு நிலைமை இவ்வளவு மோசமாகிடும் அளவுக்கு என்ன நடந்து என்பதைக் கடைப்பிடிப்பதே! இதைச் செய்யவில்லைஎன்றால், கடந்தபல ஆண்டுகளாக கஷ்மீர் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நம்மால் தெரிந்துகொள்ள இயலாது.

அதேபோல் இந்த அநீதிகளை அந்த மக்களின் மீது கட்டவிழ்த்துவிட்டதற்கு யார் யார் காரணம் என்பதையும் கண்டுபிடித்தாக வேண்டும்.

இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள வில்லையென்றால் கஷ்மீர் பள்ளதாக்கு ஏன் பற்றி எரிகின்றது என்பதையும், அதனை அணைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள இயலாது.

கஷ்மீரின் தலைநகராசிய ஸ்ரீநகரில் இருக்கும் இன்ஜீனியரிங் கல்லூரி ஆசியாவிலேயே மிகப் பெரிய இன்ஜீ னியரிங் கல்லூரி! உண்மைதான்.

இந்தக் கல்லூரி இடம் கிடைக்க வேண்டு மென்றால் முதல் மாணவன் என்ற தகுதி மட்டும் போதாது, குறைந்தது ஐந்து லட்சம் ரூபாயாவது மூட்டை கட்டி வைத்திடும் தகுதியும் வேண்டும்.

கஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழ்பவர்களில் 95% 



முஸ்லிம்கள். இவர்களுக்கு ஏன் இந்த இன்ஜீனி யரிங் கல்லூரிகளில் இடம் கொடுப்பதே இல்லை?

இதே நிலைதான் ஸ்ரீநகரிலிருக்கும் மருத்து வக் கல்லூரியிலும்.

இந்த மருத்துவக் கல்லூரியிலும், இன்ஜீனி யரிங் கல்லூரியிலும் கடந்த 10 முதல் 15 ஆண்டு களுக்கிடையில் பயின்று பட்டம் பெற்றவர்களில் எத்தனைபேர் கஷ்மீரிகள்?

இதில் யாராவது உண்மையைக் கண்டறிந்து நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

கசப்பான அந்த உண்மை என்னவெனில் இன்று வரை கஷ்மீர் இன்ஜீனியரிங் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடித்துக் கொண்டவர்கள், பயின்று பட்டம் பெற்ற வர்கள், அத்தனைபேரும் கஷ்மீருக்கு வெளியே உள்ளவர்கள்.

இது பட்டவர்த்தனமான அந்த மக்களுக்கு இழைத்த பாதகமல்லவா?



இதிலும் சாலை அனுமதி கள் அவர்களுக்கு வழங்கப் படுவதில்லை.

20,000 ரூபாயை விட்டெறியும் வெளியாட் களுக்கே இவை தரப்படு கின்றன.

இப்படித் திரும்பும் திசையெல்லாம் அவர்கள் விரக்தியின் விளிம்பிற்கே ஓட்டப்படு கின்றார்கள்.

அவர்களுக்கு அவர்களின் சொந்த மண்ணிலேயே உழைத்து வாழும் உரிமை மறுக்கப்பட்டு விட்டது.

சுற்றுலாதான் கஷ்மீர் மக்கள் வயிறு பிழைக்க உதவும் முக்கியமான தொழில்.

ஆனால் இதனை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அனைத்தும் இன்று வரை அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டே வந்திருக்கின்றன. சுற்றுலா காலங்களைப் பயன்படுத்தி தங்கள் வயிற்றையும் சற்றுக் கழுவலாம் என எண்ணி உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஊர்திகளை வாங்கிட அவர்கள் அரசுக்கோ அங்கிருக்கும் வங்கிகளுக்கோ மனுப் போட்டால் அவை கவனிக்கப்படுவதே இல்லை.

இதனால் அவர்கள் ஓட்டை உடைசலான பழைய ஊர்திகளையே பயன்படுத்திட நிர்ப்பந் திக்கப்பட்டார்கள். வரும் உல்லாசப் பயணிகள் எவரும் இந்தப் புராதன ஊர்திகளை அண்டுவதே இல்லை.

கஷ்மீர் இளைஞர்களில் யாராவது சிறு தொழில்களைத் துவங்கிட முயற்சி செய்தால் அங்கேயும் அவர்களுக்கு அதிரடிதான். சாதாரணமாக இரண்டு மாதங்களில் வழங்கப்படும் அனுமதிகள் கஷ்மீரிகள் என்றால் குறையாமல் இரண்டு வருடங்கள் கழித்துத்தான் வழங்கப்படு கின்றன.

தொழில்களைத் துவங்குவதற்கு இடங்களும் கஷ்மீரிகளுக்கு அவ்வளவு எளிதாக ஒதுக்கப் படுவதில்லை.

கஷ்மீரில் ஆட்டோ, டாக்சி இவற்றை ஓட்டு பவர்கள் பட்டம் பெற்றவர்கள்தான். காரணம் இவர்களுக்கு வேறு பணிகள் தரப்படுவதில்லை.

அவர்கள் வங்கிகளை அணுகினால் அந்த வங்கிகள் அவர்களின் மனுக்களை ஏறெடுத்தும் பார்ப்பதே இல்லை. குறையாமல் 10,000 ரூபாயை மூட்டை கட்டி வங்கி அதிகாரிகளின் முன்னால் வைத்தால்தான் அதிகாரிகளின் கடைக்கண் பார்வை அந்த மனுக்களின் பக்கம் திரும்பும்.

கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எத்தனை கஷ்மீரிகளுக்கு தொழில் துவங்க நிதி உதவி செய்திருக்கின்றன?

இந்த உண்மையை – இன்று கஷ்மீரில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு கண்ணீர் வடிப்பதாக காட்டிக் கொள்வோர் கண்டுபிடித் துச் சொல்லட்டும்.

கஷ்மீர் மக்கள் ஜம்மு – கஷ்மீர் வங்கிகளை மட்டுமே நம்புகின்றார்கள் ; தேசிய வங்கிகளை நம்புவதே இல்லை.

இவையெல்லாம் கிடக்கட்டும் ; கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளில் கஷ்மீரில் சாலைகள் போடுவதற்கு அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு? ஒதுக்கிய தொகையைக் கொண்டு போட்ட சாலைகள் எத்தனை?

சாலைகள் போடுவதற்கென ஒதுக்கிய தொகை கஜனாவை விட்டு வெளியே வந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால். அந்தத் தொகை யாருடைய கைகளிலோ சிக்கி எங்கேயோ பதுங்கிக் கொண்டது. இந்த முழுத் தொகையையும் விழுங்கியது யார்?

அமைச்சர்களா? அதிகாரிகளா?

இவற்றையெல்லாம் நாம் இப்போது கணக்குப் பார்த்தாக வேண்டும். கஷ்மீர் பிரச்சினைக்கு நாம் உண்மையிலேயே தீர்வு தேடுபவர்களாக இருந்தால்,

பஞ்சாபில் வாழ்பவர்கள் தீண்டவே மாட்டோம் என வெறுத்தொதுக்கிய அரிசியையும் பருப்பையும் கஷ்மீர் மக்கள் தலையில் கட்ட எல்லா முயற்சிகளையும் செய்தோம்.

மனிதர்கள் தொடவே கூசும் முடை நாற்றம் வீசும் அரிசியை அந்த மக்களுக்கு பங்கிட்டுத் தருவதிலேயே நியாயம் செய்தோமா? இல்லை.

இந்தக் கொடுமையை அங்கே கோலோச்ச விட்டதற்கு என்ன காரணம்?

இந்தக் கேள்வியை இன்று கஷ்மீர் பிரச்சினையில் முந்திக்கொண்டு முறையீடுகளைக் கொண்டு வருபவர்கள் எப்போதாவது கேட்டதுண்டா?

பண்டித நேரு, ஷேக் அப்துல்லாஹ் இவர்களின் காலங்களிலிருந்த அதே இடிந்த சுவர்கள் தானே இன்றும் அங்கே கல்லூரிக் கட்டிடங்கள் என்ற பெயரை சுமந்து நிற்கின்றன.

ஏன் நாம் அந்த மாநிலத்தில் புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பதில்லை?

கஷ்மீரிலிருக்கும் பள்ளிகள் வாராந்திர விடுமுறை அறிவிப்பதே இல்லை. மழை பெய்தால் விடுமுறை தானாக வந்துவிடும்.



காரணம், அங்குள்ள பள்ளிகள் பலவற்றுக்கு மேற்கூரையே கிடையாது.

அடிப்படைக் கல்வியும், ஆரம்பக் கல்வியும் அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்தனவே, ஏன்? ஏன்?? ஏன்???

கஷ்மீரில் பல திட்டங்கள் அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலேயே நிற்கின்றன.

ஆங்காங்கே நாட்டப்பட்டு மறக்கப்பட்டு விட்ட அடிக்கல்கள், அங்கெல்லாம் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்பதையும், அவை அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டுக் கொண்டே நிற்கின்றன.

அந்தக் கற்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தேதிகள் கஷ்மீர் மக்கள் நீண்ட நெடியதொரு காலம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள் என்பதைத்துல்லியமாகச்சுட்டிக்காட்டுகின்றன.

கஷ்மீர் மக்களை இப்படியெல்லாம் ஏமாற்றி அவர்களை தொடர்ந்து துன்பங்களிலேயே துவள விட்டவர்கள்தாம் இன்று கஷ்மீரில் நடக்கும் அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பு.

மேலே குறிப்பிடப் பட்டவையெல்லாம் மேலெழுந்தவாரியாக எடுத்துக் காட்டப்பட்ட அநீதிகளே!

ஆழமாக அகழ்ந்துப் பார்த்தால் அந்த மக்கள் மீது பாய்ச்சப்பட்ட எத்தனையோ அநீதிகள் அம்பலமாகும்.

இவற்றிலெல்லாமிருந்து மிகப்பெரியதொரு உண்மை வெளிச்சத்திற்கு வருகின்றது.

இன்று கஷ்மீரில் நடந்து கொண்டிருப்பவை கடந்த 40 ஆண்டுகளாக இழைக்கப்பட்ட அநீதிகளின் விளைவுதான் என்பதே அந்தப் பேருண்மை.!

கஷ்மீரில் குடியரசு தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் அந்த மாநிலத்தைச் சார்ந்த எவரும் அதில் கலந்துகொள்ளவில்லை.

விரக்திக்கும், கோபத்திற்கும் ஆளாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட அந்த மக்கள் ரேஷன்

கடைகளுக்கு எப்போதும் வருவதே இல்லை. நாம் அளந்து கொட்டும் அழுகிய அரிசியையும் புழுத்த பருப்புகளையும் அள்ளிக் கொண்டு போக.

ஆகவே அவர்கள் இந்தியன் என்ற எழுத்துக் களை எங்கே கண்டாலும் அதனை உடனே மாய்த்து விடுகின்றார்கள். அலுவலகங்களில் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரியானாலும் சரி கடை நிலைஊழியானாலும்சரி அத்தனைபேரும் சுதந்திரம் வேண்டும் என்றே பேசுகின்றார்கள்.

அதிலும் அவர்களுக்கு வாக்களிக்கப்படா தவற்றை அவர்கள் கேட்கவில்லை.

அவர்கள் கேட்பதெல்லாம் பண்டித ஜவஹர் லால் நேரு வாக்களித்த மக்கள் விருப்பத்தைக் கணிக்கும் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதே!

கஷ்மீர் மக்களின் ஆதங்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆண்டாண்டு காலமாக நாம் மேற்கொண்ட அணுகுமுறை கஷ்மீரில் எங்கும் வியாபித்து நின்ற ஊழல் இவற்றால் அங்குள்ள ஏழைகளுக்கும் சராசரி மனிதர்களுக்கும் உணவு தானியங்களி லிருந்து எதுவுமே கிடைக்காது என்ற நிலை உருவானது. அந்த மக்களுக்கு அனைத்தும் மறுக்கப்பட்டன.

விரக்தியின் விளிம்பில் அந்த மக்கள்நின்று கொண்டிருந்தபோது ஒரு நாள்..... ஓர் இளைஞன் நீட்டிய துப்பாக்கியோடு அதிகாரிகள் முன் தோன்றினான். ''முறையாக உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட வேண்டும் இல்லையென் றால்.... சுட்டு விடுவேன்'' என மிரட்டினான்.''

ஏழை எளிய மக்களிலிருந்து எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்ற நிலை வந்தது.

காலங்காலமாக மக்களின் அழு குரல்கள், கோஷங்கள், உண்ணாவிரத அறப் போராட் டங்கள் ஆகியவை சாதிக்காததை ஒரு இளைஞ னின் கைத் துப்பாக்கி சாதித்தது.

ஆகவே துப்பாக்கி ஏந்திய வாலிபர்கள் ஏழைய எளிய மக்கள் 'இரட்சர்களாகத்' தோற்றம் தந்தார்கள். அன்று முதல் இந்தத் துப்பாக்கித் தூக்கிகள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களின் தோழர்கள் ஆனார்கள். ஊக்கமும் உற்சாகமும் பெற்றார்கள்.

இதற்கான முழுப் பொறுப்பும் முன்னாள் அரசு பரிபாலனம் செய்த காங்கிரஸ் கட்சியை யும், தேசிய காங்கிரஸ் கட்சியையுமே சாரும்.

இந்த ஆட்சியாளர்கள்,

ஒருபுறம் கஷ்மீரின் வளங்களை யெல்லாம் எந்தத் தங்குதடையுமின்றி உறிஞ்சினார்கள். மறுபுறம் கஷ்மீர் மக்களை எவ்வளவு மோசமாக



நடத்த முடியுமோ அவ்வளவு மோசமாக நடத்தினார்கள். எந்த அளவுக்கெனில் அந்த மக்கள் ஜனநாயக முறையில் முழுமையாக நம்பிக்கை இழக்கும் அளவிற்கு மோசமாக நடத்தினார்கள். அடிமைகளைவிட அசிங்கமாக நடத்தினார்கள்.

இதனால்தான் அந்த மக்கள் இந்தியாவின் பிடியிலிருந்து தங்களுக்கு முழுமையான சுதந்திரம் வேண்டும் என சிந்திக்கவும் செயல் படவும் ஆரம்பித்தார்கள்.

முந்தைய ஆட்சியாளர்கள் இன்னொரு கொடிய குற்றத்தையும் செய்தார்கள்.

அது, கஷ்மீர் மக்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியை இந்த நாட்டின், இதர பகுதியில் வாழ்ந்திடும் மக்கள் அறிந்திட முடியாமல் செய்திகளை இருட்டடிப்புச் செய்தார்கள். அத் துடன் இன்னொரு பாதகத்தையும் செய்தார்கள்.

தங்களது கொடுமைகளை மற்றவர்கள் கண்களிலிருந்து மறைத்திட கஷ்மீர் பிரச்சி னையை ஜக்மோகன் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றும், அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு '370' சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றும் திசை திருப்பினார்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 370–ஐ எடுத்துவிட்டால் மட்டும் அங்கு என்ன வாழ்ந்து விடப் போகின்றது.

அல்லது,

ஜக்மோகனை விரட்டிவிட்டு பாருக் அப்துல் லாஹ்வை அங்கே மீண்டும் கொண்டு வந்து விட்டால் மட்டுமே கஷ்மீர் மக்கள் எந்த அள விற்கு உறிஞ்சப்பட்டார்கள் என்ற உண்மைதான் வெளியே வந்துவிடப் போகின்றதா?

பாருக் அப்துல்லாஹ்வை கஷ்மீரின் நிர்வா கத்தை – கஷ்மீர் மக்கள் பிரிந்துபோக வேண்டும் என்று எண்ணுகின்ற அளவுக்கு கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்ட அதிகாரியின் கைகளில் அல்லவா ஒப்படைத்திருந்தார்.

ஒரு சராசரி கஷ்மீர் குடிமகன் ஒருபோதும் பாகிஸ்தான் பக்கம் தலை சாய்த்ததில்லை.

நாட்டின் இதர பகுதியில் 'பாகிஸ்தான் – பாகிஸ்தான்' என்ற பிதியைப் பரப்பிட விரும்பு பவர்களே பாகிஸ்தானுக்காக வாதாடுபவர்கள்.

கஷ்மீர் மக்களுகச்குத் தொடர்ந்து உரிமை களை மறுக்க வேண்டும். அவர்களைக் காலா காலமும் உறிஞ்ச வேண்டும். அதேநேரத்தில் நாட்டின் இதர பகுதிகளில் பாகிஸ்தான் என்ற பீதியை பரப்ப வேண்டும் என்ற சதி செய்து சதுரங்கம் ஆடுபவர்களே பட்டவர்த்தனமான பிரிவினவாதிகள்.

கஷ்மீர் பிரச்சினைக்கு உண்மையிலேயே நாம் தீர்வு தேடுவதாக இருந்தால்....

நேர்மையோடும் நெஞ்சுரத்தோடும், கஷ்மீரில் நாம் தொடர்ந்து இழைத்து வந்த அநீதிகளை ஒப்புக்கொள்ள வேண்டும்.

கஷ்மீர் மக்கள் ஜக்மோகனை வேண்டாம் என்று சொன்னால் நாம் அவரை அவர்கள் மீது திணித்திடக் கூடாது, அவரைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.

கஷ்மீர் மக்கள் விரும்பாததை ஒருபோதும் அவர்கள் மீது திணித்திடக் கூடாது.

அதேபோல்,

கஷ்மீர் பிரச்சினையை இந்து – முஸ்லிம் பிரச்சினை எனக்கூறி அதற்கு வகுப்புச் சாயத் தைஷப் பூசி பரிகாரம் தேடிட முயன்றால் அங்கே நாம் தோல்வி ஒன்றைத் தவிர வேறு எதையும் சந்திக்க மாட்டோம்.

இந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினை யைத் தீர்த்திட முனைந்ததுதான் காங்கிரஸ் கட்சியும் தேசிய மாநாட்டுக் கட்சியும் செய்த மிகப்பெரிய தவறாகும்.

கஷ்மீர் விடுதலை அடைய வேண்டும் எனப் போராடி வருகின்ற பலரோடு நான் நேரடியாகப் பேசினேன். அவர்கள் விடுதலை உணர்வால் உந்தப்பட்டுக் களத்திலே நின்றார்கள்.

அவர்களிடம் ராம் ராஜீவ் காந்தியின் கொடுங்கோல் ஆட்சிக்கும், வி.பி.சிங் அவர் களின் ஆட்சிக்கும் இடையேயுள்ள வேற்றுமை களைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பீகார், ஒரிசா இன்னும் மலையோரப்



பகுதிகள் இங்கெல்லாம் இழைக்கப்பட்ட அதே அநீதிகள்தாம் கஷ்மீரிலும் – துர்பாக்கியமாக தொரு சூழ்நிலையில் – திணிக்கப்பட்டு விட்டன என்பதை அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும்.

இந்தியத் திருநாட்டின் குடிமக்களாகிய நாமனைவரும் இந்த நாட்டின் முன்னேற்றத்தில் எள்ளளவும் அக்கறை இல்லாத ஆட்சியாளர் களின் அடிமைகளாக இருந்துவிட்டோம் என்பதை கஷ்மீர் வாழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

சென்றுபோன அந்த ஆட்சியாளர்களெல் லாம் இந்த நாட்டின் முன்னேற்றத்தை விட இந்த நாட்டைச் சுரண்டி வேற்று நாடுகளில் தங்கள் பெயரில் குவிப்பதையல்லவா ஒரே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

கஷ்மீரில் மட்டுமல்லாமல் நாமெல்லோரும் முன்னேற்றத்தின் பாதையில் ஒட்டு மொத்தமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை கஷ்மீர் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

கஷ்மீரின் நல்வாழ்வுக்கு நாமனைவரும் அமர்ந்து திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். தீட்டப்படும் திட்டங்களை உடனேயே செயல்படுத்தியாக வேண்டும்.

இதனை நாம் தாமதப்படுத்தினால் அந்த மக்களிடம் இன்னும் அதிகமாக தவறான எண்ணங்கள் வேரூன்றும்.

கடுமையான நடவடிக்கைகளின் மூலம் நாம் அந்த மக்களை வெற்றி கொண்டிட இயலாது. அந்த மக்களின் உள்ளங்களை நாம் அன்பால் வென்றிட வேண்டும்.

வறுமையும் வேலை இல்லாத் திண்டாட்ட மும் ஒரு மாநிலத்தில் கோரத்தாண்டவம் ஆடும்போது அரசு அங்கே இருப்பவர்களை உறிஞ்சிக் கொண்டிருந்தால் கஷ்மீரில் அல்ல, எந்த இடமாக இருந்தாலும் இன்று கஷ்மீரில் நடப்பவை தவறாமல் நடக்கும்.

கஷ்மீர் குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் எழுந்த விவாதங்களில் கஷ்மீர் மக்களின் பிரச் சினைகள் எந்த அளவிற்கு விவாதிக்கப்பட்டன என்பதை கஷ்மீர் மக்கள் நன்றாக அறிவார்கள். கஷ்மீர் பத்திரிகைகளை வைத்துப் பார்த்திடும் போது, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அத்தனை விவாதங்களும் கஷ்மீர் பிரச்சினை யை மேலும் சிக்கலாக்கி இருக்கின்றன என்றே தெரிய வருகின்றன.

தேசிய மாநாட்டுக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கஷ்மீரின் வளர்ச்சியை விவாதிப்பதற் குப் பதிலாக கஷ்மீர் பிரச்சினை ஜக்மோகன் மற்றும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 370 ஆகியவை பற்றியதுதான் என்றே விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் காலம் கைவிட்டுப் போகவில்லை என்பதை எல்லோரும் உணர்ந்தால் நல்லது நடக்கும்.

**தமிழில் – குலாம் முகம்மது**
Courtesy : Illustrated Weekly

# கொரோனாவில் மீண்டவர்களின் வெற்றிக் கதை



அது ஒரு முதியோர் இல்லம், அங்கு இருக்கும் 42 பேரும் சர்க்கரை நோய், இதய நோய், சிறு நீரக பாதிப்பு என்று ஏதோ ஒரு பிரச்சினை இருப்பவர்கள், 'இவர்களைக் கொரோனா தொற்றினால் ஆபத்து' என டாக்டர்கள் சொல்லும் உடல் நலப் பிரச்சினைகள் பலவும் அவர்களுக்கு இருக்கின்றன. கொரோனா வும் அங்கு வந்தது. ஆனால், வெற்றிகரமாக எந்த பாதிப்பும் இல்லாமல் மீண்டிருக்கிறார்கள் அவர்கள்,

கொரோனாவை ஏதோ உயிர்க்கொல்லி நோய் போலவே நினைத்து பயம் கொள்கிறார்கள் பலர், அதிலிருந்து மீள முடியும் என்ற நம்பிக்கை செய்தியை நாடு முழுக்க பரப்புகிறார்கள் இந்த முதியோர்கள்,

சென்னையில் இருக்கிறது அந்த முதியோர் இல்லம், பலரும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற வர்கள். பிள்ளைகள் வெளி நாடுகளில் இருப்பதால், முதியோர் இல்லத்தில் வசிக்கிறார்கள்,

இங்கு வசித்த 78 வயது முதியவர் ஒருவரை கொரோனா தாக்கியது, ஒரு தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். ஒரே வாரத்தில் அவர் நலமடைந்தார், இதைத் தொடர்ந்து. இல்லதத்தில் இருக்கும் 42 பேருக்கும் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இவர்களில் இருவர் 90 வயதுக்கு மேற்பட்டவர்கள். இருவர் 80 வயதைத் தாண்டியவர்கள். நான்கு பேர் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

அனைவருக்கும் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டு, எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் பரிசோதனைகள் செய்யப்பட்டன. 'அனைவரும் முதியோர் இல்லத்தில் தனிமைப் படுத்திக் கொண்டு சிகிச்சைப் பெறலாம்.' என டாக்டர்கள் பரிந்தரை செய்தனர். எல்லோருமா தனித்தனி அறையில் வசிப்பவர்கள் என்பதால், தனிமைப்படுத்துதல் சுலபமாக இருந்தது.

சத்தான உணவுகளும், மருந்துகளும் 15 நாட்கள் தொடர்ந்து தரப்பட்டன. மாநகராட்சி அதிகாரிகள் தினமும் வந்து சுத்தி கரிப்பு பணிகளைச் செய்தார்கள். முதியோர் அனைவரும் அறை யை விட்டு வெளியில் வரவில்லை. முகக் கவசம் அணிந்தபடி இருந்தனர். விளைவு... அனைவரும் குணமடைந்து விட்டனர்.

"ஆரம்பத்தில் எங்களுக்கு பயமாக இருந்தது. டாக்டர் எங்களுக்கு நம்பிக்கை தந்தனர். தனியே இருந்தாலும். மனதை உற்சாகமாக வைத்துக் கொண்டோம். சத்தாக சாப்பிட்டோம். மருந்துகளை தவறாமல் எடுத்துக் கொண்டோம். நாங்கள் நலம் பெற இதுவே காரணம்." என்கிறார்கள் இவர்கள். எல்லோரும் இணைந்து டாக்டர்களுக்கும் மாநகராட்சி அதிகாரிகளுக்கும் நன்றி சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இல்லம் பற்றி டாக்டர்கள் சொல்லும் ஒரு தகவல் எல்லோருக்குமானது. "சமூக இடைவெளி. முகக் கவசம்.

சிகிச்சை. ஆரோக்கிய உணவு என்று நாங்கள் சொல்லும் அறிவுரைகளை முதியோர்கள் முறையாக பின்பற்றுகிறார்கள். இளம் வயதினர் பலரும் கேட்பதில்லை. இந்த விஷயத்திலாவது அவர்கள் முதியோரைப் பின்பற்ற வேண்டும்'' என்பதே அந்த செய்தி.

## மூச்சுப் பயிற்சியே கொரோனாவுக்கு தீர்வு!



மருத்துவத்துக்காக நோபல் பரிசுபெற்ற லூயிஸ் ஜே.இக்னோரோ, ''ஆழ்ந்த சுவாசப் பயிற்சியே கொரோனாவிற்கு தீர்வு'' என்று கூறியுள்ளார். ''ஆழ்ந்து சுவாசிக்கும்போது, காற்றில் உள்ள நைட்ரிக் ஆக்சைடு நமது நுரை யீரலுக்கு செல்கிறது. இது கொரோனா வைரஸை செயலிழக்கச் செய்து வெளியேற்றுகிறது. கொரோனா வைரஸ் நுரையீரலைத்தான் தாக்கு கிறது. ஆழ்ந்து சுாவசித்தால், அந்த வைரஸை அழிக்கும் வேலையை நமது உடலே செய்து விடுகிறது'' என்கிறார் இந்த மருத்துவ மேதை.

# நெருங்கவிடாமல் கொரோனாவைத் தடுப்போம்!

**பத்மஸ்ரீ டாக்டர் வ.செ.நடராசன்** (முதியோர் நல மருத்துவர்)

கொரோனா நோய் ஆயிரக்கணக்கான உயிர்களை பலி வாங்கி, உலகத்தையே புரட்டிப் போட்டு வருகிறது. இதனால் முதியவர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். 'எத்தனை பேர் குணமடைந்தார்கள்'என்று கேட்பதை விட, 'எத்தனைபேர் இறந்தார்கள்' என்றுதான் முதியவர்கள் அதிகம் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார்கள். தமிழகத்தில் இந்நோய்க்கு இற ப்பு விகிதம் மிகவும் குறைவே. அதாவது, ஒரு சதவிகிதத்திற்கும் குறைவுதான். ஆகையால் அச்சம் வேண்டாம்.

கொரோனா பெரும்பாலும் முதியோர் களையும், வேறு பிரச்சனைகள் உள்ள நோயாளி களையுமே அதிகம் பாதிக்கிறது. இந்த சூழலிலும் நம்பிக்கை ஏற்படுத்துகிறார்கள் சில முதியோர்கள். **ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 113 வயது மூதாட்டி மரியா பிரான்யஸ், கொரோனா விலிருந்து முழுமையாக குணமடைந்தார்.** ஆரோக்கியமான உணவு மற்றும் முறையான சிகிச்சை பெற்று அவர் தேறிவிட்டார். உலகி லேயே மிக அதிக வயது கொரோனா நோயாளி இவர்தான். ஆனால், முழுமையாக குணமடைந் திருக்கிறார்.

எனவே, நம்பிக்கையுடன் இந்த நோயை அணுகுவோம். இந்நோயைத் தடுக்கவோ, நேரடி யாக குணப்படுத்தவோ மருந்து கிடையாது. ஆனால், சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

குறைந்தது ஒன்றிரண்டு நோய்களாவது முதியவர்களுக்கு இருக்கும். இந்நிலையில் நான்கு மாதங்களாக வீட்டிலேயே அடைந்து கிடக்கிறார்கள். நோய் குறித்த பயம் அதிகமாகி இருந்தாலும், சில நன்மைகளும் நடந்துள்ளன. உதாரணமாக, இச்சமயத்தில் மாரடைப்பு நோய் குறைந்து விட்டதாக செய்தி வந்துள்ளது. குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட்டதால்

மன அழுத்தம் வரவில்லை. சூழல் மாசு குறைந்ததால் பிற பாதிப்புகளும் இல்லை.

❖ முதியவர்கள் இந்த நாட்களில், நோய்களுக்கான மருந்துகளைத் தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் குடும்ப மருத்துவரின் ஆலோசனையை தொலைபேசி மூலம் பெறலாம்.

❖ சில ரத்தப் பரிசோதனை மையங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதனை செய்கிறார்கள். நீரிழிவு பிரச்சினை உள்ளவர்கள். இவர்களின் உதவியைப் பெறலாம்.

❖ வெளி உணவுகள், ஃபிரிட்ஜில் வைத்த உணவுகள். பழைய உணவுகளைத் தவிர்க்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகளை காப்பிடவும்.

❖ முதுமையின் காரணமாக தாக உணர்ச்சி சிறிது குறைந்தே இருக்கும். இருந்தாலும், ஒரு நாளைக்கு குறைந்தது 2 லிட்டர் தண்ணீராவது மிதமான சூட்டில் பருக வேண்டும். இதயநோய் மற்றும் சிறுநீரக நோய் உள்ளவர்கள். மருத்துவரின் ஆலோசனைப்படி தண்ணீர் பருக வேண்டும்.

❖ வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும்போது பக்கவாதம், உதறுவாதம், மூட்டு நோய், உடற்பருமன், நீரிழிவு போன்ற நோய்களின் தன்மை தீவிரமடையும். இதைத் தவிர்க்க உடற்பயிற்சி மிகவும் அவசியம். வீட்டிற்குள்ளேயே யோகா, பிராணாயாமம், மனதை ஒருமைப் படுத்தும் பயிற்சி போன்றவற்றைச் செய்யலாம். தேவைப்பட்டால் இயன்முறை சிகிச்சை நிபுணரை வீட்டிற்கே அழைத்து அப்பயிற்சியை மேற்கொள்ளலாம். காலையிலும் மாலையிலும் 30 நிமிடங்கள் வீட்டின் உட்புறம் அல்லது மாடியில் நடைபயிற்சி செய்யலாம்.

தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் அரை மணிநேரம் உடலில் வெயில் படுமாறு நடக்க வேண்டும். தோல் சற்று கருமை நிறம் இருப்பவர்கள், மேலும் 10 நிமிடம் வெயிலில் இருப்பது அவசியம். இதன்மூலம் கிடைக்கும் வைட்டமின் டி, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

முதியவர்கள் மீது குடும்பத்தினர் உண்மையான அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம். வீட்டில் உள்ள இளைஞர்கள், அதை தாராளமாகக் கொடுக்க முன் வாருங்கள்.

இந்த வழிமறைகளோடு சமூக இடைவெளி, முகக் கவசம் அணிவது, கைகளை சோப்பு போட்டு அடிக்கடி கழுவுவது போன்றவற்றைக் கடைப்பிடித்தால், கொரோனா நெருங்காது.

*– நன்றி : முதுமை எனும் பூங்காற்று*




# சவூதி அரசு

# புனித பிம்பம் உடைகிறது..!

சவூதியில் முஸ்லிம்கள் புனித இடங்களாக கருதக்கூடிய மக்காவும், மதீனாவும் இருப்பதால் தன்னை எப்போதும் ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கான தலைமை என்பதாக காட்டிக்கொள்கிறது சவூதி அரசு, அதே நேரத்தில் உலக முஸ்லிம்களின் நன்மைக்காக எதுவும் செய்யாமல் முஸ்லிம்களின் எதிரிகளிடம் கைக்கோர்த்துக் கொண்டு தன் லாபத்திற்காக பல்வேறு சதிச் செயல்களில் இறங்கியது சவூதி. தற்போது சவூதி கட்டமைத்த புனித பிம்பம் இஸ்ரேலுடனான தன் உறவை பகிரங்கப்படுத்தியதிலிருந்து சரிய தொடங்கியிருக்கிறது.

## பெய்ரூட் வெடிப்பும் சவூதியின் இஸ்ரேல் உறவும்

இஸ்ரேல் உடன் எப்போதும் அரபு நாடுகள் நேரடியான உறவை ஏற்படுத்திக்கொள்ள தயங்கும், ஆனால், அந்த சூழல் தற்போது மாறியிருக்கிறது. தொடர்ச்சியாக பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து முஸ்லிம்கள் புனித பள்ளியாக கருதும் பைத்துன் முகத்தஸ் பகுதியை ஆக்கிரமித்து அமைந்திருக்கும் இஸ்ரேலுடன் தாங்கள் நல்லுறவை பேண விரும்புவதாகவும், அதனுடன் வியாபார ஒப்பந்தங்கள் போடுவதை விரும்புவதாகவும் ஒவ்வொரு அரபு நாடாக தெரிவித்து வருகிறது.

ஆகஸ்ட் 4ம் தேதி லெபனானில் உள்ள பெய்ரூட்டில் பெரிய வெடிவிபத்து ஏற்பட்டது, இதில் 192 பேர் பலியானார்கள். ஆனால் அதுவொரு திட்டமிடப்பட்ட வெடிகுண்டு தாக்குதல் அதன் பின்னால் இஸ்ரேல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டு பெருமளவு வைக்கப்பட்டது. ஆனால், அது ஊடக வெளிச்சம் பெறாமல் மறைக்கப்பட்டது. காரணம், லெபனானின் கடந்த கால வரலாற்றில் இஸ்ரேலின் தாக்குதல் பெரியளவு இருந்திருக்கிறது.

பெய்ரூட் தாக்குதல் வெடிகுண்டு தாக்குதல் என்று தான் அமெரிக்க அதிபர் ஊடகங்களிடம் தெரிவித்தார். ஆனாலும், இதனை மழுப்பலாக பேசி விட்டு நகர்ந்து விட்டார். இதனை அமெரிக்க ஊடகங்கள் பெரிது படுத்தியது. அதிபர் அலுவலகம் ட்ரம்ப் கூறியது இராணுவ அதிகாரிகள் தெரிவித்த தகவல் மட்டும் தான் என்று கூறி இதனை முடித்தனர். இப்படி பெய்ரூட் குண்டுவெடிப்புக்கு பின்னால் பெரிய சதித்திட்டம் இருக்கிறது. அதனை மற்றொரு கட்டுரையில் விரிவாக எழுதுவோம்.



பெய்ரூட் தாக்குதல் வெறும் லெபனானோடு மட்டும் முடிந்திடவில்லை. அது ஒட்டுமொத்த அரபுலக அரசியலையும் மாற்றும் செயலாக மாறியது, பெய்ரூட் குண்டுவெடிப்பிற்கு பிறகு ஒவ்வொரு அரபு நாடுகளும் இஸ்ரேலுடன் தாங்கள் நல்லுறவை விரும்புகிறோம் என்று ஒப்பந்தங்கள் போட்டுக்கொள்ள தொடங்கின.

இதனை முதன் முதலாக தொடங்கி வைத்தது (UAE) என்று சொல்லக்கூடிய ஐக்கிய அமீரகம் தான். இதனை அமெரிக்கா முன்னின்று செய்தது. தாங்கள் இஸ்ரேலுடன் நல்லுறவை விரும்புவதாக ஆகஸ்ட் 14ம் தேதி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

இதனையடுத்து செப்.10ம் தேதி பஹ்ரைன் பாலஸ்தீனிய அமைதிக்கு தீர்வு இஸ்ரேலுடன் நல்லுறவு ஒப்பந்தம் மேற்கொள்வது தான் என்ற போர்வையில் நல்லுறவு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இஸ்ரேலுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ள முயல்வதை பாகிஸ்தான் அரசு எதிர்த் தது. இது தங்களின் அரசியலுக்கு எதிரானது என்றும் கருதியது, உடனே பாகிஸ்தான் அரசை பணியவைக்க சவூதி அரசு பல்வேறு செயல்களை செய்தது. இதன் தொடக்கமாக பாகிஸ்தானுக்கு தான் அளித்துள்ள கடனுதவி திரும்ப கொடுக்கு மாறு அழுத்தம் கொடுத்தது சவூதி அரசு, இதை தொடர்ந்து எண்ணெய் வியாபாரத்தை பாகிஸ் தானுடன் நிறுத்தி வைப்பதாகவும் பாகிஸ்தானி யர்களை தன் நாட்டில் இருந்து வெளியேற்று வதாகவும் கூறியது.

கோவிட் நோயை காரணம் காட்டி பாகிஸ் தானுக்கான விமான சேவையை ரத்து செய்தது. ஆனால், அந்த நேரத்தில் 25 நாடுகளுக்கு சவூதியிலிருந்து விமானம் சென்று கொண்டு தான் இருந்தது. இறுதியில் பாகிஸ்தான் தனது இக்கட்டான சூழலை சரிசெய்து கொள்ள சீனா விடம் கூட்டு சேர்ந்தது. சவூதிக்கு இணங்க மறுத்து விட்டது.

இதுபோல் சவூதி இஸ்ரேலை முஸ்லிம் நாடுகள் அங்கீகரிக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இதற்காக இஸ்ரேலுடன் பல ஆண்டுகாலமாக கள்ள உறவு வைத்து வருகிறது சவூதி.

இஸ்ரேலின் மொபைல் போன்களை வேவு பார்க்கும் தொழிற்நுட்பத்தை சவூதி அரசு பயன் படுத்திக்கொண்டதைஇஸ்ரேலின்பத்திரிகைகள் வெளிக்கொண்டு வந்தன. தன் நாட்டு மக்களை கண்காணிக்க இஸ்ரேலின் உதவியை சவூதி பெற்று வந்திருக்கிறது.

இந்தியாவிலும் பத்திரிக்கையாளர்கள், சமூக போராளிகளை கண்காணிக்க இஸ்ரேலின் வேவு பார்க்கும் தொழிற்நுட்ப செயலிகள் பயன்படுத் தப்பட்டதை india today செய்தியாக வெளியிட் டிருந்தது.

இதனை தொடர்ந்து தற்போது UAE-பஹ்ரைன் – இஸ்ரேல் என மூன்று நாடுகளுக்கு இடையே போடப்பட்டிருக்கும் ஒப்பந்தம் இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் சிக்கித்தவிக்கும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரானது. அதனால் பெரும் ஆபத்து பாலஸ்தீனத்துக்கு அமையும் என ஈரான், துருக்கி, கத்தார் போன்ற முஸ்லி ம்நாடுகள் குறிப்பிட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தம் முஸ்லிம்களின் புனித பள்ளியாக கருதப்படும் அல் அக்ஸா மசூதியை இழப்பதற்கு கூட வழிவகுக்கலாம் என துருக்கி அதிபர் எர்துகான் குறிப்பிட்டிருக்கிறார்.

## சவூதியின் இறங்குமுகம்

உலகில் எண்ணெய் வளம் அதிகமாக கொண்டிருக்கும் இரண்டாவது நாடு சவூதி அரேபியா. ஆனால், இன்று எண்ணெய் வியாபாரத்தில் பெரும் சரிவை சந்தித்திருக்கிறது. சவூதியின் எதிர்காலம் முழுக்க சுற்றுலா துறையில் தான் இருக்கிறது என்பது தான் பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடக்கூடியது.

அதிலும் கடைசி ஐந்து வருடத்தில் மன்னர் முஹம்மது பின் சல்மான் ஆட்சியின் கீழ் மிக மோசமான சரிவை சவூதி அடைந்து வருகிறது. பொருளாதார ரீதியாக பெரும் சரிவு என்றாலும் முஸ்லிம்களின் தலைமையாக கட்டமைத்திருந்த பிம்பம் பெருமளவு சரிந்திருக்கிறது.

சவூதி அரசின் அதிகாரப்பூர்வ படுகொலை என ஜமால் காசோகி (Jamal Khashoggi) என்ற பத்திரிக்கையாளரின் படுகொலை உலகளவில் பார்க்கப்படுகிறது. இதனை சவூதி அரசு தான் திட்டமிட்டு நிகழ்த்தியது என்று அமெரிக்

காவின் வசம் வலுவான ஆதாரங்கள் இருப்பதாக வெளியிடப்பட்ட நிலையில் அமெரிக்காவிற்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறது சவூதி.

எப்போதும் இல்லாத அளவு பொருளாதார சரிவு, வேலையின்மை, அண்டை நாடான யெமனில் ஐந்து வருடங்களாக போர் என்ற பெயரில் கொலையில் ஈடுபட்டு வருவது, கத்தார், துருக்கி, ஈரான் போன்ற முஸ்லிம்களின் குரலாக இருக்கும் நாடுகளுக்கு எதிராகவும் எகிப்து, ஈராக் போன்று முஸ்லிம்களுக்கு எதிரான ஆட்சியை நிகழ்த்தி வரும் நாடுகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பது மொத்தமாக சவூதி முஸ்லிம்களிடம் இருந்து அந்நியப்படுத்தி நிற்கிறது.

அமெரிக்காவில் தேர்தல் காலம் நெருங்கியிருக்கிறது. இதில் ட்ரம்ப் வெற்றி பெறாத சூழல் நிலவுவதால் சவூதி தனது தற்காத்துக்கொள்ளும் இடமாக இஸ்ரேலை மட்டும்தான் நம்புகிறது, ஆனால், அது சவூதிக்கு மிகப்பெரும் எதிர்வினையாக தான் முடியும் என்று அல்ஜசீரா பத்திரிக்கை குறிப்பிடுகிறது,

## பத்திரிக்கையாளர்கள், சிந்தனையாளர்கள் கைது

சவூதி அரசின் செயலை விமர்சிக்கும், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள், இமாம்கள் என பலரும் சவூதி அரசால் கைது செய்து சிறைப்படுத்தப்படுகின்றனர்.

சமீபத்தில் கூட செப்.19ம் தேதி செய்க் அப்துல்லா பஷ்சர் என்று சொல்லக்கூடிய குர்ஆன் ஓதுவதில் புகழ்பெற்ற இமாமாகவும் பல்கலைக்கழக ஆசிரியராகவும் பணியாற்றியவர் கைது செய்யப்பட்டார்.

இதுபோல் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள் இயல்பான ஒன்றாகி விட்டது. யாரெல்லாம் அரசுக்கு ஆதரவாக கருத்து கூறுகிறார்களோ அவர்கள் மட்டும் தான் சுதந்திரமாக வெளியில் இருக்கிறார்கள்.

இதனால் தான் சமீபத்தில் இஸ்ரேலுடனான நல்லுறவு அவசியம் என்றும் மக்காவின் தலைமை இமாமாக இருக்க கூடிய அல் சுதைசி பேசியது சவூதி தவிர பிற இடங்களில் எல்லாம் சர்ச்சைக்குள்ளானது.

அதே போல்

இணையத்தில் நெட்பிளிக்ஸ் மீடியத்தின் வழியாக ஹசன் மின்ஹாஜ் என்ற பிரபலத்தின் காமெடி நிகழ்ச்சி பெரும் வரவேற்பை பெற்ற ஒன்று. இவர் அரசியலை காமெடி கலந்து பேசக் கூடியவர். அதன் படி சவூதி மன்னர் எப்படி பத்திரிகையாளர் கொலையில் ஈடுபட்டிருக்கிறார் என்பது பற்றி ஒரு நிகழ்ச்சியில் பேசியிருப்பார். இது நெட்பிளிக்ஸ் தளத்தில் கிடைக்கும்.



ஆனால், இதனை சவுதி அரசு தடை செய்திருக்கிறது. இந்த தடைக்கு பகரமாக நெட்பிளிஸ் நிறுவனத்திற்கு ஆபாச காட்சிகள் அடங்கிய “Queer Eye”, “Sex Education” and “Orange is the NewBlack” என தடை செய்யப்பட்டிருந்த படங்களுக்கு விலக்கு அளித்தது.

இதுதான் சவூதி வைத்திருக்கும் தற்போதைய இஸ்லாமிய நிலைப்பாடு.

இன்னும் விரிவாக பிற்காலங்களில் சவூதியின் அரசியல் எப்படி மோசமாக சென்று கொண்டிருக்கிறது என்பதையும் இஸ்ரேலின் தாக்கம் உலக அரசியலில் எப்படி விரிவு பெற்றிருக்கிறது என்பதனையும் பார்ப்போம்.

– அபூ சித்திக்



# பாசிசத்தின் பிடியில் இந்தியா

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தியா பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது, இந்திய குடிமக்கள் அனைவரும் வாழ்ந்திட வக்கற்று வகையற்று திக்கித் திணறி செத்து மடிந்துக் கொண்டிருக்கின்றார்கள்,

“இந்தியா ஹிட்லரின் ஆட்சியின் கீழ் இருக்கின்றது என்பது சர்வதேசப் பத்திரிகை களின் கணிப்பு. இந்த கோரநிலை 2014–ல் தொடங்கியது. இன்னும் கொஞ்ச நாள் தொட ரும். ஆனால் (இன்ஷா அல்லாஹ்) நிச்சயமாக ஓர் முடிவுக்கு வரும் என்பதே வரலாறு. ஆனால் அந்நிலையில் இந்தியா தூர்ந்து போயிருக்கும்.

இத்தாலியில்முசோலினிகொஞ்சநாள்கொடி கட்டி பறந்தான். பின்னர் மக்களே அவனை கொன்று ஊர்வலமாகக் கொண்டு சென்றார்கள்.

ஹிட்லர் எதிர்த்து, எதிர்பட்ட சூழ்நிலை களைத் தாங்கிட முடியாமல் தற்கொலை செய்து கொண்டான்.

இப்படி பாசிசமும், நாசிசமும் அதாவது கொடுங்கோன்மைகள் மக்களைக் கொன்றொ ழித்துக் கொண்டிருந்தபோது அவற்றிற்கு துணை போனவர்கள் யார்? யார்? என்றொரு பட்டியல் பிற்றை நாள் மனித வரலாற்றில் உலக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்தது, உலக மக்களின் ஒட்டுமொத்த பார்வையும் இதிலேயே பதிந்தது.

அப்படி துணை போனவர்கள் இன்றளவும் மக்களால் நிந்திக்கப்படுகின்றார்கள். மனிதர்கள் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கான அடை யாளமாக இந்த மனிதப் பதற்களை எடுத்துக் கொண்டார்கள் உலக மக்கள்.

அன்றைக்குள்ள மனித இனத்தின் எதிரி களைப் பற்றி ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்ட போது, அதில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டவர் கோயாபல்ஸ் என்ற ஹிட்லரின் பிரதான செயலாளர்.

இவர் ஹிட்லர் அநியாயங்களைக் கட்ட விழ்த்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு “ஆமாம் சாமி” போட்டுக் கொண்டிருந்த மாபாதகன். பொய்யையும் பொலையையும் சொல்லி அந்த அநீதிகளை நியாயப்படுத்தியும் கொண்டிருந்தவன். இதனால் பொய்யையும், புனைந்துரையும் சொல்வதை பிழைப்பாகக் கொண்டவர்கள் கோயாபல்ஸ் எனக் கூறும் நிலை இன்று உலகில் நிலவுகின்றது.

இன்றைக்கு இந்தியாவில் நடக்கும் அநீதிகள், அதனால் விழும் பூர்வ குடிகளின் பிணங்கள், இவற்றையெல்லாம் நியாயப்படுத்திடும் கோயாபல்ஸ் வேலையை செய்து கொண்டிருப்ப வர்களின் பட்டியல் ஒன்று தயாராகிக்க கொண் டிருக்கின்றது உலக அளவில்.

இந்திய அளவில்(Caravan) “கேரவன்” ஆங்கில மாதஇதழ் ஒரு விளம்பரத்தை வெளியிட்டு வருகின்றது. அதன் மையப் பொருளை இப்படிக்

சுருக்கிக் கூறலாம்.

ஒரு காலம் வரும் அதில் மக்கள் கேட்பார்கள் ஹிட்லரும் – முசோலினியும் – மோடியும் – அமித்ஷாவும் இணைந்து இந்தியாவை துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தபோது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? அதற்கெதிராக நீங்கள் கனைத்துக்கூட காட்டவில்லையென்றால் நீங்கள் ஒரு பெரும் துரோகத்தை இந்த நாட்டுக்குச் செய்து விட்டீர்கள். அப்போது நீங்கள் இப்போது நடக்கும் அநீதிகளுக்குத் துணை போனால், நீங்கள் இந்த நாட்டின் அழிவுக்கே துணை போய்வீட்டீர்கள். தீராத மகா துரோகத்தைச் செய்து வீட்டீர்கள்.




நிச்சயமாக எதிர்கால தலைமுறை நமது ஊடகங்கள் இந்தத் தருணத்தில் என்ன செய்து கொண்டிருந்தன என வினவும், இந்தக் ஹிட்லரும், முசோலினியும் தந்த காசுகளை வாங்கிக் கொண்டு இவர்களை வழிபட்டீர்களா? இல்லை, எதிர்த்தீர்களா? என வினவும்.

அதேபோல் இந்தியா முழுவதும் பலகோடி ரூபாய் செலவில் பரப்பப்பட்ட வெறுப்புகள் தூவப்பட்ட விஷமங்கள், இவற்றிற்கு தூபம் போட்டீர்களா? எனக் கேட்பார்கள்.

அப்போது பல ஊடகங்கள் தங்கள் தலையைத் தூக்கி நிமிர்ந்து நின்று – ஹிட்லரையும் – முசோலினியையும் எதிர்த்தோம். வந்த கஷ்டங்களையெல்லாம் தாங்கினோம் எனக் கூறும்.

அந்த ஊடகங்களில் NDTV, Caravan, Front Line, Wire : Scroll, Muslim Mirror, The Quint Print எனப் பட்டியல் நீளும் ஆங்கிலத்தில்.

தமிழில் – வைகறை வெளிச்சம், நக்கீரன், விகடன், குங்குமம் போன்ற பத்திரிகைகள் மட்டும் இடம் பெறும்.

இந்த நாட்டை ஒட்டுமொத்தமாக அழிவிலிருந்து காப்பாற்றிட ஒவ்வொரு குடிமக்களும் தங்களால் இயன்றதை யெல்லாம் செய்திட வேண்டிய தருணம் இது. நழுவ விடாதீர்கள்.

ஆளுமைகள்அருந்ததிராய், டீஸ்டாசெட்டல்வாட், கரன் தாப்பூர், ஷர்ஷ்மந்தர், கன்கையா குமார், உமர் ஹாலித், சீதாராம் யெச்சூரி, பிருந்தா கரத் : இந்து என்.ராம், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி A.P. ஷா, பிரஷாந்த் பூஷன், பிரான்ராய் (NDTV) குர்சந்திரதான், சுபா, முட்கல், எஸ்.எம்.முஷ்ரிஃப், சஞ்சீவ்பட், தாஹிர் மஹ்மூத், துஷாந்த் துபே, ஷியாவுஸ் சலாம்

## பாசிசத்திற்கு துணை போனவர்கள்

Times Now. India To-day, ETC பலநூறு ஹிந்தி சேனல்கள், நீதிபதிகள் ரஞ்சன் கோகை, பாப்டி, தீபக் மிஷ்ரா, சதாசிவம்

கோயாபல்ஸ் : துஷார் மேத்தா –

இன்னும் வரும்.

**பட்டியலை முழுமைப்படுத்துவோம்.**
**பாசிசத்தை மாய்ப்போம்...**
**பாரதத்தைக் காப்போம்...**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.